# திருமறைத்தீபம்



BIBLE LAMP
திருமறைத்தீபம்

**Issue No. 2 of 2005**
**ISBN 1173-7255**

இக்காலாண்டுப் பத்திரிகையில் வெளிவரும் பெயர் குறிப்பிடப்படாத ஆக்கங்கள் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்பட்டவை. ஆசிரியரின் எழுத்துமூல அனுமதியின்றி பத்திரிகையின் எப்பகுதியையும் எவ்விதத்திலும் பிரசுரிக்கக் கூடாது.

ஆசிரியர்: ஆர். பாலா
**Editor:** R. Bala
**Publisher:** Sovereign Grace Publications
**Address:** P O Box 62 159
Sylvia Park, Auckland 1006
New Zealand
**Telephone:** 64 9 272 8061
**Fax:** 64 9 272 8032
**e-mail:** blamp@ihug.co.nz
**Web site:** www.biblelamp.org

"கொள்கைகளையும் கோட்பாடுகளையும் புறக்கணித்து, சத்தியத்தை வெளிப்படையாக எடுத்துக் கூறாத ஒரு பத்திரிகையை இலக்கியத் தடங்கல் என்றுதான் கூற வேண்டும்."

சி. எச். ஸ்பர்ஜன்
1834-1892

*இந்து சமுத்திரத்தில் உள்ள பன்னிரெண்டு நாடுகளைக் கோரமாகத் தாக்கி 300,000 பேரை அழித்திருக்கிறது சுனாமி. பாதிக்கப்பட்டவர்களின் மறுவாழ்வுக்கான பணிகள் இந்நாடுகளில் தொடர்ந்து நடந்து வருகின்றன. உலக நாடுகள் உடனடியாக உதவிக்கு வந்து அமைதி இழந்து தவித்துக் கொண்டிருக்கும் பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு உதவிக்கொண்டிருக்கின்றன. இத்தனைக்கும் மத்தியில் நெஞ்சில் ஈரமின்றி நிவாரணப் பணிக்கு அனுப்பப்பட்டு வரும் பணத்தையும் பொருளையும் கொள்ளையடிக்கும் பிணந்தின்னிக் கழுகுகளும் சுற்றிச் சுற்றி வருகின்றன. கடலுக்கு வெகு தூரத்தில் இருக்கும் வீட்டில் வசிக்கும் ஒரு சபைப் போதகர் கடல் தண்ணீரால் தான் பாதிக்கப்பட்டதாகப் பொய் சொல்லி நிவாரணம் பெற்றதை நான் அறிவேன். அழிவுக்கு மத்தியில் பாவம் மனிதனை என்னவெல்லாம் செய்யவைக்கிறது.*

*எல்லாவற்றையும் இழந்து நிற்பவர்களுக்கு எம்மால் செய்ய முடிந்ததை செய்வது அவசியம். அவர்கள் வீட்டில் மறுபடியும் விளக்கேற்றி வைக்க வேண்டியது மனிதாபிமானமுள்ளவர்களுடைய கடமை. அதேவேளை பாவத்தின் கோரத்தினை விளக்கும் ஒரு அடையாளமே சுனாமி என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. வரப்போகிற நியாயத்தீர்ப்பைக் குறிக்கும் ஒரு அடையாளமாகவும் அது இருக்கிறது என்று வேதம் விளக்குகிறது. ஸ்ரீ லங்காவின் அருகம் குடாப் பகுதியில் உள்ள ஒரு கிராமத்தில் சிலர் சுனாமி கடவுளால் அனுப்பப்பட்டதென்று தெரிவித்திருக்கிறார்கள். உல்லாசப் பிரயாணிகளைக் கவருவதற்காக தங்கள் பிரதேசத்தில் உல்லாச விடுதிகளைக்கட்டி சின்னஞ் சிறுவர்களையும், சிறுமியர்களையும் இரகசியமாகப் பல்லாண்டுகாலமாக பாலியல் கொடுமைக்கு உட்படுத்தி வந்த அநியாயத்தைத் தாங்க முடியாமலேயே கடவுள் சுனாமியை அனுப்பியதாகக் கூறியிருந்தார்கள் என்று பத்திரிகையில் வந்திருந்தது. இந்தக் கிராமத்து மக்களில் ஒரு சிலருக்குத் தெரிந்திருந்ததுகூட இன்று பலருக்கு இருட்டாக இருந்து வருகிறது. நீதியின் தேவன் தொடர்ந்து பாவத்தைப் பொறுத்துக் கொண்டிருக்கமாட்டார் என்பதை சுனாமி வெளிப்படுத்தியுள்ளது. சிறுவர்களைப் பாலியல் கொடுமைக்கு உட்படுத்தும் நாடுகளில் முதலிடம் வகிப்பது ஸ்ரீ லங்கா. இன்று அந்தக் கொடுமைகள் நடந்துவந்த உல்லாச ஓட்டல்களில் அநேகமானவை உருத்தெரியாமல் அழிக்கப்பட்டுவிட்டன. பாவம் அதிகரிக்க அதிகரிக்க கடல் கொந்தளிப்பும், நிலநடுக்கங்களும், இயற்கையின் கோரமும் அதிகரிக்கத்தான் செய்யும். இயேசு கிறிஸ்துவை நாடி வந்தால் மட்டுமே எங்கும் எவருக்கும் நித்திய விடுதலை கிட்டும் என்பதை சுனாமியின் மூலம் சிலராவது அறியவந்தால் சரி. - ஆசிரியர்.*

# சுனாமியின் அடையாளம்

இந்தச் செய்தியை மிகவும் பாரத்தோடு எழுதுவதை நான் நோக்க மாகக் கொண்டிருக்கிறேன். பவுல் சொல்லுவதுபோல், இயேசு கிறிஸ்துவின் உருக்கமான அன்போடு நான் உங்கள் எல்லோர் மேலும் எவ்வளவோ வாஞ்சையாயிருக்கிறேன் (பிலிப்பியர் 1:8). டிசம்பர் 26ம் நாள், 2004ல் ஆசிய நாடுகளைத் தாக்கிய சுனாமியின் கோரத் தால் அவதிப்படுகிற, உங்களில் பலருடைய துன்பத்தின் ஆழத்தை நான் முழுவதுமாக உணர்ந்திருக்கிறேன் என்று சொல்ல முடியாது. உங்களில் கருணை காட்டுகின்ற இயேசு கிறிஸ்து உங்களுடைய துன்பங்களுக்கு மத்தி யில் உங்களை அரவணைத்து ஆறுதல் தருகிறார் என்பதை மட்டும் நான் உறுதியாக நம்புகிறேன். "நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவ தாக. நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும் இரக்கங் களின் பிதாவும், சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம்." (2 கொரிந்தியர் 1:3, 4).

சுனாமியினால் நிகழந்துள்ள மாபெரும் அழிவுகளுக்கும், சோகத்திற்கும் மத்தியில் வேதம் போதிக்கும் இந்த அழிவிற்கான காரணத்தை நான் விளக்க விரும்புகிறேன். இந்த உலகத்திற்கான கர்த்தருடைய மாபெரும் திட்டத்தின் அடிப்படையில் சுனாமியைப் பார்க்கிறபோது உங்களுடைய மீட்பின் நாள் நெருங்குகிறது என்ற ஆறுதல் உங்களுக்கு கிட்டும் என்று நம்பிக்கை எனக்குண்டு (லூக்கா 21:28).

அநேகரைப் பாதித்துள்ள இந்த சுனாமிக்கு அர்த்தம் என்ன? என்ற கேள்வியை பலர் எழுப்புகிறார்கள். இது கர்த்தர் அனுப்பியுள்ள அடை யாளமா? என்று கேட்கிறார்கள். மனிதன் மேல் கர்த்தருக்கு அத்தனை கோபமா? என்று வினாவுகிறார்கள். மனிதனுடைய பாவங்களுக்காக கர்த்தர் அவனைத் தண்டிக்கிறாரா? என்று ஆதங்கத்தோடு கேட்கிறார்கள். இந்து மகா சமுத்திரத்தில் சுனாமி எழுந்ததற்கான காரணத்தை ஆராய்கிற போது உலகத்தைப் பற்றி வேதம் போதிக்கின்ற நான்கு உண்மைகளின் அடிப்படையில் அதை ஆராய்வது அவசியம்.

### சுனாமி கர்த்தரின் படைப்போடு சம்பந்தமுடையது

உலகத்தைக் கர்த்தர் படைத்தபோது அதை நல்லதாகவே படைத்தார் (ஆதி 1:31). அப்போது உலகம் பாவத்தையோ, துன்பத்தையோ, மரணத் தையோ அறியாதிருந்தது. கர்த்தர் தன்னுடைய சாயலில் ஆணையும், பெண்ணையும் படைத்து படைப்பை அனுபவிக்கும் பொறுப்பை அவர்க ளுக்கு அளித்தார். தனக்கு மனிதன் கீழ்ப்படிய வேண்டும் என்று விதித்த

*கர்த்தர் அவன் அதில் தவறினால் மரணம் சம்பவிக்கும் என்று கூறியிருந் தார்.*

*கர்த்தர் ஆதியில் உலகத்தைப் படைத்தபோது அங்கே நிலநடுக்கங் களுக்கோ, சுனாமிக்கோ இடமிருக்கவில்லை. நாமின்றிருக்கும் உலகத்தில் இயற்கையின் கோரத்தையும், மரணத்தையும் பார்க்கிறோம். ஆதியில் அப்படி யிருக்கவில்லை. அன்று மனிதன் கர்த்தரோடு பூரணமான ஐக்கியத்தை அனுபவித்து வந்தான். அக்காலத்தில் படைப்பின் அத்தனை அம்சங்களும் ஒற்றுமையுடன் இயங்கி வந்தன. தன்னையே அழித்துக் கொள்ளும் விதத்தில் ஆக்ரோசத்துடன் போரிடும் இயற்கையின் சீற்றத்திற்கும், மரணத்திற்கும் அன்று இடமிருக்கவில்லை. "தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது." (ஆதி 1:31).*

## சுனாமி மனிதனின் வீழ்ச்சியோடு தொடர்புடையது

*மனிதனுடைய கீழ்ப்படியாமையே அவனுடைய வீழ்ச்சிக்கு* (Man's fall in sin) *காரணமாயிற்று. பிசாசின் பேச்சைக் கேட்ட நமது பெற்றோரான ஆதாமும், ஏவாளும் கர்த்தருக்கு எதிராக நடந்து அவருடைய கட்டளையை மீறியதால் கர்த்தரின் தண்டனையை சந்தித்து அதன் காரணமாக உலகத்தில் மரணம் ஏற்பட்டது. "ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரண மும் உலகத்திலே பிரவேசித்தது போலவும், எல்லா மனுஷரும் பாவஞ் செய்தபடியால், மரணம் எல்லோருக்கும் வந்தது போலவும் இதுவுமாயிற்று." (ரோமர் 5:12). ஆதாமின் மூல பாவம் மனிதர்கள் மீது மட்டுமல்லாது கர்த்தர் படைத்த அனைத்தின் மீதும் மரணத்தைக் கொண்டு வந்து அவ னையே அதற்குப் பொறுப்பாளியாக்கியது. அதன் காரணமாக ஆதாம் வழிவந்த அனைவரும் பிறக்கும்போது மரணத்தோடேயே பிறக்கிறார்கள். ஆதியில் ஒற்றுமையோடு செயல்படும் விதமாக கர்த்தர் படைத்த அனைத் தையும் அக்குவேராகப் பிரித்து வைத்திருப்பதே மரணம் என்கிறது வேதம். கர்த்தரை அறியாமல் அவரிடம் இருந்து பிரிந்து இருப்பதே மரணம். ஆதாமின் பாவத்தின் காரணமாக பிறப்பில் இருந்து எல்லா மனிதர்களும் கர்த்தரிடம் இருந்து பிரிந்து அவருக்குக் கீழ்ப்படிய மறுப்பவர்களாகவே இருக்கின்றனர். இந்த உலகத்தில் நாம் மரணத்தையும், சுனாமி போன்ற இயற்கையின் கோரங்களையும் சந்திக்கும்போது மனிதனின் பாவம் உலகத் தில் ஏற்படுத்தியுள்ள அழிவைத் தெளிவாகப் பார்க்க முடிகிறது.*

## சுனாமி மீட்பின் திட்டத்தோடு தொடர்புடையது

*பரிசுத்தமும், பரிபூரண நீதியுமுள்ள கர்த்தர் ஆதாமையும் ஏவாளையும் அவர்கள் செய்த பாவத்திற்காக நித்திய தண்டனைக்குள்ளாக்கி இருந்திருந் தால் அவர் செய்தது நீதியானதாகவே இருந்திருக்கும். அதேவேளை, அவர் இந்த உலகத்தையும் நரகமாக்கி இருந்திருக்கலாம். கர்த்தர் அவ்வாறு செய் திருந்தால் அவரை நீதியற்றவர் என்று நம்மால் சொல்லவே முடியாது. இருந்தபோதும் கர்த்தர் தம்முடைய கிருபையினால் நமது பெற்றோரை அரவணைத்தார். ஆதியாகமம் 3ம் அதிகாரம், கர்த்தர் இந்த உலகத்தைக் காத்த விதத்தை விளக்குகிறது. அவர் மனிதகுலத்திற்கும் சாத்தானுக்கு மிடையில் பிரிவினையை ஏற்படுத்தினார். உலகத்தில் ஒழுங்கு இருப்பதற்*

காக ஆதாமையும், ஏவாளையும் அவர் பழையபடி அவர்களுடைய பொறுப்பைச் செய்யும் நிலைக்கு மாற்றுவித்தார். இறுதியில் உலகம் நித்திய விடுதலையை அடையும்படி அதையும் காப்பாற்றினார். ஆதாமும், ஏவாளும் கேட்கும்படியாக கர்த்தர் தன்னுடைய திட்டத்தை சாத்தானுக்கு அறிவித்தார். சாத்தானை வீழ்த்துமுகமாக அவர் தன்னுடைய ஒரே குமாரனான கிறிஸ்துவை இந்த உலகத்துக்கு அனுப்பி பாவத்தில் வீழ்ந்துபோன மனிதனையும், படைப்பையும் மரணத்தில் இருந்தும், நித்திய பிரிவில் இருந்தும் மீட்கும் திட்டத்தை கொண்டிருந்தார். தனது ஒரே குமாரனான இயேசு கிறிஸ்துவை இந்த உலகத்துக்கு அனுப்பி மனிதர்களைப் பாவத்திலிருந்து விடுவிக்க கல்வாரிச் சிலுவையில் அவரைப் பரிபூரணமாகப் பலியிட்டதன் மூலம் தனது திட்டத்தை நிறைவேற்றினார் என்கிறது வேதம்.

## சுனாமி நித்திய தீர்ப்போடு தொடர்புடையது

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது நிகழப்போகிற நியாயத் தீர்ப்பை சுனாமி அடையாளமாகக் காட்டுகிறது. ஜப்பானின் ஹீரோசிமாவில் போடப்பட்ட அணுக்குண்டைவிடப் பத்தாயிரம் தடவை அதிக வல்லமை கொண்டிருந்த சுனாமி தற்செயலாக நடந்த ஒரு நிகழ்ச்சியல்ல. பாவத்திற்கும், நாம் தொடர்ந்து கர்த்தரை நிராகரித்து செய்து வருகின்ற கொடுமைகளுக்கும் எதிராக அனுப்பப்பட்ட எச்சரிக்கைச் செய்தி அது. இப்படிப்பட்ட இயற்கை அழிவுகள், போர்கள், நிலநடுக்கங்கள் அனைத்தும் வரப்போகிற நியாயத் தீர்ப்பைச் சுட்டிக்காட்டி அதற்கு முன் மனிதர்கள் மனந்திரும்பி இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டுமென்பதை வலியுறுத்துகின்றன (மத்தேயு 24, 25). வரப்போகிற நியாயத் தீர்ப்பு நாளின் தண்டனைக்குத் தப்ப "இதோ சீக்கிரமாய் வருகிறேன்" என்று சொல்லியிருக்கிற இயேசுவை, ஆண்டவரே! என்னை மன்னியும், பாவத்திலிருந்து என்னை மீட்பதற்காக நீர் சிலுவையில் மரித்தீர் என்பதை உணர்கிறேன், உம்மை விசுவாசிக்கிறேன் என்றுகூறி மனப்பூர்வமாக இன்றே விசுவாசித்தால் உங்களுக்கு மீட்பு உண்டு, பரலோகம் உண்டு. உடனடியாக மனந்திரும்பி இயேசு கிறிஸ்துவை விசுவாசியுங்கள்.

### ஐயோ! பாவம்

பஸ்ஸில் அடிபட்டு இறந்த தெருநாயைப்
பார்த்து ஐயோ! பாவம் என்கிறார்கள் . .
தப்பு செய்துவிட்டு தாயிடம் உதைவாங்கும்
தனையனைப் பார்த்தும் ஐயோ! பாவம் என்கிறார்கள் . .
கும்பகோணத்தில் இறந்த குழந்தைகளைப்
பார்த்து ஐயோ! பாவம் என்றார்கள் . .
சுனாமியின் சீற்றத்தில் செத்து மடிந்தவர்களுக்கும்
அதே ஐயோ! பாவந்தான் . .
பாவத்தில் பிறந்து பாவத்தில் உழன்று
பாவத்தை சுமந்து வாழும் இவர்களைப்
பார்க்கப் பரிதாபமாயிருக்கிறது ஐயோ! பாவம் - சுபி.

# திருமண வயதில். . .

கடந்த இதழில் “சீர்திருந்த வேண்டிய தமிழ்ப் பண்பாடு” என்ற தலைப்பில் நமது இனத்தில் சீர்திருந்த வேண்டிய அநேக காரியங்களைக் குறிப்பிட்டு எழுதியிருந்தேன். இந்தப் பகுதியில் திருமண வயதில் இருக்கும் வாலிப விசுவாசிகளுக்கு சில ஆலோசனைகளைச் சொல்லுவது அவசியமென்று கருதுகிறேன். திருமண வயதில் இருப்பவர்கள் முதலில் காதல், கத்திரிக்காய் என்ற சினிமா மாயையில் அகப்பட்டுவிடாமல் இருப்பது அவசியம். ஒருதலைப்பட்சமான சரீர உணர்வுகளுக்கு நம்மினத்தில் பெயர்தான் காதல். அது இந்த உலகத்தில் வாழ்வதற்கு ஒத்து வராது. இதற்காக ஒரு ஆணும், பெண்ணும் திருமண வயதில் ஒருவர் மீது ஒருவர் நியாயமாக வைக்கும் அன்பை நான் நிராகரிக்கவில்லை. ஆனால், வாழ்க்கைக்கு ஒத்து வராத, மனங்கள் பொருந்திவராத ஒருதலைப்பட்சமான உணர்வுகளுக்கு இடம் கொடுக்காதீர்கள் என்றுதான் கூறவருகிறேன்.

திருமண வயதில் இருக்கும் வாலிபர்களை நமது பண்பாட்டிற்கு அடிமையாக்கி, அவர்களுக்கு வயது வந்துவிட்டது என்பதற்காக யாரையோ பார்த்து திருமண பந்தத்தில் இணைத்து வைப்பது நம்மினத்தில் வழக்கம். திருமணத்திற்கு அவர்கள் தயாராக இருக்கிறார்களா? இருவரும் விசுவாசியா? என்பதையெல்லாம் பெற்றோர்கள் கவனிப்பது இல்லை. விசுவாசிகளான ஆண்களும், பெண்களும் பெற்றோர்களுக்கு இணங்கிப்போக வேண்டும் என்பதற்காக அவிசுவாசிகளைத் திருமணம் செய்துகொள்ளுவது நம்மினத்தில் அதிகம். இதைவிடக் கொடுமை இருக்க முடியாது. இது கர்த்தருக்கு செய்யும் துரோகம் என்பதை விசுவாசிகளான வாலிபப் பெண்களும், பையன்களும் நினைத்துப் பார்ப்பதில்லை. பெற்றோர்களுக்கு இணங்கிப் போகாவிட்டால் பெரிய ஆபத்து என்ற ஒரே காரணத்தால் கர்த்தரின் வேதத்தை தூக்கி எறிந்துவிட்டு அவிசுவாசிகளைத் திருமணம் செய்து கொள்ளுகிறார்கள். வேதம் சொல்லுகிறபடி நமது சமுதாயத்தில் வாழ்வது கடினம், மேல்நாட்டில் என்றால் பிரச்சனை இல்லாமல் வாழ்ந்துவிடலாம் என்றெல்லாம் கதைவிடுகிறவர்களும் உண்டு. அப்படியானால் வேத வாழ்க்கை நமது இனத்திற்குப் பொருந்திவராதா? கர்த்தரின் வழி நமது இனத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் வலிமை இல்லாததா? என்றெல்லாம் கேட்காமல் இருக்க முடியவில்லை. சமுதாயத்துக்குப் பயந்து, பிரச்சனைகளை எதிர்நோக்கத் துணிவில்லாமல் இவர்கள் கிறிஸ்துவை அடமானம் வைக்கத் தயாராகி விடுகிறார்கள். சிலுவையைத் தன் தோளில் தூக்கி கிறிஸ்துவை பின்பற்ற முடியாதவர்களுக்கு கிறிஸ்து எதற்கு? கிறிஸ்தவ திருமணம் எதற்கு?

திருமண வயதில் இருக்கும் வாலிபப் பையன்கள் திருமணத்திற்கு தங்களைத் தயார் செய்துகொள்ள வேண்டும். முதலில் வாலிப வயதில் படிக்கிற நேரத்தில் படித்து எதிர்காலத்துக்குப் பயன்தரும் விதத்தில் ஒரு வேலையைத் தேடிக்கொள்ள வேண்டும். இது விசுவாசி செய்கிற உத்தமமான காரியம். வரப்போகிறவளுக்கு உழைத்து உணவூட்ட முடியாதவனுக்கு மனைவி ஒரு

கேடா? அவன் விசுவாசியாக இருந்தாலும் வேலையில்லாதவனாக இருக்கக் கூடாது. திருமண வயது வந்துவிட்டது என்பதற்காக திருமணத்தை நினைத்துப் பார்க்கக்கூடாது. வயது மட்டும் திருமணத்திற்கு ஒருவனைத் தயார் செய்து விடுவதில்லை. வேலையில்லாமலும், இருப்பதற்கு வீடில்லாமலும், மின்சார பில்கட்ட வழியில்லாமலும் திருமணத்தை மட்டும் செய்து என்ன பயன்? வாலிபர்களே! படியுங்கள், முதலில் தகுந்த வேலையைத் தேடிக்கொள்ளுங்கள். அதற்குப் பிறகு திருமணத்தைப் பற்றி ஆர அமர சிந்திக்கலாம்.

திருச்சபை வாழ்க்கையை அறியாதவர்களைத் திருமணம் செய்து கொள்ளுவதும் ஆபத்து. விசுவாசி என்ற பெயரில் இன்றைக்கு திருச்சபை வாழ்க்கையையே அறியாத அநேகர் இருக்கிறார்கள். நல்ல போதனைகள் கிடைக்கும் சபைகளில் இருப்பவர்கள் அத்தகைய சபைகளில் வளர்ந்து வருகிறவர்களைத் திருமணம் செய்துகொள்ளுவதே உத்தமமானது. ஒரே சபையில், சத்தியத்தில் வளர்கிறவர்கள் திருமணம் செய்துகொள்ளுகிறபோது அவர்களுடைய ஆத்மீக வாழ்க்கை சிறக்க வழியுண்டு. அப்படியில்லாதவர்களுடைய குடும்பம் சிறக்க வழியில்லை. திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்பதற்காக எவரையும் திருமணம் செய்துகொள்ளக்கூடாது. ஆத்மீக அறிவிலும், பரிசுத்தத்திலும் வளர்கிறவர்களை பரிசோதித்து திருமணம் செய்துகொள்வது அவசியம். மற்றவர்கள் சொன்னார்கள் என்பதற்காக தலையைக் காட்டிவிடுவதும், தாலியைக் கட்டிவிடுவதும் ஆபத்தில் கொண்டுபோய் விட்டுவிடும். பரிந்துரை செய்தவர்கள் கலியாண சாப்பாட்டோடு வேலை முடிந்தது என்று போய் விடுவார்கள். கஷ்டப்படப் போகிறவர்கள் கட்டிக் கொண்டவர்கள் மட்டுமே. அநாவசியமாக வம்மை நாம் விலைக்கு வாங்கிக் கொள்ளக் கூடாது.

நம்மினத்தில் திருமணம் என்பது வாலிபர்கள் வயதுக்கு வந்தபின் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் செய்துகொள்ள வேண்டிய ஒன்றாக இருக்கிறது. இது பெரும் தவறு. தகுதி இல்லாதவர்கள் திருமணம் செய்து கொள்வது எந்தவிதத்திலும் சரியில்லை. வாலிபர்கள் திருமணத்திற்கான தகுதியை அடையும்வரை பொறுத்திருப்பது நல்லது. திருமணமாகும்வரை வாலிபர்கள் ஆத்மீக வளர்ச்சியிலும், சபைப் பணிகளிலும் ஈடுபடுவது அவர்கள் கர்த்தரில் வளர உதவும். வேலைத்தளத்தில் உழைப்பதோடு, நேரத்தை மீதப்படுத்தி சுவிசேஷப் பணிகளில் சபை மூலம் ஈடுபடுவதும் பயனுள்ளது. திருமணமாகாத வயதில் நம்மால் செய்யக்கூடிய பணிகள் அநேகம். அதை சந்தர்ப்பம் இருக்கும்போது செய்வது அவசியம். வெறுமனே திருமணத்தை மட்டும் நினைத்து நேரத்தைப் போக்காமல் இருக்கும் காலத்தைப் பயன்படுத்தி கர்த்தரை மகிமைப் படுத்துங்கள். அத்தோடு, உங்களைப் பரிசுத்தமாக வைத்திருந்து மனைவியாக வரப்போகிறவளுக்கோ, கணவனாக வரப்போகிறவருக்கோ தகுதியுள்ளவர்களாக இருக்கப் பாருங்கள். திருமணமாகும்வரை தங்களைப் பரிசுத்தமாக வைத்திருக்கத் தெரியாதவர்கள் திருமணத்திற்குப் பிறகு தங்கள் கணவனுக்கோ, மனைவிக்கோ உண்மையுள்ளவர்களாக இருப்பார்கள் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்? ஆரம்பிக்கப் போகிற வாழ்க்கை பரிசுத்தமாக ஆரம்பிக்கப்பட வேண்டியது அவசியம். சரீரத்தையும், மனத்தையும் தூய்மையாக வைத்திருந்து எதிர்கால வாழ்க்கைக்கு உங்களை வேத அடிப்படையில் சிந்தித்து தயார் செய்துகொள்ளுங்கள்.

# சீயோன் மலையும், அண்ணாமலையும்

இந்து மதத்தில் இயேசுவைக் காணப்புறப்பட்டிருக்கும் சிலரைப் பற்றி இந்தப் பத்திரிகையில் நாம் இதற்கு முன்பு எழுதியிருக்கிறோம் (*4/2, 98; 6/3-4, 2000*). தமிழகத்தைச் சேர்ந்த புலவர் தெய்வநாயகம், சாது செல்லப்பா ஆகியோர் இந்து மத வேதங்களுக்கும், சடங்குகளுக்கும் கிறிஸ்தவ விளக்கம் அளித்து இந்து மதத்தவர்கள் தங்கள் மதத்திலிருந்தே சுவிசேஷத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற தவறான போலிப்போதனையை அளித்து வருவதை "இந்து மதத்தில் இயேசுவா?" என்ற நூலிலும் விளக்கி எழுதியிருக்கிறேன். வேத அடிப்படையிலான திருச்சபைகள் பெருமளவுக்கு இல்லாத தமிழினத்தில் வேதத்தின் அதிகாரமும், போதுமான தன்மையும் அனேகருக்கு புலப்படாத நிலையில் 'ஆலையில்லாத ஊரில் இலுப்பைப்பூ சக்கரை' என்ற மொழிக்கிணங்க இத்தகைய போலிப்போதனைகள் கேட்பாரின்றி தலைவிரித்தாடுவது இயற்கையே.

சமீபத்தில் நான் தமிழகத்தில் கன்னியாகுமாரி மாவட்டத்திற்குப் போயிருந்த போது அங்கே 'திருவள்ளுவர் திருச்சபை' என்ற பெயரில் ஒரு திருச்சபை உருவாகியிருப்பதாக அறிந்தேன். இது புலவர் தெய்வநாயகத்தின் போதனையில் மயங்கி உருவாயிருக்கின்ற ஒரு போலிச்சபை. திருவள்ளுவர் தமிழினத்திற்கே சொந்தமான ஒரு புலவராகவும், சிறந்த கவிஞராகவும் இருந்தபோதும் இல்லாததைச் சொல்லி அவரைக் கிறிஸ்தவத்தோடு தொடர்புபடுத்துவது கிறிஸ்துவுக்கே அடுக்காது. நெஞ்சில் ஈரமின்றி இன்று இதைச் சிலர் செய்து வருகிறார்கள்.

புலவர் தெய்வநாயகத்தின் போலித்தனமான விளக்கங்களுக்கு வக்காலத்து வாங்கி சென்னையைச் சேர்ந்த பொன் இலாசரசு என்பவர் "ரெட்டுளிப்" என்ற தனது சிறு பத்திரிகையில் எழுதிவந்துள்ளதை நாம் முன்பே இப்பத்திரிகையில் சுட்டிக் காட்டியுள்ளோம் (*மலர் 7 இதழ் 3, 2001*). கல்வின் ஆர்வலராக தம்மை இனங்காட்டிக்கொள்ளும் இவர் சீர்திருத்தக் கிறிஸ்தவத்திற்கும், கல்வினுக்கும் சம்பந்தமில்லாத இந்து மதத்தில் இயேசுவைக் காணும் முயற்சியில் இறங்கியிருப்பது அதிசயமே. இவர் பாப்திஸ்து சபையைச் சேர்ந்தவராக இருப்பது இன்னுமொரு அதிசயம். தொடர்ந்தும் இந்து மதப்போதனைகளுக்கு கிறிஸ்தவ விளக்கம் கொடுத்துவரும் இவரை அச்சபைகள் பிரசங்கிக்கவும், போதிக்கவும் அனுமதித்து வருவது வருந்தத்தக்கது. வேத அதிகாரத்தைப் புறக்கணித்து, பாரம்பரியத்துக்கும், சம்பிரதாயங்களுக்கும் அடிமைப்பட்டு முகத்தாட்சிணியம் பார்த்து வரும் சபைகள் எந்தளவுக்கு சத்தியத்துக்குப் புறம்பாக நடப்பவர்கள் மீது சபை ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதைக்கூட தள்ளிவைத்துவிட்டு இயேசுவின் பெயரில் காலந்தள்ளிவிட முடியும் என்பதை இச்சம்பவம் தெளிவுபடுத்துகின்றது.

பொன் இலாசரசு சமீபத்தில் ஒரு துண்டுப்பிரசுரத்தை வெளியிட்டு அதில் புலவர் தெய்வநாயகத்தின் போதனையை ஆதரித்தும், திருக்கார்த்திகைக்கு கிறிஸ்தவ விளக்கம் கொடுத்தும் எழுதியிருக்கிறார். 'சீயோன் மலை" என்ற

தலைப்பில் ஒரு பக்கத்திலும், "அண்ணாமலை" என்ற தலைப்பில் இன்னொரு பக்கத்திலும் இவரது விளக்கங்கள் காணப்படுகின்றன.

இதில் அண்ணாமலை என்ற தலைப்பின் அடிப்படையில் எழுதப்பட்டிருந்த பகுதியில் அருணாசலம் என்றழைக்கப்படும் திருவண்ணாமலையில் கார்த்திகை மாதத்தில் நடத்தப்படும் பண்டிகைக்கு கிறிஸ்தவ விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. அதாவது, திருவண்ணாமலை என்பதற்கு "பரிசுத்த சூரிய மலை" என்பது பொருளாம். கடவுளைப் பேரொளியாகத் தரிசிப்பதே இப்பண்டிகையின் நோக்கமாம். இதற்காக பெருந்தீபத்தை மலையில் ஏற்றி கடவுளைக் கார்த்திகைத் தீபமாக வணங்குகிறார்களாம். அதுமட்டுமல்லாமல் இன்னொரு நாளில் வீடுகளுக்குப் பக்கத்தில் உள்ள குப்பைமேடுகளில் விளக்கேற்றி குப்பைக் கார்த்திகையையும் கொண்டாடுகிறார்களாம். இந்தக் குப்பைக் கார்த்திகையில் மறைஞான விளக்கத்தைப் பார்க்கிறார் அருட்கலைஞர். இவர் சொல்லுகிறார், 'குப்பை' என்று சற்று வித்தியாசமாகக் கூறினாலும் அநேகர் அகல் விளக்குகளை பொதுக் கழிவறைகளில் வரிசையாக வைப்பதுண்டு. இதென்ன? பரிசுத்த மலையின் ஒளி நாற்றத்தின் மேல் வருவதற்குப் பொருளென்ன?" என்று கேட்கும் பொன் இலாசரசு அதற்கு சைவசித்தாந்தத்தில் இருந்து ஒரு பாடலை உதாரணங்காட்டி பின்வருமாறு விளக்கந் தருகிறார். "சைவ சித்தாந்தம் பாவத்தை மும்மலமாக விளக்கும். ஆணவ மலம், கன்மமலம், மாயைமலம் என்னும் மும்மலங்களாக கூறுவதோடு 'சகசமல மென்றும்' தீர்க்கும். திராவிடர்கள் பாவத்தை நாற்றமான மலமாகத் தீர்த்தனர்" என்கிறார். அத்தோடு நிறுத்தாமல், "அவன் (ஆதாம்) அவள் (ஏவாள்) அது (உலகம்) எனப்படும் மனிதர்களும் மற்ற உயிர்களும் உலகமும் கடவுளால் படைக்கப்பட்ட நிலையிலிருந்து ஒடுங்கி பாவ மலத்துக்குள்ளே வீழ்ந்தது" என்கிற புலவர் தெய்வநாயகத்தின் விளக்கத்தையும் தம்முடைய திராவிட-கிறிஸ்தவ திரிபுபடுத்தலுக்கு ஆதாரமாகக் காட்டுகிறார். இலாசரசுவின் இந்தவிளக்கமெல்லாம் இப்படிப் போய் முடிகிறது - "பண்டிகையின் பொருள் பரிசுத்த மலையின் பேரொளி யானது மலமாகிய நாற்றத்தில், இருளில் கிடக்கின்ற மனுமக்கள் மேல் வந்து மலம் கழுவி, மீட்டெடுத்து இருளிலிருந்து விடுதலை செய்து அவர்களை தன்னைப் போல ஒளிரச் செய்கிறது." இதற்கு அவர் தரும் ஆதார வேதவசனம், "அவர் தீபம் என் தலைமேல் பிரகாசித்தது." யோபு *29:3*. எப்படி இருக்கிறது கதை? மொட்டைத்தலைக்கும், முழங்காலுக்கும் எப்படி முடிச்சுப் போடுகிறார் இலாசரசு பார்த்தீர்களா? யோபுவில் கூறப்படுகிற வசனத்துக்கும் அண்ணாமலை தீபத்துக்கும் இப்படி இல்லாததொரு தொடர்பை ஏற்படுத்துகிறார். இப்படி முடிச்சுப்போடுகிற வேலை நம்மினத்தில் சகஜம் என்பது நமக்குத் தெரியாதா என்ன? இந்த இருபத்தியோராம் நூற்றாண்டில் இதையெல்லாம் அழகாகக் கேட்டு நம்புகிற கூட்டத்தை நம்மினத்தில்தான் பார்க்கலாம்.

இனி "சீயோன் மலை" என்ற தலைப்பில் அடுத்த பக்கத்தில் பொன் இலாசரசு எழுதியிருப்பதைப் பார்ப்போம். இங்கே ஒரு பெரிய உண்மையைக் கண்டுபிடித்து எழுதியிருக்கிறார் சென்னைக்காரர். அதாவது, "கிறிஸ்தவ அன்பர்கள் கடவுளின் உறைவிடமாகக் காணும் சீயோன் மலையின் பொருளும் 'சூரிய மலை' என்பதே" என்று அட்டகாசமாக எழுதியிருக்கிறார். சீயோன் மலைக்கு அவர் இப்படி ஒரு பொருளைக் காட்டுவதற்குக் காரணமென்ன? அதைக் கண்டுபிடிப்பதற்கு நமக்கு கல்லூரி டிகிரி தேவையில்லை. இந்து/திராவிடப் போதனைகளுக்கு கிறிஸ்தவ

விளக்கம் கொடுப்பதற்கு அது அவசியமானதால்தான் இலாசரசு இப்படி ஒரு பொருளை முன்வைக்கிறார். சீயோன் மலைக்கு அப்படியொரு பொருள் இருக்கிறதா என்பதை பின்பு பார்ப்போம். இப்போது தொடர்ந்து சென்னைக்காரரின் மணலில் கயிறு திரிக்கும் பணியைப் பார்ப்போம். அவர் சொல்லுகிறார், "பரலோகில் உள்ள இந்த மலையாகிய பேரொளி மனிதர்களுக்கு ஒளியாக திகழ்கிறது. அவனாகிய ஆதாமும், அவளாகிய ஏவாளும், அதுவாகிய உலகமும் பாவத்தின் பலனாக ஒடுங்கி இருளின் நாற்றத்தில் வாழ்ந்தபோது சாவுக்குள் ளானது." இதற்கு என்ன வேத ஆதாரம்? எடுத்து வீசுகிறார் வசனத்தை சென்னைக்காரர் - "அருவருப்பும், குப்பையுமானோம்." புலம்பல் 3:45. 'குப்பை' என்ற வார்த்தை இங்கிருப்பதைக் கவனிக்கத் தவறாதீர்கள். குப்பைக் கார்த்திகைக்கு கிறிஸ்தவ விளக்கம் கொடுக்க சென்னைக்காரருக்கு இது உதவப் போகிறது. தொடர்ந்து அவர் சொல்லுகிறார், "ஒளியாகிய கடவுள் மனிதர்களை மீட்க சீயோன் மலையாகிய பரலோகைவிட்டு பாவநாற்ற இருளுக்குள் குப்பையாக கிடக்கும் மனுமக்களை தேடி இறங்கி வந்து மலத்திற்குள் கிடந்த மனிதனை தூக்கி எடுத்து பாவம் கழுவி பரிசுத்தமாக்கினார். இதுவே குப்பைக் கார்த்திகையின் பொருள்". ஒருவழியாக விஷயத்துக்கு வந்துவிட்டார் பொன் இலாசரசு. குப்பைக் கார்த்திகைக்கான விளக்கத்தைப் பார்த்தீர்களா? உண்மையில் இந்த விளக்கத்தைக் கேட்டு சங்கராச்சாரியாரே திகைத்துப் போய்விடுவார். (பாவம், அவருக்கு இப்போது கோர்டுக்கும் மடத்துக்கும் அலையவே நேரம் சரியாக இருக்கிறது.)

மனிதனின் கழிவுப் பொருளான மலத்தையும், அண்ணாமலையிலும் குப்பை மேட்டிலும் ஏற்றப்படும் கார்த்திகைத் தீபத்தையும், இந்துமத சிவஞான போதம் சொல்லுகிற மும்மலத் தத்துவத்தையும் இரசாயன கூடத்தில் குப்பியில் இரசாயனங்களைச் சேர்த்து விஞ்ஞானி உருவாக்கும் பொருளைப் போல ஒரு புது தத்துவமாக உருவாக்கி அதை வேதமாக்கி நம்மை நம்பச் சொல்லுகிறார் சிருஷ்டிகருக்கே சவால்விடும் பொன் இலாசரசு.

இனி சீயோன் மலைக்கு "சூரிய மலை" என்ற பொருளிருக்கிறதா என்பதை ஆராய்வோம். இதை வைத்தே இதுவரை கயிறு திரித்திருக்கிறார் இலாசரசு. வேதத்தில் உள்ள வார்த்தைகளுக்கு நாம் நினைத்தவிதத்தில் பொருள் கொடுக்க முடியாது. அந்த வார்த்தைகளுக்கு வேதம் தரும் அர்த்தமே முடிவானதாகும். அப்படிப் பார்க்கிறபோது "சீயோன்" என்ற இடத்துக்கு "கோட்டை" என்றதொரு (tsiyon - Citadel) பொருள் இருப்பதைப் பார்க்கிறோம். அது முதன் முதலாக 2 சாமுவேல் 5:6-9ல் எபூசியரின் கோட்டையைக் குறித்து பயன்படுத்தப்பட்டிருக்கிறது (Pictorial Bible Dictonary). "சீயோன்" என்ற வார்த்தைக்கு "காய்ந்த நிலம்" என்பது எழுத்துபூர்வமான அர்த்தமாகும் (Bible Works). அத்தோடு, முழு எருசலேமைக் குறித்தும், உருவகமாக பரலோகத்தைக் குறித்தும் இது பயன்படுத்தப்படுகிறது. இவற்றைத் தவிர வேறு எந்த அர்த்தத்திலும் "சீயோன்" என்ற வார்த்தை வேதத்தில் பயன்படுத்தப்படவில்லை. சீயோனுக்கு "சூரிய மலை" என்ற பெயரிருப்பதாக சொல்லுவது வெறும் கட்டுக் கதையே தவிர வேறில்லை. இப்படிக் கேட்பார் யாருமில்லை என்ற தைரியத்தில் விளக்கம் கொடுப்பவர்கள் நம்மினத்தில் இன்று நேற்றென்றிராமல் இருந்து வருகிறார்கள். அண்ணாமலைக்கும், சீயோனுக்கும் எந்தத் தொடர்புமில்லை. இந்துப் பண்டிகையான கார்த்திகைத் தீபம், அது குப்பையில் இருந்தாலும் சரி. கழிவறையில் இருந்தாலும் சரி கிறிஸ்தவத்தோடு

எந்தத் தொடர்பும் இல்லாதது.

வாய்வழிச் சொல்லப்பட்டு வரும் கதைகளுக்கும், கர்ணபரம்பரைக் கதைகளுக் கும் காதும் மூக்கும் வைத்து அவற்றை வரலாறாக மாற்றி நாட்டுமக்கள் நம்பி வருவது நம் நாட்டில் ஒன்றும் புதிதல்ல. வெறும் குறுநில மன்னனாக இருந்த இராமனை கிருஷ்ணாவதாரங்களில் ஒன்றாக்கி அவனுக்கு இராமாயணத்தையும் படைத்து அதை நம்பி வரும் மக்கள் வாழும் தேசம் நம்முடையது. நாளைக்கு எம். ஜி. யாரும், குஷ்புவும் கூட இந்நாட்டில் குட்டித் தெய்வங்களாக, அவர்கள் மனிதர்கள் என்பதையே மறந்து மக்கள் வழிபடப்போவது நிதர்சனமான உண்மை. அந்தளவுக்கு மூட நம்பிக்கையும், குருட்டுத்தனமாக எதையும் பின்பற்றும் போக்கும் இந்நாட்டில் இருந்து வருகிறது. இந்தளவுக்கு வெறும் கற்பனைக் கதைகளை வைத்து மட்டுமே உருவாக்கப்பட்டு, கண்மூடித்தனமாக மக்களால் பின்பற்றப்பட்டு வரும் இந்து மதத்திற்கும், அதைப்பற்றி விளக்கும் நூல்களுக்கும், சமயப் பாடல் களுக்கும் கர்த்தர் தந்துள்ள வெளிப்பாடான சத்திய வேதத்தின் அடிப்படையில் விளக்கம் கொடுப்பவர்களின் ஆத்துமா மிகவும் ஆபத்தில் இருக்கிறது என்று மட்டுமே சொல்ல முடியும்.

வேதம் மனிதனிடம் இருந்து புறப்படாமல் பரிசுத்த ஆவியின் மூலமாக கர்த்தரால் அருளப்பட்டது. அது கர்த்தரின் சித்தத்தை நமக்குத் தெரிவிக்கிறது. அதில் மட்டுமே நாம் பரலோகத்தை அடைவதற்கு அவசியமான சுவிசேஷச் செய்தியையும், பரிசுத்த வாழ்க்கை வாழ்வதற்கு அவசியமான போதனைகளையும் பார்க்கலாம். அதற்கு வெளியில் இருந்து இன்று வெளிப்படுத்தலை பெற்றுக்கொள்ள முடியாது. வேதத்தைப் பயன்படுத்தி இந்து மதத்திற்கு கிறிஸ்தவ விளக்கம் கொடுப்பது விபச்சார ஊழியமாகும். பவுல் சொல்லுகிறார், “அநேகரைப் போல நாங்கள் தேவவசனத்தைக் கலப்பாய்ப் பேசாமல், துப்புரவாகவும், தேவனால் அருளப்பட்ட பிரகாரமாகவும், கிறிஸ்துவுக்குள் தேவசந்நிதியில் பேசுகிறோம்.” இங்கே ‘கலப்பாய்’’ என்று இருக்கின்ற வார்த்தைக்கு மூலத்தில் வார்த்தையை வைத்து வியாபாரம் செய்வது, விபச்சாரம் செய்வது என்ற பொருள் இருக்கிறது. விசுவாசி களும், ஊழியக்காரர்களும் அதை ஒருபோதும் செய்யக்கூடாது.

மேலும் கொலோசெயர் 2:8ல் பவுல் கூறுவதைக் கவனியுங்கள். “லௌகீக ஞானத்தினாலும், மாயமான தந்திரங்களினாலும் ஒருவனும் உங்களைக் கொள்ளை கொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாக இருங்கள். அது மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும் உலக வழிபாடுகளையும் பற்றினதேயல்லாமல் கிறிஸ்துவைப் பற்றினதல்ல.” 1 தீமோத்தேயு 6:3-5 வரையுள்ள வசனங்களில் பின்வருமாறிருக்கிறது, “ஒருவன் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஆரோக்கியமான வசனங்களையும், தேவபக்திக்கேற்ற உபதேசங்களையும் ஒப்புக் கொள்ளாமல் வேற்றுமையான உபதேசங்களைப் போதிக்கிறவனானால் அவன் இறுமாப்புள்ளவனும், ஒன்றும் அறியாதவனும், தர்க்கங்களையும், வாக்கு வாதங்களையும் பற்றி நோய்கொண்டவனுமாயிருக்கிறான்; அவர்களாலே . .மாறு பாடான தர்க்கங்களும் பிறக்கும். இப்படிப்பட்டவர்களைவிட்டு விலகு.” பவுல் தீத்துவுக்கு தந்துள்ள உபதேசத்தைப் பாருங்கள், “அநேகர், . . . மனதை மயக்கு கிறவர்களாய் இருக்கிறார்கள். அவர்களுடைய வாயை அடக்க வேண்டும்; அவர் கள் இழிவான ஆதாயத்துக்காக தகாதவைகளை உபதேசித்து முழுக்குடும்பங்

களையும் கவிழ்த்துப் போடுகிறார்கள். . . . கட்டுக்கதைகளுக்கும், சத்தியத்தை விட்டு விலகுகிற மனுஷருடைய கற்பனைகளுக்கும் செவிகொடாமல் விசுவாசத்திலே ஆரோக்கியமுள்ளவர்களாயிருக்கும்படி, நீ அவர்களைக் கண்டிப்பாய் கடிந்து கொள்.'' *(தீத்து 1:10-14).*

பவுல் அப்போஸ்தலனின் மேற்கூறிய வார்த்தைகள் வேதத்தோடு நாம் எந்த விதத்திலும் விளையாடக்கூடாது என்பதையும் அதை விலைமாதைப்போல நாம் பயன்படுத்தக்கூடாதென்பதையும் தெளிவாக விளக்குகிறது. அதுமட்டுமல்லாமல் வேதத்தோடு விளையாடுகிறவர்களையும், அதைக் கலப்படப்பொருளாக்கி விற்பனை செய்கிறவர்களையும் கடிந்து கொள்வதோடு, அவர்களைவிட்டு விலகியோட வேண்டும் என்றும் பவுல் அழுத்திச் சொல்கிறார். போலிப் போதனைகளினால் ஆத்துமாக்கள் சீரழிந்துவிடக்கூடாது என்ற ஆதங்கத்தில், ஒரு மெய்ப் போதகருக்குரிய ஆழ்ந்த அக்கறையோடு பவுல் இந்த வார்த்தைகளை எழுதியிருக்கிறார்.

போலிப்போதனைகளை ஆராய்ந்து கண்டுபிடிக்கும் பக்குவமில்லாமல் அவற்றிற்கு இடம்கொடுத்துவரும் சபைகள் ஆத்துமரீதியில் வளர்ச்சியடைந்த சபைகளாக இருக்க முடியாது. கர்த்தரின் வேதத்திற்கு பயந்து நடக்கும் சபைகள் போலிப் போதகர்களையும் போலித்தீர்க்கதரிசிகளையும் உள்ளே விடமாட்டார்கள். அத்தகையோர் சபைக்குள்ளிருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுடைய போதனைகள் பகிரங்கமாக வெளிப்படுத்தப்பட்டு, அவர்கள் பகிரங்கமாக கண்டிக்கப்பட வேண்டும். அவர்கள் தங்களைத் திருத்திக் கொண்டு சபைக்கு அடிபணிந்து நடக்காவிட்டால் அவர்களை சபையில் இருந்து விலக்குவது உத்தமமான திருச்சபைகள் செய்கின்ற காரியம். அத்தகையோர் சபைகளில் எந்தப் பொறுப்பும் வகிக்கக் கூடாது. அது ஆத்துமாக்களையும், சபையையும் அழித்துவிடும். அப்போஸ்தலனான பேதுரு தவறு செய்தபோது பவுல் அதைத் திருத்தியதற்கு கராணம் சத்தியம் மாசுபடக்கூடாதென்பதற்காகத்தான். இன்று மனித பயம் அதிகரித்து அநேக திருச்சபைகளில் சபை ஒழுங்குக் கட்டுப்பாட்டுக்கு இடம் கொடுக்கப்படுவதில்லை. முகத்தாட்சிணியம் பார்த்து, உலகத்தோடு நட்புக் கொண்டாடி கர்த்தருடைய வார்த்தையை உதாசீனம் செய்வது நம்மினத்து சபைகளில் வெகு சாதாரணமாக நடந்து வருகின்ற நிகழ்ச்சி. நம்நாட்டில் இப்படியெல்லாம் சபை நடத்த முடியாது என்று சொல்லுகிற வரட்டுக்கவுரவம் பார்க்கிறவர்களும் நம் மத்தியில் அதிகம். எந்தளவுக்கு வேதத்தை நாம் எள்ளி நகையாடிக் கொண்டிருக்கிறோம் என்பதற்கு இதெல்லாம் சாட்சியம்.

வெளிப்படுத்தின விசேஷத்தில் முதல் மூன்று அதிகாரங்களிலும் காணப்படும் ஏழு சபைகளுக்கு செய்தி அனுப்பிய கிறிஸ்து அந்தச் சபைகள் தங்களுக்கு மத்தியில் காணப்படும் குறைகளை வேதத்தின் போதனைகளின் அடிப்படையில் நிவர்த்தி செய்யாவிட்டால் தானே வந்து அவர்களைத் திருத்துவேன் என்றும், நீ மனந்திரும்பு, ஜாக்கிரதையாயிரு என்றும் சொல்லியிருப்பதை வாசித்துப் பாருங்கள். மனந்திரும்பாத சபைகளின் சாட்சியத்தையே இல்லாமல் செய்து விடுவேன் என்றும் இராஜாதி இராஜன் எச்சரித்திருப்பதைக் கவனிப்பது அவசியம். ஒரு துளி விஷம் ஒரு பானை சோற்றை நஞ்சாக்கி விடும் என்பது தெரியாமலிருப்பவர்கள் இருக்க முடியாது. ஒரு துளி அசத்தியம் முழுச்சபையையும் நிர்மூலமாக்கிவிடும் என்பதை உணராமலிருப்பவர்கள் விசுவாசிகளாக இருக்க முடியாது. நமக்கு வேண்டியது இன்று வேதத்தை மட்டும் பிரசங்கிக்கும் உத்தமப் பிரசங்கிகள், வேதப்புரட்டர்களல்ல.

# கிறிஸ்துவின் வழியில் திருச்சபை ஊழியம்

சுவிசேஷத்தை அறிவிக்கும் பணியில் கடந்த ஐம்பது ஆண்டுகாலமாக தமிழினத்தின் மத்தியில் அனேகர் ஈடுபட்டுவந்திருக்கிறார்கள். நூற்றுக்கணக்கான ஸ்தாபனங்களும், தனிநபர் சொந்த ஊழியங்களும் இரவில் தோன்றி இருந்த இடம் தெரியாமல் அடுத்த நாளே மறைந்துவிடும் காளான்கள் போல் புதிது புதிதாக முளைத்துக் கொண்டிருக்கின்றன. இவர்களின் பணிகள் மூலம் வேதபூர்வமாக நிலைத்து நின்று நம் சமுதாயத்தில் உறுதியான ஊழியங்களைச் செய்யும் திருச்சபைகள் எத்தனை தோன்றி இருக்கின்றன என்று ஆராய்ந்து பார்த்தால் அவற்றை விரல் விட்டு எண்ணி விடலாம். இந்த ஸ்தாபனங்கள் பெரும்பாலும் திருச்சபைகள் அமைப்பதில் எந்த அக்கறையும் எடுப்பதில்லை. சபை அமைக்கிறோம் என்ற பெயரில் எழும் தனிநபர் ஊழியங்களும் அதை ஆரம்பிக்கும் தனிநபருடைய சுயநல நோக்கங்களுக்காகவே பெரும்பாலும் ஆரம்பிக்கப் படுகின்றன. நம்மினத்தில் இந்த ஐம்பது வருட காலத்திற்குப் பிறகும் ராஜாதி ராஜாவான கிறிஸ்து இயேசு அமைத்து வருகின்ற திருச்சபையை இனங்காட்டி, சமுதாயத்தில் ஒளிபரப்பி உயிரூட்டத்தோடு இருக்கும் சபைகளை அதிகம் பார்க்க முடியாமலிருப்பது பெரும் வேதனையளிக்கிறது. புறஜாதி மக்கள் கண்டு வியந்து கைகளை உயர்த்தி வணங்க வைக்கும் அளவுக்கு திருச்சபை ஊழியங்கள் இல்லாதிருப்பது நெஞ்சைச் சுடுகிறது. ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்பதற்கிணங்க நம்மத்தியில் அவல நிலையில் இருக்கும் கிறிஸ்தவ ஊழியத்தில் முதல் போடாமலேயே வட்டி வாங்கிப் பிழைக்கும் கூத்தாடிகளும், கூடில்லாக் குருவிகளுந்தான் அதிகம்.

இந்தச் சூழ்நிலையில் இருந்து வருகிற நம்மினத்தில் சிந்திக்கத் தெரிந்தவர்களும், தேவபயமுள்ளவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். கர்த்தரின் வார்த்தைக்கு மதிப்புக் கொடுக்கத் தெரிந்திருக்கிற அவர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்துடன் இந்த ஆக்கத்தை எழுதத் துணிந்தேன். மத்தேயு 28ம் அதிகாரத்தில் 18-20 வசனங்களில் இயேசு கிறிஸ்து தன்னுடைய சீடர்களான பதினொருவரை அழைத்து (யூதாஸ் இறந்துவிட்டான்) அவர்களுக்கு ஒரு பெருங்கட்டளையை இட்டார். அந்தக் கட்டளைபடி கிறிஸ்துவின் சீடர்களான பதினொருவரும் உலக முழுதும் போய் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, மனந்திரும்பி இயேசுவை விசுவாசிக்கின்றவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து அவர்களை சேர்த்து வேத போதனைகளின் அடிப்படையில் திருச்சபைகளை நிறுவும்படிக் கட்டளையிட்டார். இன, மத, மொழி வேறுபாடுகளின்றி சகல மக்கள் மத்தியிலும் சுவிசேஷம் பிரசங் கிக்கப்பட்டு இத்தகைய சபைகள் அமைய வேண்டுமென்பதே கிறிஸ்துவின் கட்டளையாக இருந்தது. இதே

கட்டளையை ஏனைய சுவிசேஷ நூல்களின் ஆசிரியர்களும் விளக்கி யிருக்கிறார்கள். பவுல் ரோமர் 10ல் இதைத்தான் வலியுறுத்துகிறார். இந்தப் பகுதிகள் அனைத்தும் ஒரே விஷயத்தை வெவ்வேறு விதங்களில் விளக்கும் பகுதிகளாக இருக்கின்றன. இவற்றிலிருந்து கிறிஸ்து சுவிசேஷத்தை உலக மக்களுக்கு அறிவிப்பது மட்டும் தனது சீடர்களின் கடமையாகக் கருத வில்லை. சுவிசேஷ ஊழியங்கள் அனைத்தும் சபை நிறுவுதலில் போய் முடியவேண்டும் என்று அவர் எதிர்பார்த்தார். சபை நிறுவுதலுக்குக் குறை ந்த எதையும் அவர் விரும்பவில்லை. வெறுமனே சுவிசேஷத்தை மட்டும் சொல்லிவிட்டு காலத்தை ஓட்டிக்கொண்டிருக்கிற வர்களுக்கு கிறிஸ்துவின் கட்டளை புரியவில்லை என்றுதான் கூறவேண்டும்.

கிறிஸ்துவின் கட்டளையைத் தலைமேல் தாங்கி அவருடைய சீடர்களான அப்போஸ்தலர்கள் சுவிசேஷத்தைப் போதித்து திருச்சபைகளை அமைத்த வரலாற்று விபரங்களை அப்போஸ்தலர்களின் நடபடிகள் தெளிவாக விளக்குகின்றன. அப்போஸ்தலர்களுடைய சுவிஷேசப் பணிகள் அனைத் தும் சபை அமைப்பதில் போய் முடிந்திருக்கின்றன. அவர்கள் சபை அமைப்பதை இலக்காகக்கொள்ளாமல் சுவிசேஷப்பணிகளை ஒருபோதும் ஆரம்பிக்கவில்லை. இன்றைக்கு வாலிபர் சுவிஷேசப்பணி, பெண்கள் சுவிசேஷப்பணி, குழந்தைகள் சுவிசேஷப்பணி என்று சமுதாயத்து மக்க ளைத் தனித்தனியாகப் பிரித்து சுவிசேஷம் சொல்லி அவர்கள் சபைப் போதனையையே அறியாமலும், சபை வாழ்க்கைக்கே தகுதியற்றவர்களாக வும் இருக்கும்படி செய்து தங்களை மட்டும் வளர்த்துக் கொள்ளுகிற ஸ்தாபன ஊழியங்களை அப்போஸ்தலர்கள் அன்று அறிந்திருக்கவில்லை.

இன்று பொதுவாக வழங்கப்பட்டு வரும் 'மிஷனரி' (Missionary) என்ற வார்த்தை வேதத்தில் இல்லாதது. அது இலத்தீன் மொழியில் இருந்து வந்தது. அப்போஸ்தலன் என்ற வார்த்தைக்குப் பொருளான அதிகாரத் தோடு (சபையால்) அனுப்பப்பட்டவர் என்ற அர்த்தமே இலத்தீனில் முதலில் உருவான இந்த வார்த்தைக்குப் பொருள். இன்று 'மிஷனரி' என்று தங்களை அழைத்துக் கொள்கிறவர்களில் 99% திருச்சபைகளால் அனுப்பப் படவில்லை. சபைத்தொடர்பில்லாத ஸ்தாபனங்களினாலேயே அனுப்பப் படுகிறார்கள். இவர்கள் திருச்சபைகளில் வளர்ந்து இருக்கமாட்டார்கள்; திருச்சபையைக் கண்டும் இருக்க மாட்டர்கள். அத்தோடு, இவர்களில் 99% திருச்சபை அமைப்புப் பணி தவிர்ந்த ஏனைய வேலைகளைச் செய் யவே அனுப்பப்படுகிறார்கள். கிறிஸ்து கட்டளையிட்டுச் சொல்லியிருக்கும் திருச்சபை அமைப்பு பணியில் ஈடுபட்டிருப்பவர்கள் தொகை மிகவும் குறைவு. ஆனால், வேதத்தில் நாம் பார்க்கும் ஆதிசபை அப்போஸ்தலர்கள் சபைகளை நிறுவ கிறிஸ்துவாலும், சபைகளாலும் அனுப்பப்பட்டவர்களாக இருந்திருக்கிறார்கள். அவர்கள் வேறு வேலைகளில் ஈடுபட்டதாக வேதத் தில் நாம் எங்கும் வாசிப்பதில்லை.

ஆகவே, மத்தேயு 28ல் காணப்படும் இயேசு கிறிஸ்துவின் கட்டளையின் படி இந்த உலகத்தில் அமைந்த திருச்சபை ஊழியத்தையும், அந்த திருச்சபை ஊழியம் இந்த உலத்தில் தொடர்ந்து திருச்சபை ஊழியங்கள் அமைவதற்காக சுட்டிக்காட்டும் நாம் பின்பற்ற வேண்டிய விதிகளையும்

விளக்கமாகப் பார்ப்பதற்கு முன்பாக நாம் அப்போஸ்தலர்களைப் பற்றிய நான்கு முக்கிய அம்சங்களை நினைவில் வைத்திருப்பது அவசியம்.

(1) **இன்று நம்மத்தியில் அப்போஸ்தலர்கள் இல்லை.** – அப்போஸ்தலர்களின் பதவி முதலாம் நூற்றாண்டுடனேயே முடிவடைந்துவிட்டது. நம்மத்தியில் இன்று அப்போஸ்தலர்கள் இல்லை. அப்போஸ்தலப் பதவிக்கு இருக்க வேண்டிய இலக்கணங்களின் அடிப்படையில் இன்றைக்கு அப்போஸ்தலர் கள் இருக்க முடியாது. சமீபத்தில் எனக்கு வந்த ஒரு கடிதத்தில் ஒரு சபைப் போதகர் தன்னை அப்போஸ்தலர் என்று அறிவித்துக் கொண்டிருந் தார். வேதம் சரியாகத் தெரியாத அந்த மனிதரின் அறியாமையை எண்ணி என்னால் சிரிக்க மட்டுந்தான் முடிந்தது. அப்போஸ்தலர்கள் திருச்சபைக்கு அத்திவாரம். அத்திவாரம் போட்ட பிறகு எந்தக் கட்டிடத்துக்கும் மறுபடி யும் அத்திவாரம் போடத்தேவையில்லை. அப்போஸ்தலர்களுக்கு சத்தியம் நேரடியாக வெளிப்படுத்தப்பட்டது. அந்த சத்தியங்கள் அனைத்தும் வேதத்தில் எழுத்தில் வடிக்கப்பட்டு பூரணமாகக் கொடுக்கப்பட்டவுடன் அப்போஸ்தலப் பதவிக்கு இன்று அவசியமில்லை. அப்போஸ்தலர்கள் அனைவரும் நேரடியாக இயேசுவைக் கண்டவர்கள். அவர் காலத்தில் அவருடன் வாழ்ந்தவர்கள், பவுலைத் தவிர. இந்த இலக்கணங்கள் எல்லாம் இருந்தவர்கள் மட்டுமே அன்று அப்போஸ்தலர்களாக தெரிவு செய்யப் பட்டனர். இன்று அந்த இலக்கணங்களைக் கொண்ட எவரும் எம்மத்தியில் இல்லை. அத்தோடு, கர்த்தரே திருச்சபைக்கு அத்திவாரமான அந்தப் பதவியை நிறுத்திக்கொண்டுவிட்டார்.

(2) **அப்போஸ்தலர்களுக்கு சத்தியம் நேரடியாக வெளிப்படுத்தப்பட்டது.** – அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவிடமிருந்து சத்தியத்தை நேரடியாகப் பெற்றுக்கொண்டார்கள். அவர்களே அதை திருச்சபைக்கு வெளிப்படுத்தி னார்கள். இந்தவிதத்தில் அப்போஸ்தலர்கள் பழைய ஏற்பாட்டு தீர்க்க தரிசிகளைப் போன்றவர்கள். அப்போஸ்தலர்களுடைய காலம் முடிவடை கின்றபோது சத்தியம் முழுமையாக எழுத்தில் வடிக்கப்பட்டு வேதமாக நமக்குக் கொடுக்கப்பட்டது. இன்று சத்தியத்தை நாம் நேரடியாக கர்த்தரிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியாது. அதை நாம் வேதத்தை வாசித்தே அறிந்துகொள்ள வேண்டும். இக்காரணத்தால் சத்தியத்தை அன்று வெளிப்படுத்திய அப்போஸ்தலர்களின் பதவி இன்று தேவையற்றுப் போயிற்று.

(3) **அப்போஸ்தலர்கள் அற்புதங்களைச் செய்யும் வல்லமை கொண்டவர்களாக இருந்தனர்.** – அப்போஸ்தலர்கள் அற்புதங்களைச் செய்யும் வல்லமை யுடையவர்களாக இருந்தனர். அவர்கள் கர்த்தரின் பிரதிநிதிகள் என்பதை உணர்த்தவும், அவர்களிடமிருந்தே சத்தியம் நமக்கு வருகிறது என்பதைத் தெரிவிக்கவும் அவர்களுக்கு அற்புதங்களைச் செய்யும் வல்லமை அளிக்கப் பட்டிருந்தது. இன்று அப்போஸ்தலப் பதவி முடிவடைந்து போய்விட்ட தால் அற்புதங்கள் செய்ய வேண்டிய அவசியமும் இல்லாமல் போய் விட்டது. கர்த்தர் மட்டுமே இன்று நேரடியாக எந்த அற்புதத்தையும் செய்யக்கூடிய வராக இருக்கிறார். அற்புதங்கள் செய்பவர்களாக தங்களை

இனங்காட்டிக் கொள்கிற எவரும் இன்று போலிகளே.

**(4) அப்போஸ்தலர்கள் திருச்சபைகள் மீது அதிகாரம் செலுத்தக்கூடியவர்களாக இருந்தனர்.** – கர்த்தரிடம் இருந்து சத்தியத்தைப் பெற்று சபைக்களித்ததோடு அற்புதங்களையும் செய்த அப்போஸ்தலர்கள் திருச்சபைகள் மீது அதிகாரம் செலுத்தக் கூடியவர்களாக இருந்தனர். அவர்கள் வழிப்படி திருச்சபைகள் நடக்க வேண்டியிருந்தது. அவர்கள் மூலமே கர்த்தர் அக்காலத்தில் திருச் சபைகளை வழிநடத்தினார். இதனால்தான் புதிய ஏற்பாட்டில் பல இடங் களில் நான் கர்த்தரிடம் இருந்து பெற்றுக் கொண்டதை உங்களுக்கு ஒப்பு வித்தேன். எல்லா சபைகளிலும் இப்படியே இருக்கக் கடவதாக என்றெல் லாம் பவுல் அப்போஸ்தலனால் சொல்ல முடிந்தது. அப்போஸ்தலப் பதவி விஷேடமான பதவி. அப்போஸ்தலர் காலத்துக்கு மட்டுமே உரிய பதவி.

மேற்கண்ட காரணங்களால் இன்று அப்போஸ்தலர்கள் நம்மத்தியில் இல்லை. இனி வருங்காலத்திலும் அவர்களைப் பார்க்க முடியாது. சபைக்கு அத்திவாரமாக இருந்த அவர்கள் பணி நிறைவேறிவிட்டது. ஆகவே, இன்றை க்கு எவரும் அப்போஸ்தலர்களைப்போல அதிகாரத்தோடு நடந்து கொள்ள முடியாது. அற்புதங்கள் செய்ய முடியாது. அப்போஸ்தலர்களைப்போல திருச் சபைகள் மீது அதிகாரம் செலுத்தவும் முடியாது. அப்போஸ்தலர்களாக தங்களைப் பிரகடனப்படுத்திக் கொள்பவர்கள் தங்களுடைய அறியாமை யைத்தான் காட்டிக் கொள்கிறார்கள். அப்போஸ்தலர்கள் இல்லாத இன்றைய காலப்பகுதியில் திருச்சபை போதகர்களையும்/மூப்பர்களையும், உதவிக்காரர் களையும் மட்டுமே அதிகாரிகளாகக் கொண்டிருக்கிறது. போதகர்களும்/ மூப்பர்களும் இன்று வேதத்தைப் போதித்து சபையை வழிநடத்துவதை மட் டுமே பொறுப்பாகக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அப்போஸ்தலர் களுக்கு அன்றிருந்த அதிகாரம் இல்லை. உதவிக்காரர்கள் போதகர்களுக்குக் கீழ் பணிபுரிய வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அன்று அப்போஸ்தலராக எந்தப் பெண்மணியும் நியமிக்கப்படவில்லை. அதேபோல் இன்று போதகர் களாகவும், மூப்பர்களாகவும், உதவிக்காரர்களாகவும் எந்தப் பெண்ணும் நியமிக்கப்படக்கூடாது. இவை பெண்களுக்குரிய ஊழியங்கள் இல்லை.

அப்போஸ்தலர்களுக்குரிய முக்கிய இலக்கணங்களையும் அவர்களுடைய பதவி இன்று இல்லாததற்கான காரணங்களையும் பார்த்தோம். இனி வேதம் போதிக்கும் திருச்சபை அமைப்புப் பணிகளுக்கான விதிகளை ஆராய் வோம். அதற்கு முன் நாம் பார்க்கப்போகின்ற இவ்விதிகள் வேதத்தில் ஓர் இடத்தில் மொத்தமாகக் கொடுக்கப்படவில்லை என்பதை நாம் உணர்வது அவசியம். அவற்றை வேதம் தரும் திருச்சபை அமைப்பு பற்றிய போதனை கள் அனைத்திலிருந்துமே பெற்றுக் கொள்ள முடியும். அப்போஸ்தல நட படிகள் நமக்கு முக்கியமாக அப்போஸ்தலர்களைப் பயன்படுத்தி இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் எவ்வாறு சபையை நிறுவினார் என்பதை தெளி வாக விளக்குகிறது. அப்போஸ்தலர் நடபடிகள் ஒரு வரலாற்று நூல். அதில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் நமக்கு சபைகள் எப்படி அமைக்கப் பட்டன என்பதை மட்டும் எடுத்துக் கூறாமல் இன்று சபைகள் அமைக்கப் படுவதற்குத் தேவையான விதிகளையும் விளக்குகின்றன. அப்போஸ்தலர் களின் வழிகளைப் பின்பற்றி நாம் எவ்வாறு சபையை அமைப்பது என்

*பதை அது விளக்குகின்றது. அது வெறும் வரலாறுதானே என்று ஒதுக்கிவிட முடியாது. அது சபை அமைப்பதற்கு கர்த்தர் நமக்குக் காட்டியிருக்கும் உதாரணம்; வழிகாட்டி. சிலர், அது அந்தக்காலத்துக்கு மட்டுமே பொருத்த மானது. இன்று பொருந்தாது என்பார்கள். அனேக இறையியல் கல்லூரி களில் இப்படித்தான் இன்று தவறாகப் போதிக்கிறார்கள். இதனாலேயே வேதத்துக்கு விரோதமாக அநேக உலக வழக்கங்கள் பலராலும் இன்று ஊழியத்தில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அப்போஸ்தல நடபடிகள் கர்த்தரின் வேதம், சத்தியம் என்பதை அவர்கள் மறந்துவிடுகிறார்கள். அந்த நூல் இல்லாவிட்டால் இன்று திருச்சபைப் பணி செய்வதற்கு நமக்கு வழி காட்டுவதற்கு எதுவுமே இல்லை. எனவே, அறியாமையால் அப்போஸ்தலர் நடபடிகளின் அவசியத்தை நாம் குறைத்து மதிப்பிட்டுவிடக்கூடாது.*

*அத்தோடு புதிய ஏற்பாட்டின் ஏனைய நிருபங்களும் நமக்கு சபை அமைப்பு, நிர்வாகம் பற்றிய போதனைகளைத் தருகின்றன. முக்கியமாக பவுல் எழுதிய 1 தீமோத்தேயு, 2 தீமோத்தேயு, தீத்து ஆகிய மூன்று நூல்களும் போதக ஊழியத்துக்குத் தேவையான இலக்கணங்களையும், உதவிக்காரர் களுக்குரிய இலக்கணங்களையும் விளக்குகின்றன. எபேசிய சபையில் போதக னாக இருந்த வாலிபத் தீமோத்தேயு சபையில் எப்படி நடந்து கொள்ள வேண்டும், சபை மக்களை எப்படி வழிநடத்த வேணடும் என்பதை பவுல் இந்நிருபங்களில் தீமோத்தேயுவுக்கு விளக்குகிறார். அவையத்தனையும் கிறிஸ்து மறுபடியும் வரும்வரையும் இவ்வுலகத்தில் திருச்சபை ஊழியத்தில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய போதனைகள். இந்த நிருபங்களில் சபை பற்றிய அநேக போதனைகள் உள்ளன. பவுலும் மற்றவர்களும் எழுதிய ஏனைய நிருபங்களும் சபை சம்பந்தமான போதனைகளை அள்ளி வழங்கு கின்றன. திருச் சபையில் ஆராதனை எவ்வாறு நிகழ வேண்டும், திருச்சபை யில் ஆண்களும், பெண்களும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை நாம் கொரிந்தியருக்கு பவுல் எழுதிய நிருபத்தில் இருந்து அறிந்து கொள்ளுகிறோம். பேதுருவும் இவை பற்றி எழுதியிருக்கிறார். திருமணம் செய்து கொண்டவர்கள் எப்படி வாழ வேண்டும் என்பதை எபேசியருக்கு பவுல் எழுதிய நிருபம் விளக்குகிறது. திருச்சபைகள் எப்படி இருந்தன, அவை எப்படி இருக்க வேண்டும் என்பதை வெளிப்படுத்தல் விசேஷத்தின் முதல் மூன்று அதிகாரங்களிலும் வாசிக்கிறோம். இவை எல்லாவற்றையும் வைத்தே நாம் திருச்சபை அமைப்புப் பணிக்கான விபரங்களைப் பெற்றுக் கொள்கிறோம். புதிய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ள இந்தப் போதனை களின்படி அமைந்து வளர்கிறவை மட்டுமே கர்த்தருடைய திருச்சபைகளாக இருக்க முடியும். இன்று இதையெல்லாம் அசட்டை செய்துவிட்டு உலகத் தைப் பார்த்து ஊழியம் செய்ய ஆரம்பித்திருக்கிறது ஒரு பெருங்கூட்டம்.*

*வேதபோதனைகளை உதாசீனப்படுத்திவிட்டு கிறிஸ்து இயேசுவின் பெய ரில் இந்த உலகத்தில் சுவிசேஷ ஊழியம் செய்ய முடியாது; சபை அமைக்க முடியாது. வேதவழிகளினால் அல்லாமல் வேறுவழிகளின் மூலம் அமைகிற எந்த ஊழியமும் கர்த்தரின் வார்த்தைக்குக் கட்டுப்பட்ட ஊழியமாகவும் இருக்காது. கிறிஸ்து காட்டும் வழியில் அவருடைய சபை எப்படி அமைக் கப்படவேண்டுமென்பதை இனி வரும் இதழ்களில் பார்ப்போம். (வளரும்)*

# சாம்பார் இறையியல் ஊழியம்

இது என்ன வித்தியாசமான தலைப்பாக இருக்கிறதே என்று பார்க்கிறீர்களா? தொடர்ந்து வாசித்தால் இது என்ன என்பது உங்களுக்குப் புரியும். சாம்பரைத் தெரியாத, ருசித்திராத தமிழர்கள் இருக்க முடியாது. அது நம்முடைய உணவின் முக்கிய அம்சம். சாம்பாரின் மகிமையே அதில் பலவிதமான காய்கறி வகைகளும் சேர்ந்திருப்பதுதான். முருங்கக்காய், கத்தரிக்காய் என்று அதில் எந்தக் காயையும் சேர்த்துக் கொள்ளலாம். இப்படிப் பலவிதமான காய்கறிகளையும் சேர்த்துத் தயாரிப்பதுதான் சாம்பார். அப்படி இல்லாததற்குப் பெயர் சாம்பாராயிருக்காது.

இப்படிப் பல்வேறு காய்கறி வகைகளும் இணைந்து சாம்பார் இருக்கலாம். அதை நாம் சுவைத்து மகிழலாம். ஆனால், இந்த சாம்பார் ரெசிப்பியை (Recipe) ஆத்மீகக் காரியத்துக்கு நாம் ஒருபோதும் பயன்படுத்த முடியாது. அது பொருந்தி வராது. இதை அனேகர் அறியாதிருக்கிறார்கள். நமக்கு சாம்பார் பிடிக்கிறது; சாம்பார் இறையியல் பிடிக்கவில்லை. இன்றைக்கு தமிழினத்தின் இறையியல் சாம்பாராய்த்தான் இருக்கிறது. அதாவது ஒருவிஷயத்தைப் பற்றி ஏறுக்குமாறானதும், ஒத்துப் போயும், போகாமலுமிருக்கும் சகலவிதமான போதனைகளும் கலந்தே எல்லா இடங்களிலும் போதிக்கப்படுகின்றன; பின்பற்றப்படுகின்றன. அந்தவிதமாகவே ஆத்துமாக்களும் எல்லாவற்றையும் புரிந்துகொள்ளுகிறார்கள். ஒரு ஆத்மீகப் போதனைக்கு ஒரு விளக்கம் மட்டுமே உண்டு என்பதை நம்மினத்து ஆத்துமாக்களால் ஜீரணித்துக்கொள்ள முடியாமலிருக்கிறது. சாம்பாரையே சாப்பிட்டுப் பழகிப்போய் தனிக்காய்கறிக்கூட்டு பிடிக்காமல் போன மனிதனைப் போல அவர்கள் நடந்துகொள்கிறார்கள்.

நம்மைப் பற்றி சிறிது தெரிந்து வைத்திருக்கிற சிலர் "இவர்கள் குறுகிய ஒரு போக்கில் (Narrow path) போகிறார்கள்" என்று சொல்லுவது வழக்கம். அதாவது, "இவர்கள் எல்லோரோடும் இணைந்து போவதில்லை, எல்லாப் போதனைகளோடும் பொருந்திப் போவதில்லை" என்பார்கள். இவர்கள் சொல்லுவதில் உண்மை இருக்கத்தான் செய்கிறது. ஆனால், இவர்கள் நம்மைப் பற்றிய முழு உண்மையையும் தெரிவிப்பதில்லை அவற்றைப் புரிந்து கொள்ள ஆர்வமும் காட்டுவதில்லை.

முதலில் இவர்கள் நம்மைப் பற்றி எதைச் சொல்லவில்லை என்பதைப் பார்ப்போம். நாம் வரையறுக்கப்பட்ட வேதசத்தியங்களை விசுவாசிக்கி றோம் என்பதையும், அவற்றிற்கு கட்டுப்பட்டு நடப்பதால் கலப்படப் போதனை வியாபாரம் செய்பவர்களோடு எம்மால் பொருந்திப் போகமுடியாமல் இருக்கிறது என்பதையும் இவர்கள் சொல்லமாட்டார்கள். சத்தியத்தை நாம்

பலகோணங்களில் பார்க்க மறுக்கிறோம் என்பதையும், அதனால் சத்தியத் துக்கு விரோதமாகப்படுகிற எதற்கும் தலைசாய்க்க மறுத்து அவற்றை அரவணைத்துப் போவதை அடியோடு வெறுக்கிறோம் என்ற உண்மையை யும் இவர்கள் மறைத்துவிடுகிறார்கள். சொல்ல வேண்டியதை விட்டுவிட்டு நாம் குறுகியபோக்கு கொண்டவர்கள், 'எக்ஸ்டிரீம்' ஆகப் போகிறோம் என்று சொல்லி தங்களுடைய சாம்பார் இறையியல் ஊழியப் போக்கை நியாயப் படுத்திக் கொள்கிறார்கள்.

## சாம்பார் இறையியல்

இந்த சாம்பார் இறையியல் ஊழியம் எப்படிப்பட்டது? இது ஏன் ஆபத்தானது? என்பதை நான் விளக்கத்தான் வேண்டும். இந்த வழியில் போகிறவர்கள் குறைந்தபட்ச வேத சத்தியங்களை மட்டுமே அடிப்படை சத்தியங்களாக விசுவாசிக்கிறார்கள். அதாவது கர்த்தர் ஒருவர், கிறிஸ்து தேவன், இரட்சிப்பு அவருடையது, பாவிகள் மனந்திரும்ப வேண்டும், விசுவாசிகள் பரிசுத்தமாக வாழ வேண்டும், கிறிஸ்து மீண்டும் வருவார் என்ற சத்தியங்களை இவர்கள் அடிப்படை சத்தியங்களாக ஏற்று, இவற்றை எவரும் மீற முடியாது என்று கூறி, இவற்றை விசுவாசிக்கின்ற எவராயிருந்தா லும் சரி, அவர்களோடு கூட்டுவைத்துக் கொள்வார்கள். அவர்களோடு இணைந்து உழைப்பதிலும் மிகுந்த ஆர்வம் காட்டுவார்கள். இவர்கள் அடிப் படை சத்தியங்களாகக் கருதுகிற இந்தக் குறைந்தபட்ச சத்தியங்கள் மட் டுமே இவர்களைப் பொறுத்தவரையில் எந்தக் கூட்டுக்கும் அவசியமானது. ஏனைய வேத போதனைகளை எவரும் வற்புறுத்தக்கூடாது; கிறிஸ்தவ ஒற்றுமைக்கு அவற்றை அவசியமாகக் கருதக்கூடாது என்று இவர்கள் சொல்லுவார்கள்.

இந்த அடிப்படையில் இவர்களுக்கு எந்த ஸ்தாபனங்களோடும் சேர்ந்து உழைப்பது கசக்காது. பெந்தகொஸ்தே, கெரிஸ்மெடிக் இயக்கத்தாரோடு இணைந்துழைப்பது இனிக்கும், சமயசமரசத்தைப் பின்பற்றும் லிபரல் பாரம்பரிய சபைக்கூட்டும் பிடிக்கும். இறையியலைப் பொறுத்தவரையிலும் இயேசுவைப் பிரசங்கித்தால் போதும் ஏனைய சத்தியங்களை அவரவர் விருப்பப்படி பின்பற்றிக் கொள்ளலாம். மற்றவர்கள் மேல் திணிக்காமல் இருந்தால் சரி என்பது இவர்களுடைய நம்பிக்கையாக இருக்கும். இந்த முறையில் இவர்கள் சீர்திருத்தப் போதனைகளில்கூட சிலவற்றை ஏற்றுக் கொண்டு ஏனையவற்றை உடப்பில் போட்டுவிடுவார்கள். இந்தப் போக்கி னால்தான் இன்றைக்கு புதிதாக சீர்திருத்தப் போதனைகளைப் பின்பற்று கிறோம் என்று தமிழினத்தில் தோன்றியிருக்கிற சில சபைகளும் கூட ஸ்தாபனங்களோடு எந்தப் பிரச்சனையுமில்லாமல் கூட்டுச் சேருவது மட்டுமல்லாமல் ஸ்தாபன பக்தர்களை தங்கள் சபைகளிலும் பேசவிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமா? கெரிஸ்மெட்டிக் ஆராதனை வழி முறைகளையும் சபை ஆராதனையில் அனுமதிக்கிறார்கள். பெண்கள் சபை களில் பேசுவதற்கும், ஜெபிப்பதற்கும், அறிக்கைகள் வாசிப்பதற்கும், உதவிக் காரர்களாக இருப்பதற்கும் அனுமதிக்கிறார்கள். குறைந்தபட்ச சத்திய ஆர்வமே இவர்களை இப்படியெல்லாம் செய்ய வைக்கிறது. ஒரே சபையில் ஆர்மீனியனும், டிஸ்பென்சேஷனலிசத்தைப் பின்பற்றுகிறவரும், சீர்திருத்த

போதனைகளை நம்புகிறவரும், ஸ்தாபன ஊழிய பக்தரும் பல சபைகளில் ஆருயிர் தோழர்கள் போல் வாழமுடிவதற்குக் காரணம் இந்தக் குறைந்த பட்ச சத்தியப் பிடிப்பே. இன்று இந்த முறையில் செயல்படுவது மட்டுமே மெய்யான கிறிஸ்தவ ஒற்றுமை, இதையே வேதம் போதிக்கின்றது என்றுகூட இவர்கள் பறைசாற்றத் தயாராக இருக்கிறார்கள். யார் எங்கு பேச அழைத் தாலும் இவர்கள் அங்கே போகத்தயாராக இருப்பார்கள். குறைந்தபட்ச சத்தியம் மட்டும் போதும் என்பது இவர்களுடைய கொள்கையானபடி யால் எவரோடும் இவர்களால் இலகுவாக இணைந்துகொள்ள முடிகிறது. ஏற்கனவே குழம்பிப்போய் ஐம்பது ஆண்டுகால சத்திய வரட்சியில் வாடி நிற்கும் நம்மினம் மேலும் குழப்பத்துக்குள்ளாகி இன்று வழி தெரியாது நிற்பதற்கு இவர்கள் காரணமாக இருக்கிறார்கள். என்னைப் பொறுத்த வரையில் இந்தப் போக்கு சத்தியத்தின் பாதையல்ல, குழம்பிய குட்டையில் மீன்பிடிக்கும் கைங்கரியமாகும்.

இந்தப்போக்கு தவறானது; சத்தியத்துக்கு விரோதமானது என்பதை நம்மால் விளக்காமல் இருக்க முடியாது. நமது பாதையையும், சத்திய வேட்கையையும் புரிந்துகொள்ள முயலாமல் நம்மைக் குறுகிய போக்குக் கொண்டவர்கள் என்று பெயர் சூட்டுகிறவர்களுக்கு நமது பாதையென்ன என்பதை விளக்காமல் இருக்க முடியாது. இதை வாசிக்கிற விசுவாசிகளும் எமது சத்திய வேட்கையைப் புரிந்துகொண்டு அந்தப் பாதையில் செல்ல வேண்டும் என்பதே எமது வாஞ்சை.

**சத்தியத்துக்குப் பலகோணங்கள் இல்லை**

முதலில் நாம் சத்தியத்தைப் பலகோணங்கள் கொண்ட ஒரு இரத்தினக் கல்லாகப் பார்ப்பதில்லை. பட்டைதீட்டப்பட்ட ஒரு இரத்தினக்கல்லை எடுத்து வெளிச்சத்தில் பார்த்தால் அதை இப்படியும் அப்படியுமாகத் திருப்பு கிறபோது அதில் பல வர்ணங்களைப் பார்க்கலாம். ஒரே கல்லில் அத்தனை வர்ணங்களும் தெரியும். ஒளி கல்லில் எப்படி, எந்த இடத்தில் படுகிறதோ அதற்கேற்றபடி கல்லில் நிறங்கள் தெரியும். இது இரத்தினக் கல்லைப் பொறுத்தவரையில் சரியானதுதான். இந்தமுறையில் வேதத்தில் சத்தியத்தை நாம் பார்ப்பதில்லை. வேதபோதனைகளை எந்தப் பக்கத்தில் வைத்து, எப் படித் திருப்பிப் பார்த்தாலும் அதில் ஒரு நிறம் மட்டுமே தெரியும். அங்கே பலவர்ண விளையாட்டுக்கு இடமில்லை. கர்த்தர் ஆறு நாட்களில் உலகத் தைப் படைத்தார் என்றால் செத்தவன் பிழைத்து எழுந்தாலும் அது மட் டுமே சத்தியம். இந்த சபைக்கு இது பிடிக்காது, அந்த ஸ்தாபனத்துக்கு அது ஒத்துவராது, சபையில் சிலருக்கு அதில் ஏற்பு இல்லை என்பதற்காக ஆறு நாட்களை ஐந்து மில்லியன் வருடங்களாக்கும் வித்தை எங்களுக்குத் தெரியாது. இரட்சிப்பு கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கு மட்டும்தான் என்று வேதம் போதித்தால் அது பிடிக்காதவர்களுக்கு ஏற்ற விதத்தில் அதை சபையில் பிரசங்கிக்கத் தயங்கும் கூட்டத்தில் எங்களுக்கு இடமிருக்காது. உணர்ச்சி வெள்ளத்தைக் கட்டுப்படுத்தத் தெரியாமல் சபை யில் துடிக்க விரும்பும் ஆத்துமாக்களை தாஜா செய்து வைத்திருக்க வேண் டும் என்ற நோக்கத்தில் வேத ஆராதனை விதிகளைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு ஆடலுக்கும், பாடலுக்கும் இடம் கொடுக்கும் இருதயம்

நமக்கில்லை. மொத்தத்தில் இழுக்கிறவர்கள் பக்கமெல்லாம் இழுபடும் சாம்பார் இறையியலுக்கு எங்கள் அகராதியில் இடமில்லை.

எமக்கென்று ஒரு கொள்கையும், கோட்பாடும் இருக்கிறது. சீர்திருத்தப் பெரியவர்கள் எழுதி வைத்துச் சென்றுள்ள விசுவாச அறிக்கையையும், வினாவிடைப்போதனையையும் எந்தவித சந்தேகமோ, குற்ற உணர்வோ இல்லாமல் வேத சத்தியங்களாக உள்ளதை உள்ளவாறே நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அது காலத்துக்குப் பொருந்தாது; மாற்றி எழுதப்பட வேண்டும் என்ற மயக்கமெல்லாம் எங்களுக்குக் கிடையாது. முன்னூற்று ஐம்பது வருடங்களாக தொடர்ந்து அச்சில் இருந்து பல தேசங்களில் உள்ள சபைகளால் பின்பற்றப்பட்டு வரும் அந்தப் போதனைகளைக் கர்த்தரே எமது பெரியோர் மூலம் எமக்குத் தந்திருக்கிறார் என்று நாம் விசுவாசிக்கிறோம். பத்துக் கட்டளைகளை இன்று நித்திய கட்டளைகளாக நாம் பின்பற்றத் தேவையில்லை என்போரும், ஓய்வுநாளை ஓரங்கட்டிவிட்டு ஒழுங்கில்லாமல் வாழ நினைப்போரும், வரையறுக்கப்பட்ட வேத ஆரா தனை விதிகளை வெறுப்பவர்களும் அதில் கைவைத்து சில பகுதிகளை மாற்றி அமைக்க முயல்வதை நாம் நிர்த்தாட்சிணியமாக எதிர்க்கிறோம். மனிதனுடைய சிந்தனைகளையும், எழுத்துக்களையும் வேண்டுமானால் மாற்றி அமைக்கலாம் கர்த்தரின் வேதபோதனைகளில் எவரும் கைவைப் பதை எம்மால் சகித்துக்கொண்டிருக்க முடியாது. அந்த வித்தையில் கைதேர்ந்தவர்களோடு எங்களுக்கு சகவாசம் இருக்காது.

எல்லோரோடும் நாம் ஒத்துப் போவதில்லை என்பது உண்மைதான். அதை மறுக்கிற அளவுக்கு நாம் நெஞ்சுரம் இல்லாதவர்களில்லை. சத்தியத்தைப் பலகோணங்களில் பார்க்கிறவர்களோடும், தேவனுடைய திருச்சபை ஊழியத் தில் அக்கறையில்லாது சபைக்கு வெளியில் ஸ்தாபன ஊழியம் நடத்தி வருபவர்களோடும், பெந்தகொஸ்தே, கெரிஸ்மெடிக் இயக்கத்தோடும் நாம் ஒத்துழைப்பதில்லைதான். அதற்கு இறையியல் காரணங்கள் இருக்கின்றன. நாம் அடிப்படையான சத்தியங்கள் என்று விசுவாசிக்கின்ற வேத சத்தியங் களை இவர்கள் புரட்டிப்போதித்து ஊழியம் செய்துவருவதால் அவர்களோடு எம்மால் சமபந்தி இருக்க முடிவதில்லை. சாம்பார் இறையியல் கடை நடத்தி வருபவர்களையும், சமய சமரச இறையியல் கல்லூரிகளையும் நாம் நிராகரிக் கிறோம். சத்தியத்தை விற்றுப் பிழைக்கும் வித்தை எங்களுக்கு தெரியாது என்பதை வெட்கமில்லாமல் கூறிக்கொள்வதில் தவறில்லை என்பதை நாம் நம்புகிறோம். இங்கிலாந்தில் போதகராக இருந்தவரும், பல நூல்களை எழுதி யுள்ளருமான பீட்டர் ஜெப்ரி சொல்லுகிறார், "எல்லோரையும் திருப்திப்படு த்தி வாழ்வதே சூழ்நிலைக்குத் தகுந்தது (Politically correct) என்று பெரும்பா லானவர்கள் நினைக்கிறார்கள், ஆனால், வேதத்தின்படி சரியானதைச் செய் வதே (Biblically correct) கிறிஸ்தவனுடைய முக்கிய பணியாக இருக்கின்றது."

இதற்காக நாம் ஒருவரோடும் சேருவதில்லை என்று எவரும் தவறாக முடிவுகட்டிவிடக் கூடாது. ஒத்த கருத்தும், சத்திய வேட்கையும் உள்ளவர் களோடு, அவர்கள் எங்கிருந்தாலும், சத்திய வளர்ச்சியில் அவர்கள் எந்தப் படியிலிருந்தாலும் சேர்ந்து உழைப்பதிலும், இணைந்து ஐக்கியத்தில் வளர் வதிலும் நாம் அதிக அக்கறை காட்டி வருகிறோம். பெந்தகொஸ்தே, கெரிஸ்

மெட்டிக் மாயையிலிருந்தும், ஸ்தாபனங்களினதும், சொந்த ஊழியங் களினதும் பிடியில் இருந்தும் விலகி கர்த்தரின் வேதத்திற்கு கட்டுப்பட்டு திருச்சபைக்குத் தம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று வருபவர்களை நாம் இருகை நீட்டி வரவேற்கிறோம்; வாழ்த்துகிறோம். சத்தியம் எங்கெல் லாம் தலையெடுத்து வளர்கிறதோ, அசத்தியத்தைப் புறமுதுகு காட்டி ஓட வைக்கிறதோ அங்கெல்லாம் எங்கள் நிழலிருக்கும்; கால் பதியும். உள்ளத்தில் ஒன்றை வைத்துக்கொண்டு நுனி நாக்கினால் பேசுகிறவர்களல்ல நாங்கள். எங்களைச் சேர்ந்தவர்களுக்கிடையில் இருக்கும் உறவு அறிவு பூர்வமானதும், உணர்வுபூர்வமானதுமாகும். அது இறுக்கமானது; உடைக்க முடியாதது. எங்களிடத்தில் ஊழியப் பகட்டைப் பார்க்க முடியாது. பண மோகத்தின் அடையாளம் இருக்காது. சுவிசேஷ வாஞ்சையோடு சீர்திருத்த சபைகளை அமைப்பதும், வளர்ப்பதுமே எங்கள் வாழ்க்கையின் இலக்கு.

## இயேசுவின் வழியே நம் வழி

இதெல்லாம் இந்த நூற்றாண்டில் நாம் கண்டு பிடித்து பின்பற்றி வரும் புதிய ஒழுக்கங்களல்ல. விண்ணிலிருந்து அற்புதமாக இவற்றை நாம் பெற்றுக்கொண்டதுமில்லை. எமக்கு வழிகாட்டிகள் இயேசு கிறிஸ்துவும், அவருடைய அப்போஸ்தலர்களும்தான். சத்தியம் விடுதலையாக்கும் என்று சொன்ன இயேசு சத்தியத்தைப் பிசாசிடம் விற்கவில்லை. சோதனைக் காலத்தின்போது சத்தியத்தின் மூலம் அவர் பிசாசை வென்றார். கூட இருந்த பேதுருகூட ஒரு தடவை உங்கள் போதனைகளை மாற்றிக்கொள் ளுங்கள் என்றபோது, வெளியே போ சாத்தானே என்றார் நம் தேவன். அவரோடு இறுதிவரை இருந்த கூட்டம் சிறியது. மிக அருகில் இருந்த சக ஊழியர்கள் பதினொருவர் மட்டுமே. பகட்டு ஊழியத்தை அவர் நாடியிருந் தால், சாம்பார் இறையியல் கடை நடத்த அவர் விரும்பியிருந்தால் இந்த உலகத்தில் ஒரு பெரிய மனிதராக அவரால் ஊர்வலம் வந்திருக்க முடியும். அந்தச் சோதனையை அவர் வாழ்நாள் முழுவதும் போராடி அதில் வெற்றி கண்டார். சமயசமரசப் போக்கு அவரில் என்றும் இருந்ததில்லை. போலிப் போதகர்களான பரிசேயரோடும், சதுசேயரோடும் அவர் இறையியல் சமரசம் பேசியதில்லை. உலகத்தை தாஜா செய்து ஊழியம் செய்ய அவர் யூதர்களோடும், ரோமரோடும் போலி உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள வில்லை. ஒருவரோடும் சேரமாட்டேன் என்கிறானே, கொள்கைகளை மாற்றிக்கொண்டு எங்களோடு ஒத்துப் போகமாட்டேன் என்கிறானே என் றெல்லாம் சுற்றி இருப்பவர்கள் தூற்றியபோதும் இயேசு மசியவில்லை; முன்வைத்த காலை ஒருபோதும் பின்வைத்ததில்லை. இயேசு செய்ததைவிட நாம் வேறென்னத்தை செய்துகொண்டிருக்கிறோம். அவர் குறுகிய போக் கைக் (Narrow path) கொண்டிருந்தார்; அதுவே நம்வழியுமானது.

இதேவழியைத்தான் அப்போஸ்தலர்களும் பின்பற்றினார்கள். பவுலும், பேதுருவும், யோவானும் இந்த உலகத்தில் சத்தியத்தை விற்று எல்லோ ரோடும் ஒத்துப்போய் ஊழியம் செய்யப் புறப்படவில்லை. மனிதர்களைப் பிரியப்படுத்துகிறவன் அல்ல நான் என்று பவுல் கலாத்தியருக்கு சொன் னார். மனிதர்களைப் பிரியப்படுத்துகிறவனானால் யூதர்கள் ஏன் என்னை வெறுக்கிறார்கள்? என்று கேட்டார். சகலருக்கும் துதிபாடி தன்னை வளர்த்

துக்கொள்ளும் வித்தை அவருக்குத் தெரியவில்லை. சன்பலாத்தும், தொபி யாவும், கேஷேமும் கூடிவந்து எங்களோடு சேர்ந்துகொள், எல்லோரும் சேர்ந்து உழைக்கலாம் என்றபோது எனக்கு வேறு முக்கிய வேலை இருக் கிறது என்று பதிலளித்து கர்த்தரின் பணியைக் கருத்தோடு செய்த நெகேமி யாவைப் போன்றவர்கள் பவுலும், ஏனைய அப்போஸ்தலர்களும்.

நண்பர்களே! இதயமில்லாதவர்களுக்கும், ஊழியத்தை வைத்து தங்களை வளர்த்துக் கொள்ளக் கிளம்பியிருப்பவர்களுக்கும் நம் போக்கு குறுகியதாக வும் எக்ஸ்ட்ரீமாகவும்தான் தெரியும் - காமாலைக் கண்ணனுக்கு காண்ப தெல்லாம் மஞ்சளாய் இருப்பதுபோல். மனந்தளராமல் முன்னேறுங்கள். சத்தியத்தை உறுதியாகப் பற்றிக்கொள்ளுங்கள். சுவிசேஷ வாஞ்சையுடன் பாரத்தோடு உழையுங்கள். திருச்சபை மேல் கிறிஸ்து வைத்த அன்பைக் காட்டுங்கள். நம்கூட்டத்தை நேசிக்கப் பழகுங்கள். போலிகளை இனங்கண்டு கொள்ளப் பழகிக்கொள்ளுங்கள். இயேசு வரும்வரையும் நமக்கு வேலை இருக்கிறது. நாமிருக்கப் போகும் நாட்களும் குறைவாக இருக்கின்றன. இது பேசி வீணாக்க வேண்டிய நேரமல்ல. உழைத்துப் பலருக்கும் ஊக்கமளிக்க வேண்டிய நேரம். தேவ இராஜ்யப் பணிகள் ஏராளமாய் நம்முன் குவிந்திருக் கின்றன. ஜெபியுங்கள், கரத்தில் எடுத்த சம்மட்டியைக் கீழே போடாமல் உழையுங்கள். சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார்; நம் பணிகளுக்கு அவர் நிச்சயம் துணை போவார்.

## விசுவாசம் எனக்கு விபச்சாரம் அல்ல!

*விசுவாசம் எனக்கு விபச்சாரம் அல்ல*
*வேறு சிலர் அதைப் பயன்படுத்துவதுபோல*
*தேவ கிருபை என் வாழ்க்கையில் விளையாடிப்*
*போக்கியது என் பாவத்தை - இயேசுவின்*
*சிலுவைப் பணி மூலம்*
*விசுவாசம் - கர்த்தர் தந்த ஈவு அது!*
*என் சுயநலத்தின் வெளிப்பாடு அல்ல*
*அதன் மூலம் என் நேசரைப் பற்றிக்கொண்டேன்*
*அவரை நேசிக்கிறேன்; ஜீவிக்கிறேன்*
*விசுவாசம் என்னை உயிர்வாழ வைக்கிறது*
*அது என் ஜீவநாடி; உயிர்மூச்சு*
*விசுவாசமில்லாவிட்டால் நான் வெறும் கூடு*
*உயிரற்ற சடலம்;*
*உதிரும் காய்ந்த சருகு;*
*மரண ஓலமிடும் மயானம்;*
*விசுவாசத்தை விலைபேசி*
*விபச்சாரமாக்குவதற்கு*
*நான் என்ன விலைமாதா?* - சுபி . .

# சிக்கலான சில வேதப்பகுதிகள்

(வேதத்தில் விளங்கிக்கொள்வதற்கு கடினமான சில பகுதிகள் உண்டு. சிலர் அவற்றைக் குழப்பமான பகுதிகளாகவும், விளங்கிக்கொள்ளவே முடியாத பகுதிகளாக வும் கருதி அலட்சியப்படுத்திவிடுகிறார்கள். வேறுசிலர் அப்பகுதிகளுக்கு தவறான விளக்கங்களைக் கொடுத்துவிடுகிறார்கள். வேதத்தை எழுத்தில் தந்திருக்கும் கர்த்தரே விளங்கிக்கொள்வதற்கு கடினமானதாக இருக்கும் பகுதிகளையும் தந்துள்ளார். அவற்றை முறையாக, கவனத்தோடும் ஆவியின் துணையோடும் ஆராய்ந்து படித்தால் கர்த்தர் அவற்றின் மூலம் வெளிப்படுத்தும் சத்தியங்களை நாம் இலகுவாக விளங்கிக் கொள்ளலாம். அத்தகைய வேதப்பகுதிகளை வாசகர்களின் நன்மை கருதி ஆராய விருக்கிறோம். போதகர் ஃபிரெட் சீபர்ட் **(Fred Siebert, Australia)** இந்தப் பகுதிகளுக்கு விளக்கமளிக்கிறார்.)

*கடந்த இதழில் யூதாவில் ஒரு பகுதியை ஆராந்தோம். இந்த இதழில் பவுலின் நிருபங்களில் ஒன்றில் காணப்படும், சிக்கலானதாக நமக்குத் தோன்றுகின்ற ஒரு பகுதியை ஆராய்வோம். இந்தப் பகுதி பெண் களின் இரட்சிப்பைக் குறித்து விளக்குகின்றது.*

> *"அப்படியிருந்தும், தெளிந்த புத்தியோடு விசுவாசத்திலும் அன்பி லும் பரிசுத்தத்திலும் நிலைகொண்டிருந்தால், பிள்ளைப் பேற்றி னாலே இரட்சிக்கப்படுவாள்" (1 தீமோத்தேயு 2:15).*

## இந்தப் பகுதி அமைந்திருக்கும் சந்தர்ப்பம் விளக்கும் உண்மைகள்

*பவுல் வாலிபப் போதகனாக இருந்த தீமோத்தேயுவுக்கு எழுதிய முதலாம் நிருபத்தில் திருச்சபை நடவடிக்கைகளைப் பற்றி அவசியமான போதனை களை அளிக்கிறார். கர்த்தரின் சபையில் அங்கம் வகிப்பவர்கள் அந்தச் சபையில் தேவபயத்தோடு எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதை அறிந்திருப்பது மிகவும் அவசியம் என்கிறார் பவுல்.*

> *"நான் உன்னிடத்திற்கு சீக்கிரமாய் வருவேனென்று நம்பியிருக் கிறேன். தாமதிப்பேனாகில் தேவனுடைய வீட்டிலே நடக்க வேண்டியவகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுது கிறேன்; அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத் துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது." (1 தீமோத்தேயு 3:14–15).*

*இந்த நிருபத்தின் இரண்டாம் அதிகாரத்தில் ஆராதனைக்காக சபை கூடிவரும்போது ஆத்துமாக்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்று பவுல் விளக்குகிறார். முதலில், சபைகூடிவருகிறபோது எல்லோருக்குமாக ஜெபம் செய்ய வேண்டியதன் அவசியத்தை உணர்த்தி, அதை முக்கியமாக ஆண்களே சபையில் பரிசுத்தத்தோடும், சமாதானத்துடனும், ஒற்றுமை யுடனும் செய்ய வேண்டும் என்று போதிக்கிறார்.*

*"அன்றியும் புருஷர்கள் கோபமும் தர்க்கமும் இல்லாமல் பரிசுத்த மான கைகளை உயர்த்தி, எல்லா இடங்களிலேயும் ஜெபம் பண்ண வேண்டுமென்று விரும்புகிறேன்." (1 தீமோத்தேயு 2:8).*

அடுத்ததாக இந்தப் பகுதியில் பவுல் திருச்சபை ஆராதனைவேளையில் பெண்களுடைய பங்கை விளக்க ஆரம்பிக்கிறார். பொது ஆராதனைக்கு வருகிறபோது அவர்கள் எத்தகைய ஆடை அணிகளை அணிந்து வர வேண் டும், எவ்விதமாக நடந்துகொள்ள வேண்டும் என்பதை விளக்கிவிட்டு, அவர் கள் எந்தவிதத்திலும் பொது ஆராதனையின்போது சபையில் போதிப் பதையோ அல்லது தலைமை வகிப்பதையோ அல்லது ஆண்கள் மேல் அதிகாரம் செலுத்துவதையோ செய்யக்கூடாது என்று விளக்குகிறார். இதற்கு பவுல் பழைய ஏற்பாட்டில் சிருஷ்டியில் கர்த்தர் ஏற்படுத்தியிருந்த விதியை யும், அதற்குப்பிறகு பாவத்தினால் ஏற்பட்ட வீழ்ச்சியையும் உதாரணங் காட்டி தனது போதனைக்கான காரணங்களைச் சுட்டிக்காட்டுகிறார்.

பொது ஆராதனையின்போது பெண்கள் சபையில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை பவுலின் பின்வரும் வாசகங்கள் தெளிவாக்கு கின்றன.

*"ஸ்திரீயானவள் எல்லாவற்றிலும் அடக்கமுடையவளாய் இருந்து, அமைதலோடு கற்றுக்கொள்ளக்கடவள்." (1 தீமோத்தேயு 2:11)*

பவுலின் இந்த வார்த்தைகள் புதிய ஏற்பாட்டின் ஏனைய பகுதிகளில் அவர் தந்துள்ள போதனைகளோடு பொருந்தியதாக இருக்கின்றன.

*"ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறாரென்றும், ஸ்திரீக்குப் புருஷன் தலையாயிருக்கிறானென்றும், கிறிஸ்துவுக்குத் தேவன் தலையாயிருக்கிறாரென்றும், நீங்கள் அறியவேண்டுமென்று விரும்புகிறேன்." (1 கொரிந்தியர் 11:3).*

*"தேவன் கலகத்துக்குத் தேவனாயிராமல் சமாதானத்திற்குத் தேவனாயிருக்கிறார், பரிசுத்தவான்களுடைய சபைகளெல்லாவற்றி லேயும் அப்படியே இருக்கிறது. சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக் கடவீர்கள்; பேசும்படிக்கு அவர்களுக்கு உத்தர வில்லை; அவர்கள அமர்ந்திருக்க வேண்டும்; வேதமும் அப்படியே சொல்லுகிறது." (1 கொரிந்தியர் 14:33–34).*

அதற்குப் பிறகு ஆதியில் ஏவாளே முதலில் பிசாசின் பேச்சைக் கேட்டு ஏமாந்துபோய் அதனால் பாவத்துக்குள்ளானாள் என்பதை விளக்கி தொடர்ந்து, "அப்படியிருந்தும், தெளிந்த புத்தியோடு விசுவாசத்திலும் அன்பிலும் பரிசுத்தத்திலும் நிலைகொண்டிருந்தால், (பெண்) பிள்ளைப் பேற்றினாலே இரட்சிக்கப்படுவாள்" (1 தீமோத்தேயு 2:15) என்று கூறுகிறார்.

## வசனத்திற்கான விளக்கம்

நாம் ஆராய்ந்து கொண்டிருக்கும் வசனத்தில் பெண் பிள்ளைப் பேற்றினாள் இரட்சிக்கப்படுவாள் என்று பவுல் கூறுகிறபோது அது எதைக் குறிக்கின்றது என்பதை ஆராய்வது அவசியம். சமுதாயத்தில் ஆணும், பெண்ணும் எந்தவிதமான வேறுபாடுமின்றி கிருபையின் மூலமாக கிறிஸ்து

வுக்குள் இரட்சிப்பை அடைகிறார்கள் என்றல்லவா வாசிக்கிறோம்? அப் படியானால் பவுலின் வார்த்தைகளுக்குப் பொருளென்ன? கலாத்தியர் நிருபத்தில் பவுல் பின்வருமாறு கூறுகிறார்:

> "நீங்கள் எல்லோரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தி னால் தேவனுடைய புத்திரராய் இருக்கிறீர்களே. ஏனெனில், உங்க ளில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே. யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீன னென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்க ளெல்லோரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்." (கலாத்தியர் 3:26-28).

இந்த வசனத்தை வைத்துப் பார்த்தால் 1 தீமோத்தேயுவில் பவுல் ஆத்மீக இரட்சிப்பைக் குறித்து விளக்கியிருக்க முடியுமா? அத்தோடு, வேறு சிலர் பவுல் ஏதோ ஒருவிதத்தில் பெண்களுடைய பிரசவ வேதனை குறையப் போகிறது என்றும், அவர்கள் விசேடமான ஒரு பாதுகாப்பை அடைவார் கள் என்றும் கூறுகிறார்களே அது சரியா? என்பது போன்ற கேள்விகளுக்கு நாம் பதிலளித்தாக வேண்டும்.

"நீ கர்ப்பவதியாயிருக்கும்போது உன் வேதனையை மிகவும் பெருகப் பண்ணுவேன்; வேதனையோடே பிள்ளை பெறுவாய்" என்று கர்த்தர் ஏவாளைப் பார்த்து ஆதியாகமம் 3:16ல் கூறியிருப்பதற்கும் இந்த வசனத்திற் கும் தொடர்பிருப்பதை மறுக்க முடியாது. இருந்தபோதும் இந்த உலகத்தில் விசுவாசிகளான பெண்களுடைய பிரசவ வேதனை அவிசுவாசிகளான பெண்களைவிடக் குறைவாக இருக்கும் என்று வேதத்தில் நாம் எங்கும் வாசிப்பதில்லை. எல்லாப் பெண்களும் தொடர்ந்து சமமாகவே பிரசவ வேதனையை அனுபவிக்கிறார்கள் என்பதை அனுபவமும் சுட்டிக்காட்டு கிறது.

பவுல் ஆத்மீக இரட்சிப்பைப் பற்றியும், நித்திய இரட்சிப்பைப் பற்றியும் தான் இந்த வசனத்தில் விளக்குகிறார் என்பதை பல முக்கிய காரணங்கள் நமக்கு வலியுறுத்துகின்றன.

' 'இரட்சிப்பு' என்ற இதே வார்த்தையைத் தான் பவுல் ஏற்கனவே இந்த அதிகாரத்தில் பயன்படுத்தி, "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தி யத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்." (1 தீமோத்தேயு 2:4) என்று விளக்கியிருக்கிறார். இதே வார்த்தையை இதற்கு முந்திய அதிகாரத்திலும் பயன்படுத்தி, "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கீ கரிப்புக்கும் பாத்திரமுமானது; அவர்களில் பிரதான பாவி நான்." (1 தீமோத் தேயு 1:15) என்று கூறியிருக்கிறார். புதிய ஏற்பாட்டில் எந்த இடத்தில் இந்த வார்த்தையைப் பயன்படுத்தினாலும் தேவ கோபத்திலிருந்தும் பாவத்தி லிருந்தும் விடுபட்டு ஆத்மீக விடுதலை அடைவதைக்குறித்தே பவுல் பயன் படுத்தியிருக்கிறார்.

அப்படியானால் ஆத்மீக விடுதலையைக் குறிக்கும் கிருபையின் மூலமாக கிறிஸ்துவில் அடையும் இரட்சிப்பு 1 தீமோத்தேயு 2:15ல் தந்துள்ள விளக்கத்தோடு எப்படி பொருந்திப்போக முடியும்? இரட்சிப்பைக்குறித்து வேதம் முழுவதும் தரப்பட்டுள்ள பரந்த பொதுவான விளக்கங்களின் அடிப்படையிலேயே அதை விளங்கிக் கொள்ள முடியும்.

அப்படி வேதம் இரட்சிப்பைக்குறித்து எப்படிப்பட்ட விளக்கத்தை அளிக்கிறது என்பதைப் பார்ப்போம். 'இரட்சிக்கப்படுகிறோம்' என்ற வார்த்தையை நாம் பயன்படுத்துகிறபோது பெரும்பாலும் கிறிஸ்துவை நாம் அறிந்துகொள்ளுகிற அனுபவத்தையே குறிக்கிறோம். ஆனால், வேதம் இரட்சிப்பைக்குறித்து விளக்குகின்றபோது அதை மூன்றுவிதமான கால வேறுபாட்டு அர்த்தத்தில் விளக்குகின்றது. இறந்தகாலத்தில், நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்ற அர்த்தத்தில் அது பயன்படுத்தப்பட்டிருக்கிறது. நிகழ்காலத்தில் நாம் இரட்சிப்பின் அனுபவத்தில் வளர்ந்து கொண்டிருப்பதை அது குறிப்பதாக இருக்கலாம். நித்திய இரட்சிப்பை அடையாளம் காட்டி எதிர்காலத்தில் நாம் இரட்சிக்கப்படப்போவதை அது விளக்குவதாக இருக்கலாம். இந்த அர்த்தங்களில் இருக்கும் கீழ் வரும் இரு வசனங்களையும் வாசித்துப் பாருங்கள்.

> "இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்களாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே. நாம் தேவனுக்கு சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்டபின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே" (ரோமர் 5:9-10).

> "நித்திரையைவிட்டு எழுந்திருக்கத்தக்க வேளையாயிற்றென்று, நாம் காலத்தை அறிந்தவர்களாய், இப்படி நடக்க வேண்டும்; நாம் விசுவாசிகளானபோது இரட்சிப்பு சமீபமாயிருந்ததைப் பார்க்கிலும் இப்பொழுது அது நமக்கு அதிக சமீபமாயிருக்கிறது." (ரோமர் 13:11).

ஆகவே, கிருபையின் மூலமாக கிறிஸ்துவில் நாமடையும் இரட்சிப்பு பற்றிய விளக்கத்தைப் பாதித்துவிடாதபடி 1 தீமோத்தேயு 2:25ல் காணப்படும் 'இரட்சிப்பு' எனும் வார்த்தையை இரட்சிப்பு பற்றி வேதம் தரும் பரந்த விளக்கத்தின் அடிப்படையில் பயன்படுத்த முடியும்.

இந்தப் பகுதியில் பவுல் இரட்சிப்பை நாம் எவ்வாறு அடைவது என்பது பற்றி விளக்கமளிக்கவில்லை. மாறாக, நாம் ஏற்கனவே பெற்றுக்கொண்டுள்ள இரட்சிப்புக்குரிய வாழ்க்கையை எவ்வாறு வாழ்வது என்பது பற்றியே விளக்கமளிக்கிறார். அதாவது, பவுல் கிறிஸ்துவுக்குள் நாமடைந்த இரட்சிப்புக்குரிய ஆரம்ப அனுபவத்தைப் பற்றிப் பேசாமல் விசுவாசிகளாகிய பெண்கள் இறுதிக் காலத்தில் நித்திய இரட்சிப்பை எவ்வாறு அடைவது என்பதை விளக்குகிறார். நித்திய இரட்சிப்பைப் பற்றி விளக்குகின்ற வேதம் அதை விசுவாசிகளின் பரிசுத்தத்திற்கான விடாமுயற்சியுடனும் ஆவிக்குரிய

கனிகொடுத்தலின் அவசியத்தோடும், ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க முடியாதபடி இணைத்தே விளக்குகின்றது. நித்திய இரட்சிப்பு என்று நாம் கூறுவது விசுவாசி இறுதிவரை கர்த்தருக்கு விசுவாசமாக பரிசுத்தமாக இருந்து அவருடைய வருகையின்போது அவரால் ஏற்றுக்கொள்ளப்படு வதையே குறிக்கிறோம். கீழ்வரும் வசனங்கள் விசுவாசியின் விடாமுயற்சி யின் அவசியத்தையும், நித்திய இரட்சிப்பைப் பற்றியும் விளக்குகின்றன.

> "என் நாமத்தினிமித்தம் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள். முடிவு பரியந்தமும் நிலைத்து நிற்பவனே இரட்சிக்கப்படுவான்." (மாற்கு 13:13).

> "நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது." (எபிரேயர் 10:36).

## பிள்ளைப் பேறு எது?

மறுபடியும் இந்த வசனம் அமைந்து காணப்படும் சந்தர்ப்பத்தை நாம் கவனிப்பது அவசியம். இந்தப் பகுதியில் பவுல் கர்த்தரின் சபையில் ஆண் களுடையதும், பெண்களுடையதுமான பணிகளைப் பற்றி விளக்கமளித்துக் கொண்டு வருகிறார். ஆண்கள் சபையில் ஆத்மீகத் தலைமையை அளிப்ப தோடு பெண்கள் அவர்களுக்கு அமைந்து நடக்க வேண்டுமென்பது அவரு டைய போதனை. ஆண்களிலிருந்து வேறுபட்ட உருவத்தோடும், பணிக ளோடும் தங்களைக் கர்த்தர் படைத்துள்ளார் என்பதைப் பெண்கள் உணர வேண்டும்.

உலகத்தில் எத்தனையோ காரியங்களை ஆண்களும், பெண்களும் சமமாக செய்ய முடிந்தபோதும் ஒரு காரியத்தை மட்டும் ஆண்களால் ஒருபோதும் செய்ய முடியாது – அவர்களால் ஒருபோதும் பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ள முடியாது.

இந்த வசனத்தில் பவுல் பிள்ளை பெறுவதை ஒரு அடையாள வார்த்தை யாகப் பயன்படுத்துகிறார். அதாவது, பெண்களுடைய பணிகளைக் குறிக் கும் வார்த்தையாகப் பயன்படுத்துகிறார். எல்லாப் பெண்களாலும் பிள்ளை களைப் பெற்றுக்கொள்ள முடியாதென்பது பவுலுக்கு நன்றாகத் தெரியும். அதேவேளை, வேதம் திருமணம் செய்வதை வழமையானதாகக் கருதுகிற போதும் சிலசந்தர்ப்பங்களில் சிலர் திருமணம் செய்துகொள்ளாமலிருப்ப தையும் அனுமதிக்கிறது. ஆகவே, பிள்ளைப் பேறு இந்தப் பகுதியில் பெண் களின் கடமைகளைக் குறிக்கும் அடையாள வார்த்தையாக பயன்படுத்தப் பட்டிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். பெண்கள் தங்களைக் கர்த்தர் படைத்துள்ளவிதத்திற்கு அமைந்து தங்களுடைய பணிகளை செய்துவருகிறதே அவர்களுக்கு சமுதாயத்தில் பாதுகாப்பானது என்பதை இந்த வார்த்தையின் மூலம் பவுல் உணர்த்துகிறார்.

பவுலின் இந்தப் போதனையின்படி பெரும்பாலான விசுவாசிகளான பெண்கள் தங்களுடைய கணவன்மாருக்கு கீழ்படிந்து நடந்துவருவதே அவர்களுக்கு சமுதயத்தில் பாதுகாப்பானதாகும். தங்களுடைய சொந்தக் கணவன்மாரே தங்களுக்கு ஆத்மீகத் தலைவர்கள் என்பதை அவர்கள்

உணர்ந்து அவர்களோடு இணைந்து பிள்ளைகளைக் கர்த்தரின் வழியில் நடத்தி வருவதே அவர்களுடைய பிரதான பணியாக இருக்கின்றது. அதேநேரம், பவுலின் போதனையின்படி எல்லாப் பெண்களும், அதாவது திருமணமானவர்களும், திருமணமாகாதவர்களும் சபையிலும், வீட்டிலும் ஆண்களுக்கு கர்த்தர் கொடுத்துள்ள தலைமைப்பதவியை எந்தவிதத்திலும் ஆக்கிரமிக்காமலிருப்பது அவர்களுக்கு கர்த்தரிட்டுள்ள கட்டளையாக இருக்கின்றது.

இந்தப் போதனையே வேதத்தின் ஏனைய பகுதிகளிலும் கொடுக்கப்பட்டிருக்கின்றது. கீழ்வரும் இரு வசனங்களும் இதேயே விளக்குவதாக இருக்கின்றன.

> *"ஆகையால் இளவயதுள்ள விதவைகள் விவாகம் பண்ணவும், பிள்ளைகளைப் பெறவும், வீட்டை நடத்தவும், விரோதியானவன் நிந்திக்கிறதற்கு இடமுண்டாக்காமலிருக்கவும் வேண்டுமென்றிருக்கிறேன்." (1 தீமோத்தேயு 5:14).*

> *"தேவவசனம் தூஷிக்கப்படாதபடிக்குப் பாலிய ஸ்திரீகள் தங்கள் புருஷரிடத்திலும், தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், வீட்டில் தரித்திருக்கிறவர்களும், தங்கள் புருஷர்களுக்கு கீழ்ப்படிகிறவர்களுமாயிருக்கும்படி, அவர்களுக்குப் படிப்பிக்கத்தக்க நற்காரியங்களைப் போதிக்கிறவர்களுமாயிருக்கவும் முதிர்வயதுள்ள ஸ்திரீகளுக்குப் புத்தி சொல்லு." (தீத்து 2:4–5).*

### பரிசுத்தத்தில் பூரணத்துவமடைதல்

விசுவாசிகளான பெண்கள் கர்த்தர் தங்களைப் படைத்திருந்த நிலையில் இருந்து தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கடமைகளை வேதத்திற்கு அடிபணிந்து "தெளிந்த புத்தியோடு விசுவாசத்திலும் அன்பிலும் பரிசுத்தத்திலும் நிலைகொண்டிருந்தால் . . . இரட்சிக்கப்படுவாள்" என்று பவுல் கூறுகின்றார். நித்திய இரட்சிப்பை அடைவதானால் விசுவாசிகளான பெண்கள் இங்கே பவுல் கூறுகின்ற கிருபைகளில் நித்தமும் வளர்ந்து வருவது அவசியம். விசுவாசத்திலும், பரிசுத்தத்திலும் அவர்கள் வளர வேண்டும். அதைத் தாங்கள் வேத அடிப்படையில் செய்யவேண்டிய கடமைகளின் மத்தியில் செய்ய வேண்டும்.

> *"இப்படிப்பட்ட வாக்குத்தத்தம் நமக்கு உண்டாயிருக்கிறபடியினால், பிரியமானவர்களே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்." (2 கொரிந்தியர் 7:1).*

பெண்கள் ஏவாளைப் போல நடந்து தங்கள் கணவன்மாருடைய தலைமைத்துவத்தை ஆக்கிரமிக்கத் தேவையில்லை. அப்படி செய்தால் ஏவாளைப் போலவே அவர்கள் வஞ்சிக்கப்பட்டு பாவத்திற்குள்ளாவார்கள். மற்றவர்களுடைய வேலையை நாம் செய்யாவிட்டால் கர்த்தரின் காரியம் நடக்காது என்று நாம் நினைக்கக்கூடாது. கர்த்தரின் பணி நிச்சயம் நடக்கும்.

# பெண்கள்! பெண்கள்!

பெண்கள் இன்றைக்கு திருச்சபைகளிலும், ஸ்தாபனங்களிலும் ஊழியத்தில் ஈடுபட்டு வருவது பெருமளவுக்கு அதிகரித்திருக்கிறது. பிரசங்கம் செய்வதும், போதகராகவும், சுவிசேஷ ஊழியராகவும, உதவிக்காரராகவும் இருப்பதோடு சபைகளில் பொது ஆராதனையின்போது ஜெபிப்பதும், அறிக்கை வாசிப்பதும் பெண்கள் இன்றைக்கு செய்துவரும் செயல்களாக இருக்கின்றன. இப்படிச் செய்வதை பெண் விடுதலையாகக் கூட கிறிஸ்தவர்கள் என்று தம்மை அழைத்துக் கொள்ளுகிறவர்கள் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள்.

பெண்கள் இன்று சமுதாயத்தில் உயர்ந்த இடத்தில் இல்லை என்பது உண்மைதான். பணக்காரர்கள் வீட்டிலும், அந்தஸ்தில் உயர்ந்த இடத்தில் இருப்பவர்களின் வீட்டில் வேண்டுமானால் பெண்களுக்கு சில சுதந்திரங்கள் உண்டு என்று சொல்லலாம். நகர்புறங்களில் வாழ்கிற பெண்களும் சுதந்திரமாக வாழ முடிகின்றது. ஆனால், பெண் வர்க்கத்தில் இவர்கள் வெறும் மைனோரிட்டிதான். பெண் வர்க்கம் இன்றும் அடிமைத் தளையில் தான் இருந்து வருகிறது. இது தகாது என்பதை நாம் ஒத்துக்கொள்கிறோம். ஆனால், இதற்கும் திருச்சபையில் பெண்கள் வகிக்க வேண்டிய பணியைப் பற்றி வேதம் போதிக்கும் போதனைகளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பது அனேகருக்குப் புரியாததுதான் விந்தையாக இருக்கின்றது. திருச்சபையில் பெண்கள் தங்களுக்கு கர்த்தரால் விதிக்கப்படாததை செய்வது அவருக்குக் அடங்காமல் நடக்கும் பெரும் பாவம் என்பதை பெண் வர்க்கம் அறியாமல் இருப்பதும் அவலம்தான். திருச்சபை, குடும்பம், சமுதாயம் என்று பிரித்து அவ்விடங்களிலெல்லாம் பெண்கள் எந்தவிதமாக நடந்துகொள்ள வேண்டும் என்பதை வேதம் தெளிவாக விளக்குகிறது. இப்படி விதித்து வைத்திருப்பவர் கர்த்தரே. கர்ததருடைய எண்ணங்கள் தூய்மையானவை. அவருடைய வழிகளைப் புரிந்து கொள்ளாதவர்கள்தான் வேதத்தை மதிக்காமல் பவுல் பெண்களுக்கு எதிரானவர் என்றும், பெண்களைப் பற்றிய வேத போதனைகள் நாம் வாழும் பண்பாட்டிற்கேற்றபடி மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று வேதத்துக்கு விரோதமான பாதையில் போய்க்கொண்டிருக்கிறார்கள்.

## பெண்ணின் பாதுகாப்பு வளையம்

பெண்கள் திருச்பையில் இப்படித்தான் நடந்துகொள்ள வேண்டும் என்று கர்த்தர் விதித்திருக்கும் நியதி சமுதாயத்தில் அவர்கள் பக்திவிருத்தியோடும், பாதுகாப்போடும் வாழத்தான் என்பது இவர்களுக்கு புரியாமலிருக்கிறது. கர்த்தரின் விதிகளை மீறும் விசுவாசிகளான பெண்கள் சமுதாயத்தில்

*ஆத்மீக விருத்தியோடு வாழ முடியாததோடு, நித்திய இரட்சிப்புக்கான பாதையில் பல்வேறு இடறல்களையும் சந்திக்க வேண்டும் என்பதைத் உணர்வது அவசியம். பெண்களுக்கு நன்மை செய்கிறோம், அவர்களை மதிக்கிறோம், அவர்களுக்கு கொடுக்க வேண்டிய இடத்தைக் கொடுக்கிறோம் என்று பெண் விடுதலையை நாடும் புத்திசாலிகளாக தம்மைப் பறைசாற்றிக்கொண்டு செயல்படுபவர்கள் கர்த்தரின் கோபத்துக்குள்ளாகப் போவது உறுதி.*

*இந்த இதழில் (சிக்கலான சில வேதப்பகுதிகள், பக்கம் 22) போதகர் பிரெட் சீபர்ட்* (Fred Siebert) *பெண்கள் சம்பந்தமான போதனையை அளிக்கும் ஒரு வேதப்பகுதிக்கு விளக்கமளித்துள்ளார். அதைத் தவறாது வாசியுங்கள். அந்தப் பகுதி கர்த்தர் பெண்களுக்கு சமுதாயத்தில் எதைச் செய்வது தகும், தகாது என்று விதித்திருப்பதை விளக்குகிறது. அதை மீறுவது ஆபத்தானதும், நெருப்போடு விளையாடும் செயலுமாகும்.*

## பெண்களுக்கு நாம் விரோதிகளா?

*பெண்கள் போதகர்களாகவும், பிரசங்கிகளாகவும் இருக்கக்கூடாது என்பதை ஒத்துக்கொள்கிற பலர், பெண்கள் வேறுபணிகளை திருச்சபையில் செய்யலாம் என்று வாதாடுகிறார்கள்; பெண்களை பல்வேறு பணிகளில் பயன்படுத்துகிறார்கள். உதாரணமாக எனக்கு தெரிந்த சில சபைகளில் பெண்கள் இன்றைக்கு பொது ஆராதனையில் பெருங்குரலெடுத்து ஜெபிக்கிறார்கள். திருவிருந்து கொடுக்கும்போது ஜெபிப்பது மட்டுமன்றி அதை விநியோகிக்கவும் செய்கிறார்கள். ஆராதனை வேளையில் சபையில் அறிக்கை வாசிக்கிறார்கள். உதவிக்காரர்களாகவும் பணிபுரிகிறார்கள். இந்தக் காரியங்களைச் செய்ய அனுமதிக்காத நம்மைப் பார்த்து பெண் விரோதிகள் என்றும், பெண்களுக்கு சுதந்திரம் கொடுக்காதவர்கள், அவர்களை அடிமைகளாக வைத்திருப்பவர்கள் என்றெல்லாம் குற்றஞ்சாட்டுவார்கள். இவர்கள் சொல்லுவதில் ஏதாவது உண்மை இருக்கிறதா என்று ஆராய்வது அவசியம்.*

*முதலில் பெண்களுக்கு நாம் விரோதிகளல்ல, பெண்கள் கர்த்தரின் வார்த்தைப்படி வாழ வேண்டும், கர்த்தருக்குப் பணி செய்ய வேண்டும் என்பது தான் நம்முடைய போதனைகளின் நோக்கமாக இருக்கிறது. ஆணையும், பெண்ணையும் படைத்த கர்த்தர் அவர்களை ஒரேவிதமாகப் படைக்காமல் அவர்களுக்கு மாறுபட்ட பணிகளைக் கொடுத்து அப்பணிகளை நிறைவேற்றுவதன்மூலம் தம்மை மகிமைப்படுத்தும்படி விதித்திருக்கிறார். ஆணும், பெண்ணும் அவ்விதிகளை மீறுகிறபோது கர்த்தரின் கோபத்துக்கும், தண்டனைக்குமுள்ளாவார்கள். இப்படி நாம் கூறுவது எப்படி பெண்களுக்கு விரோதமான போக்காக முடியும். பெண்களின் நலனில் அக்கறையிருப்பதால்தான் அவர்கள் கர்த்தரின் வார்த்தையை மீறி நடக்கக் கூடாது என்று அறிவுறுத்துகிறோம். தங்களுக்கு கர்த்தர் விதித்திருக்கிற பாதுகாப்பு வளையத்தை பெண்கள் மீறி நடக்கிறபோது அவர்கள் ஆபத்தை மட்டுமே விலைக்கு வாங்கிக்கொள்ள முடியும்.*

## பொதுவான போதனைகள் மட்டுமா?

*கர்த்தர் நம்மைப்படைத்து இரட்சிப்பைக்கொடுத்து உங்கள் மனம்போன*

படி, காலத்துக்கேற்றவிதமாக எப்படியோ வாழ்ந்து என்னை மகிமைப் படுத்துங்கள் என்று சொல்லியிருந்தால் நாம் நினைத்தபடி வாழலாம். நம்மைப் படைத்த கர்த்தர் அப்படிச் செய்யவில்லை. நமது நித்திய இரட்சிப்பில் அக்கறைகாட்டி, இந்த உலகத்தில் நாம் எங்கு, எப்படி வாழ வேண்டும் என்று தெளிவான போதனைகளைத் தந்திருக்கிறார். வேதம் பொதுவான போதனைகளை மட்டும் தருவதாக எண்ணி அறியாமையால் பலர் கர்த்தரை மீறி நடந்து வருகிறார்கள். வேதம் பொதுவான போதனை களோடு தெளிவான வரையறுக்கப்பட்ட போதனைகளையும் தருகிறது. பத்துக் கட்டளைகள் அதற்கு நல்ல உதாரணம். என்னை மட்டும் வணங்கு என்று சொல்லுகிற கர்த்தர், தன்னை எந்தவிதத்திலெல்லாம் வணங்கக் கூடாது என்றும் விதித்திருக்கிறார். தன்னை எப்படி வணங்க வேண்டும், எந்த நாளில் வணங்க வேண்டும் என்றெல்லாம் விளக்குகிறார். அதேபோல் தான் ஏனைய கட்டளைகளும் பொதுவான போதனைகளைத் தராமல் விளக்கமாக குறிப்பான கட்டளைகளாக இருக்கின்றன. இது கர்த்தர் எந்தள வுக்கு நீதியானவர், பரிசுத்தமானவர், நமது நலனில் அக்கறைகொண்டவர் என்பதையெல்லாம் காட்டுகின்றது. பிள்ளைகளைப் பெற்றுவிட்டு அவர்கள் எப்படியோ வாழ்ந்தால் சரி என்றிருக்கிற பெற்றோர்கள் உண்டு. நம் கர்த்தர் நாம் எப்படியாவது வாழ்ந்தால் சரி என்று எண்ணவில்லை. நாம் பூரணப் பரிசுத்தத்தை அடைவதற்கான அத்தனை வழிகளையும் அவர் காட்டி, அவற்றின்படி நாம் வாழ வேண்டும் என்பதில் அவர் உறுதியாக இருக்கி றார். அவற்றை நாம் மீறுகிறபோது நல்ல தகப்பனைப்போல நம்மை அவர் தண்டிக்கவும் செய்கிறார்.

## பெண்கள் ஆண்களின் தலைமைக்குக் கீழ் வாழ வேண்டியவர்கள்

கர்த்தருடைய சிருஷ்டியின் விதிப்படி பெண்கள் ஆண்களுடைய தலை மையை ஏற்று வாழ வேண்டியவர்கள்.

> "ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறாரென்றும், ஸ்திரீக்குப் புருஷன் தலையாக இருக்கிறான் என்றும் நீங்கள் அறிய வேண்டும்" (1 கொரிந்தியர் 11:3).

என்கிறார் பவுல். இங்கே 'தலை' (kephale) என்ற வார்த்தை அதிகாரத்தைக் குறித்துப் பயன்படுத்தப்பட்டுள்ளது. சரீரத்துக்கு தலை தலைமை வகிப்பது போல் நமக்கு கிறிஸ்துவும், பெண்களுக்கு ஆண்களும் இருக்கிறார்கள். அதுதான் இதற்குப் பொருள் என்பதை இந்த வசனம் அமைந்திருக்கும் பகுதியைக் கவனமாகப் படித்துப் பார்ப்பதன் மூலம் புரிந்து கொள்ளலாம். 1 கொரிந்தியர் 11:5ல் பெண்கள் தலையை மூடிக்கொள்ளாமல் ஜெபிக்கக் கூடாது என்கிறார் பவுல்.

> "ஜெபம் பண்ணுகிறபோதாவது, தீர்க்கதரிசனஞ் சொல்லுகிற போதாவது, தன் தலையை மூடிக்கொள்ளாதிருக்கிற எந்த ஸ்திரீயும் தன் தலையை கனவீனப்படுத்துகிறாள்;"

இது சபை தவிர்ந்த ஏனைய பொது இடங்கள் என்பதை விளங்கிக் கொள்வதும் அவசியம். ஏனெனில், 1 கொரிந்தியர் 14:34ல் பெண்கள் சபை யில் ஜெபிக்கவோ, பேசவோ கூடாது என்பது பவுலின் கட்டளை (கர்த்த ரின் கட்டளை). பெண்கள் தலையை மூடிக்கொள்ளாமலிருப்பது எந்த

விதத்தில் அவர்களுடைய தலையைக் கனவீனப்படுத்துகிறது. மேலே 3வது வசனத்திலும், 4ம் வசனத்திலும் பயன்படுத்தப்பட்டுள்ள அதே வார்த்தை ('தலை' – kephale) இங்கேயும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த வார்த்தை மனித சரீரத்தின் தலையை அல்லாது ஆணையும், அவனுக்குக் கர்த்தர் கொடுத்துள்ள அதிகாரமுள்ள தலைமைப் பொறுப்பையும் குறிக்கிறது. 'தலை' என்ற இந்த வார்த்தை 'பிரதானமான' அல்லது 'சட்டரீதியான அதிகாரமுள்ள' என்ற அர்த்தத்தைக் கொண்டிருக்கிறது. இந்த 21ம் நூற்றாண்டுவரை கிறிஸ்தவ இறையியல் அறிஞர்களும், சபைகளும் இந்த அர்த்தத்தில் மட்டுமே இந்த வார்த்தையைப் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். ஒரு சில நவீன பெண்ணிய ஆதரவாளர்கள் மட்டுமே இதற்கு முரணான விளக்கம் கொடுக்க முயற்சிக்கிறார்கள்.

ஆகவே, சபை தவிர்ந்த பொது இடங்களில் ஜெபம் பண்ணுகிறபோது, அதாவது வீட்டில் கணவனுக்கு முன் ஜெபம் பண்ணுகிறபோதோ, பேசுகிறபோதோ பெண் தனக்குத் தலைவனாக இருக்கிற கணவனுடைய அதிகாரத்துக்கு பங்கம் வராத முறையில் தன்னுடைய நிலையை உணர்ந்து நடந்துகொள்ள வேண்டும். அதேவேளை, அனைத்து விசுவாசிகளான பெண்களும் சமுதாயத்தில் எந்த நிலையிலும் ஆணின் அதிகாரமுள்ள தலைமைத்துவத்தை அவமதிக்காமல் தங்களுடைய பணிகளைச் செய்ய வேண்டும் என்பதே இந்தப்பகுதியின் பொருள். இதற்குக் காரணம் ஆண் முதலில் படைக்கப்பட்டு அவனுக்கே தலைமைத்துவத்தைக் கர்த்தர் அளித்திருக்கிறார். அதற்குப் பின்பே பெண் படைக்கப்பட்டாள் என்கிறார் பவுல். அத்தோடு பெண்ணே முதலில் வஞ்சிக்கப்பட்டாள் என்றும் பவுல் கூறுகிறார் (1 தீமோத்தேயு 2:13, 14). இந்த இரண்டு வசனங்களும் ஆதியாகமத்தில் சிருஷ்டியின்போது நிகழ்ந்த சம்பவத்தை நமக்கு நினைவுறுத்துகின்றன. முதலில் கர்த்தர் ஆணைப்படைத்து அவனை சிருஷ்டியில் உயர்ந்த இடத்தைக் கொடுத்து அனைத்தையும் தலைமை தாங்க வைத்தார். அதற்குப் பிறகு அவனுக்காக பெண்ணைப் படைத்து அவனோடு இணைந்து அமைதலோடு பணிசெய்யும்படி அவளைப் பணித்தார். கர்த்தர் தன்னைப் படைத்து தனக்குக் கொடுத்திருந்த இடத்தில் இருந்து வாழ விரும்பாமல் தன் கணவன் இல்லாத வேளையில் சுதந்திரமாக ஏவாள் எடுத்த முடிவு உலகத்துக்கு பாவத்தைக் கொண்டு வந்ததை இவ்வசனங்கள் நினைவுறுத்துகின்றன. அதன் காரணமாக ஏவாளைக் கர்த்தர் தண்டித்து பிரசவ வேதனையை அனுபவிக்கும்படிச் செய்தார். அத்தோடு பாவத்தின் காரணமாக ஆணின் தலைமைத்துவத்தை அவள் மீறும்படி நடந்து கொள்ளுவாள் என்றும் விளக்கினார். "உன் ஆசை உன் புருஷனைப் பற்றியிருக்கும். அவன் உன்னை ஆண்டு கொள்வான்" என்ற ஆதியாகமம் 3:16ல் காணப்படும் வாக்கியங்கள் இதைத்தான் விளக்குகின்றன. அதாவது, பாவத்தின் காரணமாக பெண் தான் படைக்கப்பட்டிருந்த நிலையை மறந்து ஆணின் அதிகாரத்தில் ஆசை கொள்வாள் என்றும், அன்பாக ஆள்வதை மறந்து பெண்ணை அடக்கி ஆளுவதை ஆண் பணியாகக் கொள்ளுவான் என்றும் இந்த வசனங்கள் சொல்லுகின்றன. ஆகவே, விசுவாசிகளான பெண்கள், விசுவாசிகளல்லாத பெண்கள் பாவத்தின் காரணமாக ஆணின் அதிகாரத்

தில் இச்சைவைத்து அவனை அவமதித்து நடந்துகொள்வது போல் நடக்கா மல் அமைதலோடு வீட்டிலும், பொது இடங்களிலும், சபையிலும் நடந்து கொள்ள வேண்டுமென்கிறது வேதம்.

இன்று பெண்ணியத்தின் செல்வாக்கினால் வேதம் போதிக்கும் கர்த்தரின் இந்த சிருஷ்டியின் ஒழுங்கிற்கு ஆணாதிக்கம் என்ற தவறான பெயர்சூட்டி ஆணின் பணிகளைப் பெண்கள் செய்ய வைக்கிறார்கள் கிறிஸ்தவ சமுதா யத்தில் சிலர். பெண்கள் ஒன்றுமே செய்யக்கூடாத உதவாக்கறைகள் என்று கர்த்தர் அவர்களை ஒதுக்கி வைக்கவில்லை. அவளைத் தான் படைத்த நிலையை மீறி எதையும் செய்து தன்னை அவமானப்படுத்திக் கொள்ளக் கூடாது என்றுதான் கர்த்தர் கூறுகிறார். ஆத்மீக அறிவிலும், வளர்ச்சியிலும் ஆணுக்கு நிகராகப் பெண்ணால் வளர முடிந்தபோதும் ஆணுக்குக் கொடுக் கப்பட்டிருக்கிற இடத்தை அவள் ஆக்கிரமிப்பது கர்த்தரின் கட்டளை களுக்கு எதிரான செயலாகும்.

## பெண்கள் திருச்சபையில் தலைமை வகிப்பதும் பேசுவதும் தகாது

மேலே நாம் பார்த்த பெண்ணைப் பற்றிய பொதுவான போதனைகளின் அடிப்படையில்தான் பவுல் திருச்சபையிலும் பெண் கர்த்தர் ஏற்படுத்தி யுள்ள அந்த விதிகளை மீறி நடந்துகொள்ளக் கூடாது என்கிறார் (1 கொரிந்தியர் 14:34, 35). விசுவாசிகளான பெண்கள் தாங்கள் பாவத்திலிருந்து விடுபட்டிருப்பதை உணர்ந்து, பாவத்தின் காரணமாக ஏற்படும் சரீர இச்சையான ஆணை அடக்கியாளும் குணத்திற்கு இடம் கொடுக்காமல் திருச்சபையில் கர்த்தர் விதித்துள்ள நியமங்களின்படி பணிபுரியும் போதகர் களுக்கும், மூப்பர்களுக்கும், உதவியாளர்களுக்கும் மதிப்பளித்து அமைத லோடு நடந்துகொள்ள வேண்டும் என்கிறார் பவுல்.

எந்தவிதத்திலும் சபையில் ஆண்களுக்கு மத்தியில் எழுந்து நின்று பேசுவதும், பாடுவதும், ஜெபிப்பதும் “அயோக்கியத்தனமானதாக” இருக்கும் என்கிறார் பவுல் (1 கொரிந்தியர் 14:35). அதாவது இப்படிச் செய்வது அவள் பலர் மத்தியில் தலைவிரிகோலமாக நிற்பதற்கு சமமானது என்கி றார். ஆவிக்குரிய காரியங்களை சபையில் பெண்கள் செய்வதில் என்ன தவறு என்று சொல்லுகிறவர்கள் பவுலின் போதனைகளை படித்து சிந்தித் துப் பார்ப்பதில்லை. ஆதியில் கர்த்தர் விதித்துள்ள நியமத்தை பவுல் விள க்கி பெண்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று விளக்குவதை அவர்கள் விளங்கிக் கொள்வதில்லை. வீணாக பவுலுக்குப் பெண்களையே பிடிக்காது என்று வேத போதனைகளை நிராகரிக்கிறார்கள்.

உண்மையில் பெண்கள் திருச்சபைகளில் எல்லோர் மத்தியிலும் பேசுவதும், போதிப்பதும், ஜெபிப்பதும், அதிகாரம் செலுத்துவதும் கர்த்த ருடைய வார்த்தைக்கு முரணானது. சபையில் உள்ள ஆண்களே அத்தகைய காரியங்களை செய்ய வேண்டும். ஆண்கள் செய்ய வேண்டிய பணியை பெண்கள் செய்வதன் மூலம் கர்த்தர் ஏற்படுத்தியுள்ள தலைமையை அவர்கள் நிராகரிக்கிறார்கள். இப்படிச் செய்வது அவர்களுடைய சொந்தக் கணவர்களையும், ஏனைய ஆண்களையும் அவமதிக்கின்ற செயலாகும். இதை விளங்கிக் கொள்வது அவசியம்.

தமிழ் சபைகளில் வேதபோதனைகளில் தெளிவில்லாமல் போதகர்களாக இருக்கின்ற வர்களே இன்று பெண்கள் சபைகளில் செய்யக் கூடாததை செய்ய வைக்கிறார்கள். ஆதாம் எப் படி ஆதியில் தன் பணியிலிருந்து தவறி பாவத் துக்கு உள்ளானானோ அதேவிதமாக இன்று போதகர்களும், சபைத்தலைவர்களும் நடந்து வருகிறார்கள். ஆதியில் பெண்ணுக்கு காப்பாள னாக இருந்து அவளை வழிநடத்த வேண்டிய ஆதாம் தன் தலைமையை அவளுக்கு விட்டுக் கொடுத்து அவள் சொன்னபடி நடக்க ஆரம் பித்தான். அதுவே அவன் செய்த பாவம். கர்த் தர் தனக்கு விதித்திருந்த இடத்தை அவன் அவ ளுக்கு விட்டுக் கொடுத்தான். இன்று இதையே நாம் ஆண்கள் சபைகளிலும், ஸ்தாபனங்களி லும் செய்து கொண்டிருப்பதைப் பார்க்கிறோம்.

இன்று தமிழினத்தில் நூற்றுக்கணக்கான கூடி ல்லாக் குருவிகளான ஸ்தாபனங்களில் பெண் களே நிர்வாகிகளாக இருந்து சுவிசேஷ ஊழியத் தில் ஈடுபட்டிருக்கிறார்கள். பிரசங்கிக்கின்ற பெண்கள் தொகையும் அதிகரித்து வருகிறது. இதெல்லாம் கர்த்தருக்கு அடங்காமல் உலக வழக்கத்தைப் பின்பற்றிப் போகும் தவறான வழி யைச் சுட்டிக்காட்டுகின்றது. இப்படித்தான் இஸ்ரவேலர்கள் கானானியர்களின் வழிகளைப் பார்த்து ஆசைப்பட்டு சோரம்போனார்கள். இன்று அந்தப் பணியைப் பலர் திருச்சபைகளில் செய்து வருகிறார்கள். இதெல்லாம் இன்று நம் மினத்தில் பெண் விடுதலைக்கு அடையாள மல்ல. விசுவாசிகளான பெண்கள் வேதவார்த் தைகளை மீறி நடப்பதற்கான அடையாளமாகத் தான் இருக்கின்றன. பெண்களே! உங்களுக்கு துணை போகவேண்டிய ஆண்களே சமுதாயத் தில் உங்களுக்கு எதிரியாக இருந்து நீங்கள் வேத வார்த்தைகளுக்கு அடங்காமல் நடக்கும்படி வழி காட்டுவதை எதிர்த்து நில்லுங்கள். நித்திய இரட் சிப்பை நோக்கி நடைபோடுவதற்கு தகுந்தவிதத் தில் வேதத்திற்கு அடங்கி அமைதலோடு நடந்து கொள்ளுங்கள். ஆதியில் ஏவாள் செய்த அதே பாவத்தை தொடர்ந்து செய்து பழி தேடிக்கொள் ளாதீர்கள். உங்களைக் கறைபடுத்திக் கொள்ளா தீர்கள். கர்த்தர் உங்களுக்கு ஞானத்தைக் கொடுக்கட்டும்.


## "இயேசுவின் குடும்பம் இனிய குடும்பம்"

*1. காதலோ காதல்!*
*2. ஈருடல் ஓர் மனம்*
*3. பிறரது தலையீடு வேண்டாமே!*

**நம்மினத்தில் கிறிஸ்தவ குடும்பம் எப்படி ஆரம்பிக்கப் பட வேண்டும் என்று திருமண வாழ்க்கைக் கான ஆலோசனை களைத் தரும் போதகர் பாலாவின் (நியூசிலாந்து) மூன்று செய்திகள் ஒலி, ஒளி நாடாக் களில் வெளிவந்திருக் கின்றன. திருமண மானவர்களுக்கும், திருமண வாழ்க்கைக்கு தயாராகிறவர்களுக்கும் இவை மிகுந்த பயனளிக்கும்.**

*பெற்றுக் கொள்ள வேண்டிய முகவரி:*

**இவாஞ்சலிக்கள் பாப்திஸ்து சபை**
**22 டி. பி. கே மெயின் வீதி, பைகாரா,**
**மதுரை 625004**

# கத்தோலிக்க மதத்திற் கெதிரான கடும் எதிர்ப்பு

ஏழாம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் இருந்து பதின்மூன்றாம் நூற்றாண்டுவரையும் பல கிறிஸ்தவ குழுக்கள் வரலாற்றில் உருவாகி ஆர்மீனியா, ஆசியா மைனர், பல்கேரியா, பொஸ்னியா பால்கன் நாடுகள், நெதர்லாந்து என்று பல தேசங்களில் பரவியிருந்தன. பன்னிரெண்டாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் பெர்காட்ஸ் (Beghards) என்று அழைக்கப்பட்ட ஜெபத்திற்கு முக்கியத்துவம் கொடுத்த ஒரு பகுதியினர் நெதர்லாந்தில் ரைன் பள்ளத்தாக்குப் பகுதிகளில் பரவியிருந்தனர். பன்னிரெண்டாம், பதின்மூன்றாம் நூற்றாண்டுகளில் தெற்கு பிரான்சில் அல்பிஜென்சஸ் (Albigenses) என்று அழைக்கப்பட்ட ஒரு பிரிவினர் வளர்ந்திருந்தனர். வட இத்தாலியில் இக்காலப் பகுதியில் வளர்ந்திருந்தவர்களே வல்டேன்சஸ் (Waldenses) என்ற பிரிவினர்

இவர்கள் எல்லோருமே கத்தோலிக்க மதத்தில் காணப்பட்ட போலிப் போதனைகளுக்கு எதிராக இருந்தனர். இப்பிரிவினர் தங்களுடைய காலத்தில் அநேகரைக் கவர்ந்திழுத்தனர். மிகுந்த வைராக்கியமுள்ள பெருந் தொகையினர் இப்பிரிவினரைப் பின்பற்ற ஆரம்பித்தனர். இப்பிரிவுகள் எல்லாமே தெளிவான வேதபோதனைகளைப் பின்பற்றின என்று கூற முடியாது. அத்தோடு எல்லாமே ஒரேவிதமான போதனைகளையும் கொண்டிருக்கவில்லை. இவற்றில் சில பிரிவுகள் தவறான போதனைகளையும் கொண்டிருந்தன. கத்தோலிக்க மதம் இவர்களை மனிக்கேனியர்கள் (Manichaeans) என்று குற்றஞ்சாட்டியது. அதாவது, இவர்கள் மணி என்ற மனிதனின் போதனைகளையும், நடைமுறைகளையும் பின்பற்றினார்கள் என்பது அந்தக் குற்றச்சாட்டு. மணி (Mani) கிறிஸ்தவத்தையும், சௌராஷ்டிரியனிசத்தையும் (Soroastrianism) ஒன்று சேர்க்க முயற்சி செய்தான். சௌராஷ்டிரியனிசம் ஆதி பெர்சியாவின் (Persia) மதமாக இருந்தது. இந்தப் பிரிவுகள் அனைத்தும் எதைப் பின்பற்றியிருந்தபோதும் இவையனைத்தும் கத்தோலிக்க மதத்திலிருந்து வேறுபட்ட வாழ்க்கையும், ஆராதனை வழிகளையும் வேத அடிப்படையில் பின்பற்றி தங்களுடைய சொந்த மொழிகளில் தனித்துவத்தோடு இயங்கி வந்தன. இவையனைத்தும் மிகவும் எளிமையான பக்திவிருத்தியுள்ள வாழ்க்கையை நாடி நின்றன. எல்லாப் போப்புகளும் இப்பிரிவுகளைக் கண்டிக்கவில்லை.

இப்பிரிவுகளில் மிகவும் பிரபல்யமானது அல்பிஜென்சஸ் (Albigenses) பிரிவு. இவர்கள் அக்காலத்தில் கத்தோலிக்க குருமார்களாக இருந்தவர்கள் தேவ மனிதர்கள் அல்லவென்றும், அவர்கள் ஆத்மீகத் தலைவர்களாக இருக்க அருகதையற்றவர்களென்றும் கருதினர். இதன் காரணமாக அவர்

*கள் கடுந்துன்பங்களை சந்திக்க நேர்ந்தது. அவர்கள் பிஷப்புக்களால் கொடுமைப்படுத்தப்பட்டனர். இருபது வருடங்களுக்கு அல்பிஜென்சியர்கள் கொடுமைப்படுத்தப்பட்டு இல்லாதொழிக்கப்பட்டனர். பதினான்காம் நூற்றாண்டின் மத்தியில் மிகச் சில அல்பிஜென்சியர்களே உயிர் வாழ்ந்தனர். அவர்களுடைய உடலை சிதைக்க முடிந்தாலும் எதிரிகளால் அவர்களுடைய உணர்வுகளை அழிக்க முடியவில்லை. சீர்திருத்தவாத காலம் வரையும் கத்தோலிக்க மதத்திற்கெதிரான இந்த உணர்வுகள் உயிர்த்துடிப் போடிருந்தன.*

*கத்தோலிக்க மதத்தை எதிர்த்து வேத அடிப்படையில் தனி வழி சென்ற இந்தப் பிரிவுகள் பற்றிய முழு ஆய்வும் இதுவரை செய்யப்படவில்லை. இவர்களைப் பற்றி நிலவி வரும் கருத்துக்கள் பெரும்பாலும் இவர்களுடைய எதிரிகளிடமிருந்து பெறப்பட்டிருப்பதால் அவை அனைத்தையும் நம்புவது கடினம்.*

### கத்தோலிக்க மதத்திற்குள்ளிருந்தே அம்மதத்திற்கெதிரான எதிர்ப்பு

*இனி கத்தோலிக்க மதத்திற்கு அதற்குள்ளிருந்து எழுந்த எதிர்ப்பைப் பார்ப்போம். இந்த எதிர்ப்பாளர்களில் முக்கியமானவர் பாதுவாவைச் சேர்ந்த மார்சீலியஸ்* (Marsilius of Paduva, 1270-1342). *இவர் ஒரு மருத்துவர். 1324ல் இவர் எழுதிய நூலில் வேதம் மட்டுமே நம் மேல் அதிகாரம் செலுத்தக்கூடிய சகல அதிகாரத்தையும் கொண்டது என்று எழுதியிருந்தார். இவருடைய கருத்துக்கள் மதகுருமார்களின் அதிகாரத்தைக் குறைக்க வேண்டுமென்றும், சாதாரண மக்களின் சார்பாக அவர்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் குருமார்களாக இருக்க வேண்டும் என்றும் தெரிவித்தன. அந்தக் காலத்தில் இத்தகைய கருத்துக்கள் மிகவும் முக்கியம் வாய்ந்தவையாக இருந்தன.*

*இவரைவிட முக்கியத்துவம் வாய்ந்த இன்னொரு மனிதர் ஆங்கிலேயரான வில்லியம் ஒக்கம்* (William Occam, 1280-1347) *சிறந்த கல்விமானாகிய இவர் பாரிஸ் பல்கலைக்கழகத்தில் தத்துவத்துறையில் பணியாற்றி வந்தார். இவரும் கத்தோலிக்க மதத்தின் அதிகாரத்திற்கெதிராக கருத்துக்களை வெளியிட்டிருந்தார். இவர்கள் அக்காலத்தில் தலையெடுத்து வந்த தனித்துவத்தோடு சிந்தித்து வருபவர்களின் பிரதிநிதிகளாக இருந்தனர். இவரைப் போன்றோர் மதத்துறையில் இருப்பவர்கள் நம்முன் வைக்கும் போதனைகளையெல்லாம் கண்ணை மூடிக்கொண்டு நம்பக்கூடாது என்ற வைராக்கியத்துடன் செயல்பட்டு வந்தவர்களாக இருந்தனர்.*

### ஜோன் விக்கிளிப் *(1320-1384)*

*தன்னுடைய காலத்தில் தலைசிறந்த கல்விமானாக விளங்கினார் ஜோன் விக்கிளிப்* (John Wycliff)*. ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் தன் வாழ்நாள் முழுவதும் பணிபுரிந்தார் விக்கிளிப். ரோமன் கத்தோலிக்க மதத்தின் குருவாக இறக்கும்வரை இருந்த விக்கிளிப் திருச்சபையின் ஒரே தலைவர் கிறிஸ்து மட்டுமே என்று பறைசாற்றினார். போப்பை அந்திக்கிறிஸ்து என்றும் அறிவித்தார். அதிகார வெறிபிடித்த மதத்தலைவர்களையும், குருமார்களையும் வேதம் அடியோடு வெறுக்கின்றது என்று சூளுரைத்தார்.*

கத்தோலிக்க மதத்தின் திருவிருந்துக் கோட்பாட்டை அடியோடு நிராகரித்தார் விக்கிளிப். வேதத்தில் அதற்கு இடமில்லை என்று வாதிட்டார். ரோமன் கத்தோலிக்க மதத்தின் அதிகாரம், பேர்கட்டரி, பரிசுத்தவான்களுக்கான ஆராதனை, சிலை வணக்கம் அத்தனையையும் கடுமையாக கண்டித்தார்; அவற்றை வேதத்தில் பார்க்க முடியாது என்று விளக்கினார். அவரை "ஆங்கில சீர்திருத்தவாதத்தின் விடிவெள்ளி" (The Morning Star of Reformation) என்று சும்மாவா சொல்லியிருக்கிறார்கள்.

விக்கிளிப் பிரசங்கிகளைத் தயார் செய்தார். இவர்கள் எளிமையான வாழ்க்கை வாழ்ந்தவர்கள். அந்தக் காலத்தில் மதகுருக்கள் எந்தவிதமான போதனைகளையும் கொடுக்காததால் மக்கள் வேதபோதனைகளை அறியாமல் வாடிக்கொண்டிருந்தபோது இந்தப் பிரசங்கிகளே நாடு முழுவதும், பட்டிதொட்டியெங்கும் போய் வேதப் பிரசங்கம் அளித்தார்கள். அது மட்டுமல்லாது விக்கிளிப்பினுடைய வழிவந்தவர்கள் இலத்தீன் வல்கேட்டிலிருந்து (Latin Vulgate) ஆங்கிலத்தில் முதன்முறையாக மொழிபெயர்த்திருந்த வேதத்தையும் நாம் குறைத்து மதிப்பிட்டு விடமுடியாது. இளவரசர்களிலிருந்து, விவசாயிவரை அனைவரும் வேதத்தை தங்களுடைய மொழியில் படிப்பதற்கு இதுவே வழிவகுத்துக் கொடுத்தது.

விக்கிளிப்பினுடைய எழுத்துக்களுக்கு அக்காலத்தில் மக்கள் தந்த வரவேற்பு, சபை சீர்த்திருத்தத்தின் அவசியம் எந்தளவுக்கு நாட்டு மக்களால் ஆர்வத்துடன் எதிர்பார்க்கப்பட்டது என்பதற்கு அடையாளமாக இருந்தது. நூற்றுக்கணக்கான மதகுருமார்களும், பெண் மதகுருமார்களும் அவருடைய எழுத்துக்களில் ஆர்வம் காட்டி வாசித்தனர். அதேவேளை, எதிர்பார்த்தது போல் பெரும் எதிர்ப்பும் இருந்தது. அவருடைய எதிரிகள் அவரை எரித்துவிடத் துடித்துக் கொண்டிருந்தார்கள். நீதிமன்றமும், ஜோன் கோன்ட்டும் (John Gaunt) அவருடைய பக்கம் இருந்ததால் அவர்களால் அவரைத் தொலைத்துவிட முடியவில்லை. அவருடைய எதிரிகள் அவரை அழித்துவிட முயன்றதற்கு மதத்தைவிட அரசியலே முக்கிய காரணமாக இருந்தது. ஆவிக்னனில் (Avignon) இருந்து அதிகாரம் செலுத்திய போப்பையும், பிரான்சின் அரசனுக்கு கீழிருந்த நிலையையும் அவர்கள் வெறுத்தார்கள்.

### ஜோன் ஹஸ் *(1360-1415)*

ஜோன் ஹஸ் (John Huss) விவசாயம் செய்து வந்த வறிய குடும்பத்தில் பிறந்தார். தன்னுடைய திறமையை முழுதாகப் பயன்படுத்தி ஐரோப்பாவில் பாரிஸ் (Paris), ஆக்ஸ்போர்ட் (Oxford) பல்கலைக்கழகங்களைவிட செல்வாக்கு மிகுந்த பல்கலைக் கழகமாக இருந்த பிராக் பல்கலைக் கழகத்தில் (Prague) போதகராகப் பதவியேற்றார். ஹஸ் மெய்யான மனந்திரும்புதலைப் பெற்று பொகீமிய மொழியில் (Bohemian) பிரசங்கம் செய்யக்கூடிய சிறந்த பிரசங்கியாக இருந்தார். சுவிசேஷத்தை மிகவும் உணர்ச்சியுடனும், ஆர்வத்துடனும் பிரசங்கித்து பொதுவான பாவச் செயல்களையெல்லாம் கண்டித்து வந்தார். ஏனைய மதகுருமார்களுடைய உலகப்பிரகாரமான வாழ்க்கையையும், பக்திவிருத்தியற்ற நடைமுறையையும் அவர் கண்டித்துப் பிரசங்கித்தபோதே அவர்கள் அவருடைய எதிரிகளாக மாறினார்கள்.

*அக்காலத்தில் ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்துக்கும், பிராக் பல்கலைக் கழகத்துக்கும் பெருந்தொடர்புகள் இருந்தலால் விக்கிளிப்பின் போதனை கள் பிராகை அடைந்து ஹஸ்ஸும் அவரைச் சார்ந்தவர்களும் அதனால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தார்கள். ஜெர்மானியர்கள் ஹஸ் போலிப் போதனைகளை அளிப்பதாக குற்றஞ்சாட்டினர். பிராக்கின் பொது இடங் களில் அவருடைய நூல்கள் எரிக்கப்பட்டன. நகரின் ஆர்ச்பிஷப் அவரு டைய பிரசங்கத்தைத் தடைசெய்ய முயன்றார்.*

*இறுதியில் கொன்ஸ்டன்சில்* (Constance) *இருந்த கவுன்சிலின் முன் வரும்படி அவருக்கு அழைப்பு அனுப்பப்பட்டது. ஜெர்மானிய அரசரான சிகிஸ்மன்ட்* (Sigismund) *நல்ல முறையில் அவர் விசாரிக்கப்படுவார் என்று கொடுத்த வாக்கின் காரணமாக ஹஸ் கொன்ஸ்டன்சுக்குப் போனார். உடனடியாக அங்கே அவர் சிறையில் தள்ளப்பட்டு கொடுமைப்படுத்தப் பட்டார். அவரை உடனடியாக விடுவிக்கும்படி அரசன் உத்தரவிட்ட போதும், போப்பினதும், கார்டினல்களுடையதும் பயமுறுத்தலுக்கு அடங்கி அந்த உத்தரவை மீளப்பெற்றுக்கொள்ள நேர்ந்தது. ஏழு மாதங்களுக்கு சிறையில் கொடுமைப் படுத்தப்பட்டபின் பெயரளவுக்கு அவர் விசாரனைக் குக் கொண்டுவரப்பட்டார். எதிரிகள் விசாரனை மண்டபத்தில் அவரைப் பேசவிடாமல் 'நீ எழுதியவற்றை மறுத்துரை' என்று கூக்குரலிட்டனர். கர்த்தருடைய வார்த்தைக்கு எதிராக இருந்தால் மட்டுமே தான் எழுதிய வற்றை மறுத்துரைப்பேன் என்று ஹஸ் ஆணித்தரமாகக் கூறினார். 1415ல் கவுன்சிலினால் தீர்ப்பளிக்கப்பட்டு கொன்ஸ்டன்சுக்கு வெளியில் நகர அதிகாரிகளால் அவர் மிகவும் கேவலமான முறையில் நெருப்பில் போட்டு உயிரோடு எரிக்கப்பட்டார். சத்தியத்திற்காக ஹஸ் உயிர்ப்பலி கொடுத்தார்.*

*நீதிமானான ஹஸ் எரிக்கப்பட்டதற்கு மூலகாரணமாக இருந்த போப் 23ம் ஜோன்* (Pope John XXIII) *மிகமோசமான வாழ்க்கை வாழ்ந்து வந்தார். வரலாறு இந்தப் போப்பைப் பற்றி எந்த நல்ல வார்த்தைகளையும் சொல்ல வில்லை. இப்படியாக ரோமன் கத்தோலிக்க மதத்திற்கெதிரான சீர்திருத்தப் போராட்டம் தலையெடுக்க ஆரம்பித்தது. அதிகார வெறிபிடித்த போப்பும், அவரைச் சார்ந்தவர்களும் தமக்கெதிராகப் புறப்பட்டவர்களை உயிரோடு கொளுத்தவும் தவறவில்லை. எந்தளவுக்கு கத்தோலிக்க மதம் பிசாசின் மதமாக அக்காலத்தில் அதிகாரம் செலுத்தி வந்தது என்பதை வரலாறு காட்டுகின்றது. இருந்தபோதும் சத்தியத்தை அம்மதத்தால் புதைத்துவிட முடியவில்லை. சத்திய வாஞ்சையுள்ளவர்களை அதனால் பேசாமல் அடக்கிவைத்துவிட முடியவில்லை.*

*இந்த சீர்திருத்தத் தீ எவ்வாறு வளர்ந்து ஐரோப்பா முழுவதும் பரவி கத்தோலிக்க மதத்தின் அதிகாரத்தை நிர்மூலமாக்கியது என்று வரலாறு காட்டும் விபரங்களை இனி வருங்காலங்களில் பார்ப்போம்.*

***வாழ்க்கையில் பரிசுத்தத்தில் மிக உயர்ந்த இடத்தை நாம் அடைய வேண்டுமானால் அதற்கான ஆரம்பப்படி பாவத்தின் பாவத்தை முழுமை யாக உணர்வதுதான் என்பதில் நான் அதிக நம்பிக்கை வைத்திருக்கிறேன்.***
**- *ஜே. சி. ரைல்* (J. C. Ryle) -**

'திருமறைத்தீபம்' பத்திரிகையின் ஆசிரியர்

## பாஸ்டர் ஆர். பாலாவின்

# அருளுரைகள்

1. கர்த்தரின் பார்வையில் நோவா-1
2. கர்த்தரின் பார்வையில் நோவா-2
3. கர்த்தரின் பார்வையில் திருச்சபை
4. வாலிபர்களே ஜாக்கிரதை!
5. கர்த்தரின் தண்டனை
6. பத்துக் கட்டளைகளின் முக்கியத்துவம் - 1-2
7. பேரலைகளின் மூலம் பேசும் கர்த்தர் **(Tsunami)**
8. நமது சீர்திருத்த பாரம்பரியம்
9. சீர்கெட்ட சமுதாயத்தின் மத்தியில் கர்த்தரின் ஊழியம்
10. திரும்பிப் பார்ப்போம், திருந்தி வாழ்வோம்
11. கர்த்தரை எதிர்ப்பவன் யார்?
12. தமிழகத்தில் கிறிஸ்தவத்தின் நிலை

இவை இப்போது ஒலி, ஒளி நாடாக்களில் **(Audio, VCD, DVD)** கிடைக்கும். மேலும் அனேக பயனுள்ள செய்திகளுக்கும் எழுதிப் பெற்றுக் கொள்ள வேண்டிய முகவரி:

**இவாஞ்சலிக்கள் பாப்திஸ்து சபை,**
**22 டீ. பி. கே. மெயின் வீதி, பைகாரா, மதுரை 625004**

---

நாம் வெளியிட்டுள்ள நூல்களைப் பெற்றுக்கொள்ள விரும்புகிற வர்கள் இந்தியாவில் இந்நூல்களுக்கான விபரங்களுக்கு கீழ்வரும் தமிழக முகவரிக்கு எழுதவும்.

*Evangelical Baptist Church*
*22 T. P. K. Main Road*
*Pykara, Madurai 625004, Tamilnadu, S. India*
*Phone: (0452) 5505810*

ஸ்ரீ லங்கா வாசகர்கள் நமது வெளியீடுகளைப் பெற்றுக்கொள்ள கீழ்வரும் முகவரிக்கு எழுதவும்.

*Diakrisis Book Service*
*19 Rajasinghe Road, Colombo 6, Sri Lanka*

# கிறிஸ்தவக் கோட்பாடுகள்

**கேள்வி**: *92 புறத்தில் மட்டும் சுவிசேஷத்துக்கு கீழ்ப்படிகிற எல்லோரும் தங்களுடைய பாவத்துக்கான தேவ கோபத்திலிருந்து தப்ப முடியுமா?*

**பதில்**: *புறத்தில் சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படிகிறவர்களல்ல, விசுவாசத்தையும், பரிசுத்தத்தையும் விடாமுயற்சியுடன் இறுதிவரை கடைப்பிடிப்பவர்களே இரட்சிப்பை அடைய முடியும்.*

*(மத்தேயு 7:21; 1 பேதுரு 1:5; எபிரேயர் 12:14)*

**கேள்வி**: *93 இறுதிவரையும் விசுவாசத்தையும், பரிசுத்தத்தையும் விடாமுயற்சியுடன் கடைப்பிடித்து நித்திய இரட்சிப்பை அடைகிறவர்கள் யார்?*

**பதில்**: *கர்த்தரின் நித்திய ஆணை, மாறாத அன்பு, கிறிஸ்துவின் வேண்டுதல் ஆகியவற்றின் காரணமாகவும், பரிசுத்த ஆவியும் வார்த்தையும் அவர்களில் இருப்பதன் காரணமாகவும் அனைத்து மெய் விசுவாசிகளும் கிறிஸ்துவுக்குள்ளான அனைத்து ஆத்மீக ஆசீர்வாதங்களையும் கர்த்தரிடமிருந்து பெற்று அவருடைய வல்லமையால் பாதுகாக்கப்படுவதால் நிச்சயமாக தங்களுடைய விசுவாசத்திலும், பரிசுத்தத்திலும் இரட்சிப்புக்காக விடாமுயற்சியுடன் இறுதிவரை ஈடுபடுவார்கள்.*

*(ரோமர் 8:28-30; எரேமியா 31:3; எபிரேயர் 7:25; யோவான் 14:16; 10:28-29; 1 பேதுரு 1:5; எபேசியர் 1:3; 1 கொரிந்தியர் 1:8-9; பிலிப்பியர் 1:6)*

**விளக்கவுரை:** *முதலில் இந்த இரு வினாவிடைகளும் ஏன் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்பதைக் கவனிப்பது அவசியம். முந்தைய வினா விடைகள் இரண்டிலும் மெய்யான விசுவாசத்தைப் பற்றியும், மனந்திரும்பு தலைப் பற்றியும் விளக்கமளிக்கப்பட்டிருந்ததை அறிவீர்கள். இந்த வினா விடைகள் பரிசுத்தவானுடைய ஆத்மீகக் கடமையான விடா முயற்சியை விளக்குகின்றன. வினாவிடை 92 விடாமுயற்சியின் அவசியத்தை விளக்குகிறது. வினாவிடை 93 அத்தகைய விடாமுயற்சி இறுதி வெற்றி அடையும் என்பதை விளக்குகிறது. பரிசுத்தவானின் விடாமுயற்சி வேதத்தின் முக்கிய இறையியல் போதனைகளில் ஒன்று; கிருபையின் போதனைகளில் ஒன்று.*

*இவை இரண்டையும் விளக்கமாகப் பார்ப்பதற்கு முன்பாக வினாவிடை 37ல் பரிசுத்தமாக்குதலைப் பற்றி ஏற்கனவே விளக்கமளிக்கப்பட்டிருப்பதைக் கவனிக்கவும். அத்தோடு பத்துக்கட்டளைகளில் அந்தப் பரிசுத்தமாக்குதலில் உள்ளடங்கியிருக்கும் முக்கிய கடமைகளும் விளக்கப்பட்டுள்ளன. மெய்யாக மனந்திரும்பி கிறிஸ்துவை விசுவாசித்த ஒரு மனிதனால் மட்டுமே தன்னை வேத அடிப்படையில் பரிசுத்தப்படுத்திக் கொள்ள முடியும். பரிசுத்தமாகுதல் ஒவ்வொரு விசுவாசியினதும் கடமை.*

*இன்று தவறான சுவிசேஷ ஊழியப்போக்கால் போலி விசுவாசம் எங்கும் அதிகரித்திருக்கிறது. திருச்சபை அங்கத்தவர்களாக இருக்கும் எல்லோரையும், இயேசு கிறிஸ்துவின் நாமத்தை சூட்டிக்கொள்ளும் எல்லோரையும் விசுவாசிகளாக ஏற்றுக்கொள்ள முடியாதபடி ஊழியங்கள் குழப்பங்கள்*

நிறைந்தனவாக இருக்கின்றன. பரிசுத்தமாகுதலைப் பற்றிய தவறான, வேதத்துக்குப் புறம்பான கோட்பாடுகள் வலம் வருகின்றன. உணர்ச்சிக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்து நடைமுறைப் பரிசுத்த நடவடிக்கைகளை அசட்டை செய்துவருகிறார்கள் அநேகர். பரிசுத்தமாக வாழ்வதற்கு பத்துக் கட்டளைகள் அவசியமானவையல்ல என்ற போதனை தமிழினத்தில் பெருமளவுக்கு அதிகரித்து கிறிஸ்தவத்தைப் பாதித்து போலிக்கிறிஸ்தவ ஊழியங்களை உருவாக்கி வைத்திருக்கிறது. இதனால் மெய்க்கிறிஸ்தவத்தை அடையாளம் கண்டுகொள்வதும் கடினமான செயலாக இருக்கின்றது.

இத்தகைய சூழ்நிலையில் பரிசுத்தவானின் விடாமுயற்சியாகிய இறையியல் போதனையை வலியுறுத்துவது அவசியமாகிறது. கிருபைகளின் போதனை இரட்சிப்பு கர்த்தருடையது என்பதையும், கிருபையின் மூலமாக விசுவாசத்தினூடாக மட்டுமே அதை அடைய முடியும் என்பதையும் மட்டும் போதிக்காமல், அப்படி விசுவாசத்தை அடைந்தவர்கள் பரிசுத்தத்திற்காக விடாமுயற்சி எடுக்க வேண்டும் என்றும் கூறுகிறது.

இந்த இரண்டு வினாவிடைகளும் கீழ்வரும் போதனைகளைத் தருகின்றன:

(1) வெளிப்புறமாக மட்டும் சுவிசேஷத்திற்குக் கீழ்படிகிறவர்கள் இரட்சிப்பை அடைய மாட்டார்கள் என்றும், அவர்கள் மேல் தேவகோபம் தொடர்ந்திருக்கிறது என்பதையும் வினாவிடை 92ன் மூலம் அறிந்து கொள்கிறோம். புறத்திலிருந்து வரும் எந்தக் கீழ்ப்படிவும் சுவிசேஷக் கீழ்ப்படிவல்ல என்பதை இந்த வினாவிடை விளக்குகிறது. பரிசேயர்கள் இதற்கு ஒரு நல்ல உதாரணம.

(2) தங்களுடைய விசுவாசத்திலும், பரிசுத்தத்திலும் விடாமுயற்சியுடன் ஈடுபடுபவர்கள் மட்டுமே இறுதியில் இரட்சிக்கப்படுவார்கள் என்கிறது வினாவிடை 92. இந்தப் போதனையை சரிவர விளங்கிக்கொள்வது அவசியம். கிருபையின் மூலமாக கிறிஸ்துவுக்குள் நாமடையும் விசுவாசம் நாம் இறுதிவரை விடாமுயற்சியுடன் விசுவாசத்திலும், பரிசுத்தத்திலும் வாழ வேண்டிய கடமையை நம்மிடமிருந்து எதிர்பார்ப்பதோடு, அதற்கான சகலத்தையும் நமக்குத் தந்திருக்கின்றது. இதனால்தான் பவுல் அப்போஸ்தலன் பிலிப்பியர் 1:5ல் பிலிப்பியர்களுக்காகத் தான் நம்பிக்கையோடு ஜெபம் பண்ணுகிறதற்கான காரணத்தைத் தெரிவிக்கின்றபோது, "உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்திவருவார்" என்று நம்புவதாகத் தெரிவிக்கிறார். இதையே பேதுரு 1:5ல், "விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தினாலே (நீங்கள்) காக்கப்பட்டிருக்கிறீர்கள்" என்கிறார். இது கிறிஸ்துவில் நமக்கிருக்கும் விசுவாசம் அவராலே காக்கப்படுகிறது என்பதை விளக்குகிறது. மெய்யான விசுவாசம் அத்தகையது.

அதேவேளை, பவுல் பிலிப்பியர் 2:12ல், "நீங்கள் எப்பொழுதும் கிழ்ப்படிகிறபடியே, நான் உங்களுக்கு சமீபமாயிருக்கும்பொழுது மாத்திரமல்ல, நான் தூரமாயிருக்கிற இப்பொழுதும், அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்" என்கிறார். பிலிப்பியர் 1:5ல், கர்த்தர் விசுவாசிகளைப் பாதுகாத்து இறுதிவரை இரட்சிக்கும்

*உண்மையை வெளிப்படுத்திய பவுல் இந்த வசனத்தில், அந்த உண்மையின் அடிப்படையில் விசுவாசிகள் விடாமுயற்சியுடன் விசுவாசத்திலும், பரிசுத் தத்திலும் வளரவேண்டிய கடமைப்பாட்டைக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்கிறார். முதலாவது இரண்டாவதற்கு அடிப்படையாக இருக்கிறது. இந்த இரண்டும் இரட்சிப்பின் அனுபவத்தில் இணைந்தே காணப்படுகிறன. இரட்சிப்பை அடைந்த எவரும் விசுவாசத்திலும், பரிசுத் தத்திலும் அசட்டையாக இருந்துவிட முடியாது. தங்களுடைய கடமையை நிராகரித்துவிட முடியாது. நித்திய இரட்சிப்பை நோக்கி நடை போடுகிற விசுவாசிகள் அதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கி றார்கள். அவர்களுடைய விடாமுயற்சி மட்டுமே அவர்களுக்கு இரட்சிப் பின் நிச்சயத்துவத்தை அளிக்க முடியும். இரட்சிப்பின் நிச்சயம் வெறும் உணர்ச்சி அல்ல; அது இரட்சிப்பிற்குரிய ஆத்மீகக் கிரியைகளை உள்ளடக் கியது.*

*(3) மேலே நாம் பார்த்த உண்மையையே மேலும் விளக்கமாகத் தருகிறது வினாவிடை 93. விசுவாசிகள் மட்டுமே விசுவாசத்திலும், பரிசுத்தத்திலும் இறுதிவரை விடாமுயற்சியுடன் வளர்ந்து நிச்சயமாக இரட்சிக்கப்படுவார் கள் என்று விளக்கும் இந்த வினாவிடை, அதற்கான காரணங்களையும் தருகின்றது. அந்தக் காரணங்களில் முதலாவதாக குறிப்பிடப்பட்டிருப்பது கர்த்தரின் கிரியைகளும், குணாதிசயங்களுமே. அநாதி காலத்துக்கு முன்பே அவர் இட்டுள்ள நித்திய ஆணையின் காரணமாகவும், அவர் அழியாத நித்திய அன்பைக்கொண்டுள்ளவராகவும் இருப்பதால் அவருடைய மக்கள் இரட்சிப்பை இழக்க முடியாதது மட்டுமல்ல அதில் வளர்கிறவர்களாகவும் இருப்பார்கள். கிறிஸ்து தான் சிலுவையில் மரித்து இரட்சித்த மக்களுக்காக பரலோகத்தில் தொடர்ந்து வேண்டுதல் செய்துவருகிறார். அவர்களுடைய விசுவாசத்திற்காகவும், பரிசுத்தத்திற்காகவும் தேவகுமாரன் ஜெபித்து வருவது இன்னுமொரு காரணம். அத்தோடு, ஆவியானவரும், வார்த்தையும் விசுவாசிகளில் நிலைத்திருப்பதால் அவர்களால் கிருபையில் வளர முடிகின்றது. கர்த்தர் அவர்களுக்கு கிறிஸ்துவில் சகல ஆத்மீக ஆசீர்வாதங் களையும் தந்து பாதுகாத்து வருவதால் நிச்சயமாக அவர்கள் விசுவாசத் திலும் பரிசுத்தத்திலும் விடாமுயற்சியுடன் வளர முடியும்.*

*பரிசுத்தவான்களின் விடாமுயற்சி இன்று அதிகம் பிரசங்கிக்கப்பட வேண்டியதொரு போதனை. எவரும் தங்களுடைய இரட்சிப்பை சாதாரண மாக எடுத்துக்கொண்டு அலட்சியமாக இருந்துவிட முடியாது. பரிசுத்தத்தில் பூரணத்துவத்தை இந்த உலகில் நாம் எட்டமுடியாவிட்டாலும் அதை நோக்கி விடா முயற்சியுடன் நடைபோட வேண்டுமென்று கர்த்தர் கட்டளை யிட்டுள்ளார். ஆவியின் துணையோடு விசுவாசிகள் இந்தக் கடமையில் இறுதி வரை ஈடுபட வேண்டும். அத்தகையோர் மட்டுமே நித்திய இரட்சிப்பை அடைவார்கள். விசுவாசத்திலும், பரிசுத்தத்திலும் அக்கறையற்றிருப்பவர்கள் தங்களுடைய விசுவாசத்தை இன்றே சோதித்துப் பார்த்துக்கொள்வது நல்லது. நியாயத்தீர்ப்பு நாளில் இராஜாதி இராஜனாகிய இயேசு, உன்னை எனக்குத் தெரியாது என்று கூறும் சூழ்நிலை நமக்கு ஏற்படாமல் இருக்கட்டும்.*

# பிரசங்கிக்கும்போது . . .

இதுவரை பிரசங்கத்தைத் தயாரிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை நாம் முடிந்தளவுக்கு தெளிவாக ஆராய்ந்திருக்கிறோம். பிரசங்கத் தயாரிப்பில் கவனிக்க வேண்டிய அத்தனை அம்சங்களையும் விளக்கமாக ஆராய்ந்திருக்கிறோம். பிரசங்கம் மிகவும் கீழான நிலையிலிருக்கும் நம்மினத்து சபைகளில் பிரசங்கம் உயர்ந்த இடத்தை வகிக்க வேண்டுமானால் ஒவ்வொரு பிரசங்கியும் இதுவரை நாம் பார்த்த, படித்த விஷயங்களில் கருத்தோடு கவனம் செலுத்தி உழைத்தால் மட்டுமே அது முடியும்.

இனி பிரசங்கத்தை நாம் கர்த்தரின் துணையோடு நல்ல முறையில் தயாரித்து விட்டோம் என்ற அனுமானத்தோடு தயாரித்த பிரசங்கத்தை பிரசங்க மேடைக்கு கொண்டு சென்று ஆத்துமாக்கள் முன் படைப்பதற்கு அவசியமான, பிரசங்கி கவனம் செலுத்த வேண்டிய சில முக்கிய விஷயங்களை ஆராய்வோம். பிரசங்கத்தை நல்ல முறையில் தயாரித்து விடுவதால் மட்டும் அது நல்ல பிரசங்கமாகிவிடாது. பிரசங்கத்தை நல்ல முறையில் தயாரிப்பது பிரசங்க ஊழியத்தில் 50% பணி மட்டுமே. தயாரித்த பிரசங்கத்தைக் கர்த்தரின் துணையோடு ஆத்துமாக்களின் இருதயத்தைப் பாதிக்கும்படி பிரசங்கிப்பது அடுத்த 50% பணியாகும். அதைச் செய்யாதவரை தயாரித்துள்ள பிரசங்கம் அது எத்தனை நல்ல பிரசங்மாக இருந்தாலும் ஏட்டோடு மட்டுமே நின்றுவிடும்.

**பிரசங்கக் குறிப்புகள்**

தயாரிக்கப்பட்ட பிரசங்கத்தை எந்த முறையில் பிரசங்க மேடைக்கு கொண்டு செல்ல வேண்டும் என்பது நாம் அடுத்ததாகக் கவனிக்க வேண்டிய விஷயம். பிரசங்கத்தை நாம் நல்ல முறையில் தயாரித்து எழுத்தில் வைத்திருக்கிறோம் என்றால் அதனை எந்த முறையில் மேடைக்கு கொண்டு செல்வது?

பெரும்பாலானோர், பிரசங்கத்தை நான் மனனம் செய்துவிட்டேன், அதனால் பிரச்சனை இல்லை என்று சொல்லுவார்கள். ஒரு சிறு காகிதத்தில் குறைந்தளவான குறிப்பை மட்டுமே வைத்துக் கொண்டு பிரசங்கம் செய்வது பெரும்பாலான பிரசங்கிகளின் வழக்கம். அதாவது, அவர்கள் முழுப்பிரசங்கத்தையும் எழுத்தில் வடிப்பது இல்லை. இது ஆபத்தானதாகும். எப்படியென்றால், தயாரித்துள்ள பிரசங்கத்தை முழுவதுமாக வார்த்தை தவறாமல் மனனம் செய்துகொள்ளும் வல்லமை எல்லோருக்கும் இல்லை. பிரசங்க வேலையில் தயாரித்த பகுதி நினைவுக்கு வராத வேளையில் நாம் மனதுக்கு வருவதை அந்தவேளையில் பேசிவிட வேண்டிய நிலை ஏற்படும். இதனால் பிரசங்கம் பாதிப்புறும். ஆவியானவர் வெளிப்படுத்தினார் என்ற பெயரில் இல்லாததையும் பொல்லாததையும் மேடை

*யில் சொல்லுவதே அநேக பிரசங்கிகளுக்கு இன்று வழக்கமாக இருக்கிறது. முழுவதுமாக தயாரித்து பிரசங்கிக்கப்படாத பிரசங்கத்தை ஆவியானவர் ஒருபோதும் ஆசீர்வதிப்பதில்லை. அதேவேளை, நன்றாக தயாரித்து வைத்திருக்கும் பிரசங்கத்தையும் சரியாகப் பிரசங்கிக்க ஆவியானவரின் துணை நமக்குத் தேவை. அதனால் பிரசங்கத்தை தயாரித்தபோது நாம் காட்டிய அக்கறையையும், கவனத்தையும் பிரசங்கத்தைப் பிரசங்கிக்கும் போதும் காட்ட வேண்டியது அவசியம். அதற்காகத்தான் தயாரித்த பிரசங் கத்தை கையோடு மேடைக்குக் கொண்டுபோக வேண்டியிருக்கிறது.*

*வேதப்பகுதிகளை இலக்கணபூர்வமாக விளக்கிப் பிரசங்கிக்கும் வியாக்கி யானப் பிரசங்கங்களை முழுவதுமாக மனனம் செய்து பிரசங்கிப்பது மிக வும் கடினமானது. திறமையும், அனுபவமுமுள்ள பிரசங்கிகளாலேயே அது முடியும். சராசரி பிரசங்கிகள் அத்தகைய தகுதிகளை வாழ்க்கையில் பெற்றி ருப்பதில்லை. இத்தகைய பிரசங்கங்களை வழங்கும்போது அநேக விஷயங் களை நினைவில் வைத்திருக்க வேண்டும். அந்தளவுக்கு எல்லாவற்றையும் நம்மால் மனனம் செய்துவிட முடியாது. ஆகவே, பிரசங்கக் குறிப்பு கையில் இல்லாமல் நமது ஞாபக சக்தியை மட்டும் நம்பி மேடைக்குப் போவது பேராபத்தில் போய் முடியும்.*

*பிரசங்கத்தை நாம் விசுவாசத்தோடு பிரசங்கிக்க வேண்டுமானால் முழுப் பிரசங்கத்தையும் நல்ல பேப்பர்களில் தெளிவாக எழுதி வைப்பது அவசி யம். முடிந்தது ஆறு பக்கங்களில் தெளிவான கையெழுத்திலோ அல்லது டைப் செய்யப்பட்டதாகவோ பிரசங்கம் இருக்க வேண்டும். பிரசங்கத் தலைப்பு, முன்னுரை, உப தலைப்புகள், வரிசைக்கிரமமான பயன்பாடு களின் தலைப்புகள், முடிவுரை ஆகியன பெரிய எழுத்துக்களில் கண்களுக்கு நன்றாக தெரியும் வகையில் பேப்பரில் கோடிட்டுக் காட்டப்பட்டிருக்க வேண்டும். இப்படி எழுதியோ அல்லது டைப் செய்யப்பட்டோ இருக்கும் பிரசங்கத்தை நாம் முழுவதுமாக பலமுறை வாசித்து சிக்கலில்லாமல் மனதில் பதியும்படி செய்துகொள்ள வேண்டும். இந்தப் பேப்பர்களை நாம் ஒரு பைலில் வைத்து பிரசங்க மேடைக்கு கொண்டு செல்லக் கூடியதாக இருக்க வேண்டும். பிரசங்கிக்கும் வேளையில் நமது கண்கள் தொடர்ந்து பேப்பரில் இருக்கப்போவதில்லை என்றாலும் பேப்பர்களில் நாம் எழுதி வைத்திருப்பதை பிரசங்கிக்க அந்தக் குறிப்புகள் உதவும்.*

*ஆரம்பப் பிரசங்கிகள் பல வருடங்களுக்கு பிரசங்கங்களை முழுவதுமாக எழுதித் தயாரித்துப் பிரசங்கிப்பது அவசியம். இத்தகைய பயிற்சி பிரசங் கத்தை திறமையோடு தயாரிக்கவும், அதை தயாரித்த விதத்தில் கொடுக்கப் பட்டுள்ள கால அளவில் பிரசங்கிக்கவும் உதவும். பெரும் பிரசங்கியாக இருந்த மார்டின் லொயிட் ஜோன்ஸ் இதை வற்புறுத்தியுள்ளார். தனது ஆரம்பகாலப் பிரசங்கங்களையெல்லாம் அவர் முழுவதுமாக வார்த்தை தவறாமல் எழுத்தில் வடித்திருந்தார். இந்தப் பழக்கம் அவருக்கு கட்டுப் பாட்டையும், ஒழுங்குமுறையையும் கற்றுத் தந்தது. தயாரித்த பிரசங்கத்தைத் தவிர மனதில்பட்டதை மேடையில் சொல்லாமலிருக்கவும், குறித்த நேரத்துக்கு பிரசங்கத்தை அளிப்பதிலும் அது அவருக்கு உதவி செய்தது. இதே பயிற்சியை தற்காலப் பிரசங்கிகளும் நடைமுறையில் கைக் கொள்ளு*

வதை நான் நேரில் பார்த்திருக்கிறேன். எனக்கு நண்பர்களான பல பிரபல மான தேர்ந்த சீர்திருத்த பிரசங்கிகள் தங்களுடைய பிரசங்கங்களை அருமையாக பேப்பரில் வடித்துப் பிரசங்கிக்கும்போது அவற்றைப் பயன் படுத்திக் கொள்ளுகிறார்கள்.

நாம் பிரசங்கக் குறிப்புகளை தயாரித்து பேப்பரில் வைத்திருந்தால், அவற்றைப் பலமுறை வாசித்து மனதில் பதிய வைத்திருந்து மேடைக்குப் போகும்போது தேவையற்ற வார்த்தைகளையும், வசனங்களையும் பயன் படுத்தாமல் இருக்க முடியும். பிரசங்க வாக்கியங்களையும், வார்த்தை களையும் தகுந்த முறையில் பயன்படுத்த கையில் இருக்கும் பிரசங்கக் குறிப்புகள் உதவும். ஒழுங்குபடுத்தப்பட்ட வார்த்தைகளும், வாக்கியங்களும் இல்லாமல் எந்தவொரு விஷயத்தையும் நாம் தெளிவாகப் பிரசங்கித்துவிட முடியாது. பிரசங்கத்தைத் தயாரித்தபோது நாம் பல உதாரணங்களையும், பழமொழிகளையும் தகுந்த இடங்களில் பயன்படுத்தியிருப்போம். அதையெல்லாம் எல்லோராலும் பிரசங்கக் குறிப்புகள் கையில் இல்லாமல் மனனம் செய்து வைத்திருப்பது முடியாத காரியம். ஆகவே, பிரசங்கக் குறிப்புகளைத் எழுத்தில் வடித்து மேடைக்குக் கொண்டுபோவதை நாம் வழக்கத்தில் வைத்திருக்க வேண்டும்.

### பிரசங்கிக்கும்போது பிரசங்கக் குறிப்பை வாசிக்கக் கூடாது

இவ்வாறாக எழுதி நாம் மேடைக்குக் கொண்டுபோகும் பேப்பர்களை நாம் பிரசங்கிக்கும்போது முழுவதுமாக வாசிக்கக்கூடாது. அது பிரசங்கமாக இருக்காது. பிரசங்க வேளையில் ஆத்துமாக்களுடைய கண்களை நமது கண்கள் சந்திப்பது அவசியம். மேலை நாடுகளில் ஒரு சில சபைப் பிரிவு களில் இவ்வாறாக பிரசங்கத்தை வாசிப்பவர்கள் உண்டு. இது சரியான முறையல்ல. உணர்ச்சியே இல்லாமல் எழுதி வைத்திருப்பதை வாசிப்பது ஆத்துமாக்களுடைய உள்ளத்தை அசைக்காது. வாசிப்பதைத் தவிர்ப்பதற் காக பிரசங்கத்தை முழுவதுமாக எழுதி மேடைக்கு கொண்டு போகாமல் இருப்பது நல்லது என்று சிலர் கூறுவார்கள். அது அவசியமில்லை. “பிரசங் கத்தை வாசிப்பதை எந்தவிதத்திலும் ஒருவர் நியாயப்படுத்த முடியாது” என்று இறையியல் அறிஞர் ரொபட் லூயிஸ் டெப்னி (Robert Lewis Dabney) கூறியுள்ளார். அவர் தொடர்ந்து “அப்படி வாசிக்கும் வழக்கத்தை பிரசங்க மேடை அருகில்கூட வரவிடக் கூடாது” என்று கூறியிருக்கிறார்.

### பிரசங்கக் குறிப்பை தேவைப்பட்டபோது மட்டுமே பிரசங்கி பிரசங்க வேளையில் பார்க்க வேண்டும்

பிரசங்கிக்கும்போது நமது கண்கள் எப்போதும் ஆத்துமாக்களில் பதிந்திருக்க வேண்டியிருப்பதால் அவசியமானபோது மட்டுமே நாம் நமக்கு முன்னால் இருக்கும் பிரசங்கக் குறிப்பைப் பார்க்க வேண்டும். நாம் ஒரு விரிவுரையைக் வகுப்பில் கொடுக்கும்போது அதை வாசிக்க வேண்டிய அவசியம் ஏற்படும். ஆனால், பிரசங்கம் ஒரு விரிவுரை அல்ல. பிரசங்கம் உணர்ச்சி ததும்ப, ஆத்துமாக்களின் உள்ளத்தைத் தொடுவதாக அமைய வேண்டியிருப்பதால் அதைத் தடைசெய்துவிடக்கூடிய எதற்கும் நாம் பிரசங்கிக்கும்போது இடம் கொடுத்துவிடக் கூடாது. எழுதி வைத்திருப்

பதைப் பார்த்து வாசிப்பது அத்தகைய தடையைத்தான் ஏற்படுத்தும். சில வேளைகளில் நமது பிரசங்கத்தில் நாம் வேறு எவராவது சொன்னதைக் குறிப்பிட (Quote) வேண்டியிருந்தால் அதை வாசிக்க நேரிடும். மற்றவர்களுடைய குறிப்புகள் நமது பிரசங்கங்களில் மிகக் குறைவாகவே இருக்க வேண்டும். ஆத்துமாக்கள் வசனத்தைத்தான் கேட்க வந்திருக்கிறார்களே தவிர மற்றவர்களுடைய கருத்துக்களை அல்ல.

பிரசங்க வேளையில் நாம் பிரசங்கக் குறிப்பை அவசியம் பார்க்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படும்போது அதைக் கவனமாக ஆத்துமாக்களுடன் நமக்கிருக்கும் தொடர்புக்கு தடைவராத விதத்தில் செய்வது நல்லது. பேசிக்கொண்டே குனிந்து பார்த்தோ அல்லது குரலைக் கொஞ்சம் தாழ்த்தி குறிப்பைப் பார்த்தோ செய்ய வேண்டும். சில வேளைகளில் ஒரு வசனத்தை வாசிப்பதற்காக ஆத்துமாக்களை அந்த வசனத்தைப் பார்க்கச் சொல்லுகிறபோது பிரசங்கக் குறிப்பைப் பார்க்கலாம். இப்படிச் செய்கிறபோது நாம் பிரசங்கக் குறிப்பைப் பார்க்கிறோம் என்பதையே ஆத்துமாக்கள் அறியாதபடி செய்வது அவசியம். இது பயிற்சி இல்லாமல் வராது. பிரசங்கக் குறிப்பை மேடைக்கு கொண்டுபோவது மிகவும் அவசியமான போதும் அவற்றை நாம் வாசிப்பதற்காக அங்கு கொண்டுபோகவில்லை என்பதை உணர வேண்டும். பிரசங்கத்தைப் பலமுறை வாசித்து அதில் நல்ல பரிச்சயம் ஏற்படுகிறபோது தாளில் இருப்பதெல்லாம் மனதில் பதிந்து விடும். சில வேளைகளில் நமது கரங்கள்தான் குறிப்புகளைப் புரட்டினாலும், கண்கள் அதில் பதிந்தாலும் நம்மால் தொடர்ந்து தடையில்லாமல் தயாரித்ததை பிரசங்கிக்க முடியும்.

பிரசங்கக் குறிப்பை பிரசங்க மேடைக்குக் கொண்டுபோவது அவசியமானபோதும் பிரசங்கி, பிரசங்கக் குறிப்புக்கு கட்டுப்பட்டவராக இருக்கக் கூடாது. பிரசங்கக்குறிப்பைக் அவர் தம்முடைய கட்டுக்குள் வைத்திருக்க வேண்டும். கர்த்தர் தம்முடைய மக்களோடு பிரசங்கத்தின் மூலம் பேசுவதற்கு தடையாக பிரசங்கக் குறிப்புகள் அமைந்துவிடக்கூடாது. இதற்காக பிரசங்கி தன்னுடைய பிரசங்கத் திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். அதாவது ஆத்துமாக்களில் தன்னுடைய கண்களைப் பதித்து சரளமாக பேசக்கூடியவிதத்தில் பயிற்சி செய்வது அவசியம். தனிமையில் இருக்கின்ற வேளைகளில் இத்தகைய பயிற்சியில் ஈடுபடுவது பிரசங்கப் பணிக்கு பெரும் துணைபுரியும்.

**பிரசங்கிப்பதற்கு தேவையான கால அளவு**

பிரசங்கி எவ்வளவு நேரம் பிரசங்கிக்க வேண்டும் என்பது முக்கிய கேள்வி. ஒவ்வொரு பிரசங்கியும் வித்தியாசமானவர். கர்த்தரின் படைப்பில் எல்லோருமே ஒரேவிதமாக படைக்கப்பட்டிருக்கவில்லை. சிலருடைய குரல் வளம் திறமையானதாக ஆத்துமாக்களைக் கவருவதாக இருக்கும். அவர்களால் நாற்பத்தி ஐந்து நிமிடத்துக்குப் பேசி ஆத்துமாக்களைச் சலிப்படையாமல் செய்ய முடியும். அத்தகைய குரல்வளமில்லாதவர் தானும் நாற்பத்தி ஐந்து நிமிடத்துக்குப் பேசவேண்டும் என்று துடித்தால் அது ஆத்துமாக்களால் சகித்துக்கொள்ள முடியாதபடி பொய்விடும். ஒருவர்

முப்பது நிமிடத்துக்குப் பேசுவதற்குத்தான் திறமையானவர் என்றால் அவர் அதைக்கூட்டிக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

அத்தோடு, பிரசங்க நேரம் நாம் பிரசங்கிக்கும் பிரசங்கத்துக்கு தக்கதாக வேறுபட்டும் இருக்கும். ஒவ்வொரு பிரசங்கமும் வித்தியாசமானதாக வித்தி யாசமான பகுதிகளில் இருந்தும் அமையும். பழைய ஏற்பாட்டில் இருந்து ஒரு வரலாற்றுப் பகுதியை விவரித்துப் பிரசங்கிக்கும்போதோ அல்லது புதிய ஏற்பாட்டு நிருபங்களில் ஒரு பகுதியை விளக்கிப் பிரசங்கிக்கும் போதோ அல்லது இறையியல் விளக்கத்தை ஒரு தலைப்பில் அடிப்படை யில் பிரசங்கிக்கும்போதோ சிறிது நேரம் அதிகமாகத் தேவைப்படும். அது மட்டுமல்லாமல் ஒவ்வொரு சபையும் வித்தியாசமானதாகவும், ஆத்மீக வளர்ச்சிப்படியில் வித்தியாசமான படிநிலையில் இருப்பதாகவும் இருக்கும். ஒரு சபை மக்கள் பிரசங்கத் தாகம் அதிகமாக இருந்து நீண்ட பிரசங்கங் களுக்கு பழக்கப்பட்டவர்களாக இருப்பார்கள். இன்னொரு சபையில் அதைப் பார்க்க முடியாமல் இருக்கும்.

பிரசங்கத்திற்கான கால அளவைத் தீர்மானிக்கும் இன்னுமொரு அம்சம் எத்தகைய கூட்டத்தில் நாம் பேசுகிறோம் என்பதாகும். பிரசங்கி ஒரு போதகர் கூட்டத்தில் பேசுபவராக இருப்பாரானால் அவர் போதகர் களுக்கு ஏற்றவிதத்தில் பேச வேண்டும். ஏற்கனவே பிரசங்கங்களையும், போதனைகளையும் கேட்டு தங்களுடைய மனதை அதற்குத் தயாராக்கிக் கொண்டுள்ள கூட்டமாக போதகர்கள் கூட்டம் இருக்கும். அத்தோடு, சபை மக்களைவிட அதிகளவு இறையியல் போதனைகளைப் பெறத்தக்க தாக அவர்களுக்கு மனவளர்ச்சியும் இருக்கும். இதனால் போதகர்களுக்கு மத்தியில் நாம் நேரத்தைப் பற்றி அதிகம் கவலைப்பட வேண்டியதில்லை.

சிலவேளைகளில் பிரசங்கி ஒரு பிரசங்கத்தை ஆத்துமாக்கள் சலிப்படை யாதபடி நாற்பத்தி ஐந்து நிமிடத்துக்கும், இன்னொன்றை முப்பது நிமிடத் திலும் கொடுத்துவிட முடியும். ஆகவே, இந்த விஷயத்தில் நாம் ஒரு நிலையான விதியை ஏற்படுத்தி இவ்வளவு நேரத்திற்குத்தான் பிரசங்கிக்க வேண்டும் என்று கூற முடியாது. ஸ்பர்ஜன் பிரசங்கங்கள் மிகவும் நீளமான தாக இருந்துவிடக்கூடாது என்று கூறியுள்ளார். மார்டின் லொயிட் ஜோன்ஸ் நாற்பத்தி ஐந்து நிமிடங்கள் போதுமானது என்று சொல்லியிருக் கிறார். இருவருமே அதற்கு மேலும் பிரசங்கித்தவர்கள். ஆனால், அவர்க ளுடைய பிரசங்கங்கள் என்றைக்கும் எவருக்கும் சலிப்பேற்படுத்தவில்லை. ஒரு மனிநேரத்துக்கு மேல் பேசுவது அதிகம் என்றுதான் கூற வேண்டும். அதுவும் நமது கூட்டங்களில் குழந்தைகளும், வயதானவர்களும் இருப்பார் கள் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. அவர்களால் மிகவும் நீளமான பிரசங்கங்களைத் தாங்கிக்கொள்ள முடியாது. ஆரம்பப் பிரசங்கிகள் முப்பது நிமிடங்களுக்குள் பேச முயற்சித்தால் அவர்கள் பின்பு நேரத்தைத் தங்கள் கட்டுக்குள் வைத்துப் பிரசங்கிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

> புரோடஸ் (Broadus) என்ற அமெரிக்க இறையியல் அறிஞர் கூறுவதைக் கவனியுங்கள், “ஒரு போதகர் தன்னுடைய பிரசங்கத்தை சில வேளைகளில் நீளமானதாகவும், சில வேளை

களில் மிகச் சுருக்கமானதாகவும் தயாரிக்க வேண்டிய நிலை ஏற்படும் என்பதை அறிந்திருப்பது அவசியம். இருபது நிமிடங் களில் அருமையாகக் கேட்பவர்கள் மகிழும்படிப் பிரசங்கிக்க வேண்டிய சில போதனைகள் இருக்கின்றன. அவற்றை நாற்பது அல்லது அதற்கு அதிகமான கால அளவில் பிரசங்கிக்க முயற்சித் தால் அநாவசியமாக தேவையற்ற விஷயங்களை அந்தப் பிரசங் கங்களில் சேர்க்க நேரிடும். அதனால் பிரசங்கம் தன்னுடைய வல்லமையை இழந்துவிட நேரிடுவதோடு கேட்பதற்கும் சலிப் பைத் தருவதாக அமைந்துவிடும்."

நமது சபைகளில் எப்போதுமே குறை கண்டுபிடிக்கும் சிறுதொகையினர் இருப்பார்கள் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. அவர்கள் பிரசங்கம் நீண்டதாக இருந்தாலும் குறைகூறுவார்கள். பிரசங்கம் குறைந்த நேரத்தில் இருந்தாலும் குறைகூறுவார்கள். அவர்களை வைத்து நம்முடைய பிரசங்கத் தகுதியை தீர்மானிக்க நாம் பழகிக் கொள்ளக்கூடாது. அதேநேரம் இந்த உலகத்திலேயே நாம்தான் மிகச் சிறந்த பிரசங்கி என்று நம்மைப் பாராட்டும் ஒரு சிலரும் இருப்பார்கள். நாம் இன்னும் அதிக நேரத்திற்கு பிரசங்கிக்க வேண்டுமென்று அவர்கள் சில வேளைகளில் நம்மை ஊக்கப்படுத்தக்கூடும். ஆனால், சிறுபிள்ளைகளும், வயதானவர்களும் சபையிலிருப்பதை அவர்கள் ஒருபோதும் நினைத்துப் பார்த்திருக்க மாட்டார்கள். இப்படியானவர்கள் சபையில் எப்போதும் வெறும் மைனோரிட்டி மட்டுமே. அவர்கள் சொல்லு வதை வைத்து உணர்ச்சி வசப்பட்டு நம்முடைய தலை வீங்கிவிடாமல் பார்த்துக் கொள்வதும் அவசியம். ஆகவே, பிரசங்கி எப்போதும் தகுந்த கால நேரத்தில் தன்னுடைய பிரசங்கத்தை அளிப்பதில் மிகவும் அக்கறை காட்ட வேண்டும்.

போதகர் அல்பர்ட் என். மார்டின் சொல்லுகிறார், "ஒரு பிரசங்கி மேல் ஆத்துமாக்கள் குறைகூறுவார்களானால் அவர் குறைந்தளவே பேசுகிறார் என்ற குறையை அவர் கொண்டவராக இருக்கட்டும். அவர் நீண்ட பிரசங்கங்களை அளிக்கிறார் என்ற குறைகூறப்படு வதைவிட சுருக்கமாகப் போதிக்கிறார் என்ற குறைகூறப்படுவது நல்லது. சரியான அளவுக்கு நாம் உணவு படைக்கிறபோது சாப் பிடுகிறவர்கள் திருப்தியோடு சாப்பிட்டுவிட்டுப் போகமுடியும். நாம் அவர்களுக்கு தொடர்ந்து விடாமல் உணவைப் படைத்துக் கொண்டிருந்தோமானால் சிறிது நேரத்திற்குப்பிறகு அவர்கள் திருப் திக்கு அப்பாலுள்ள நிலையை அடைந்து மூச்சுத் திணறி உணவை வெறுக்கும் நிலை ஏற்படும்."

ஆத்துமாக்களுக்கு கர்த்தரின் ஆசீர்வாதங்களை அள்ளிக் கொடுத்து, ஆத்துமவிருத்தி ஏற்படுத்துவதற்காக பிரசங்கிகளுக்கு தரப்பட்டிருக்கும் சிறந்த ஆயுதம், கிருபையின் சாதனம் பிரசங்கம். அந்த ஆயுதத்தை எத்தனை தடவை சாணம் பூசி பட்டை தீட்டினாலும் அது நல்லதே. பிரசங்க ஆயுதத்தை நாம் பட்டைதீட்டிப் பயன்படுத்த ஊழியக்காலம் முழுதும் பயிற்சி எடுக்க வேண்டும். பிரசங்கிகளே! செய்வீர்களா?

# எண்ணங்கள்!

இன்றைய தமிழ் கிறிஸ்தவம் போலிப் பாஸ்டர்களால் சீரழிந்து கொண்டிருக்கிறது. இந்த வேளையில் தாங்கள் எழுதி வரும் திருமறைத்தீபம் மற்றவர்களுக்கு சரியான சவுக்கடி தருகிறது. பவுல் கூறுவதுபோல் ஒருவன் போதித்தால் வேதவசனத்தின்படி போதிக்க வேண்டும்.

உங்கள் செய்திகள் வேதவசனத்தின்படி இருப்பது மிகவும் அருமை. ஜனவரி மாத திருமறைத்தீபம் படித்தேன். புறஜாதிப் பண்பாடும் நாமும், கிறிஸ்துவின் சிலுவைப் பலி, எதில் தேவை சீர்திருத்தம், சிக்கலான சில வேதப்பகுதிகள் என்று இப்படி ஒவ்வொரு தலைப்புகளிலும் அவற்றிற்கேற்ற விளக்கங்களைத் தந்திருக்கிறீர்கள். மிகவும் நன்றி.
***- இம்மானுவேல் எலியாஸ், தமிழ்நாடு***

திசையறியாக் கப்பலைப்போல் சென்று கொண்டிருக்கும் தமிழ் கிறிஸ்தவர்கள் வாழ்க்கையில் கலங்கரை விளக்கம் போன்ற திருமறைத்தீபத்தையும், உங்களுடைய அருமையான ஊழியத்தைப் பற்றியும் அறியவந்தேன். தீபத்தின் சில இதழ்கள் வாசிக்கக் கிடைத்தன. சத்திய வாழ்வின் வழியைக் கடைப்பிடிக்காது தவறான வழியில் போகும் கெரிஸ்மெடிக் காரர்களின் உண்மை நிலையை வெளிப்படுத்தி தெளிவான வழியை பத்திரிகை காட்டித் தருவதைக் கண்டு எம் தேவனைத் துதிக்கிறேன். பத்தாண்டு ஊழிய நிறைவை நீங்கள் நினைவு கூர்வதால் கிறிஸ்துவின் நாமத்தில் எனது மனப்பூர்வமான வாழ்த்துக்கள். ***- எஸ். கே. லிங்கம், ஜேர்மனி***

நான் ஒரு வேதாகமக் கல்லூரியில் படித்து வருகிறேன். சக மாணவனிடம் இருந்து திருமறைத்தீபத்தைப் பெற்று வாசித்தேன். முதல் பக்கத்தில் "கொள்கைகளையும், கோட்பாடுகளையும் புறக்கணித்து சத்தியத்தை வெளிப்படையாக எடுத்துக்கூறாத ஒரு பத்திரிகை இலக்கியத் தடங்கல் என்றுதான் கூற வேண்டும்" என்கிற வார்த்தைகள் என்னை சிந்திக்க வைத்தன. முதல் பக்கத்தில் இருந்து கடைசிப் பக்கம்வரை உடனடியாக வாசிக்கத் தொடங்கினேன். எனக்கு மிகவும் பிரயோஜனமாகவும், ஆவிக்குரிய வாழ்க்கைக்கு மிகவும் வசதியாகவும் இருந்தது. பலவிதமான தவறான பத்திரிகை களும், கள்ளப் போதனைகளும் உலவி வரும் இன்றைய சூழ்நிலையில் இப்படிப்பட்ட பத்திரிகைக்காக என் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். சேற்றின் நடுவே ஒரு செந்தாமரை மலருவதுபோல கிறிஸ்தவ பத்திரிகை உலகில் உங்களுடைய பத்திரிகை தனித்த இடத்தை என்னைப் போன்ற வேதாகமக் கல்லூரி மாணவர்களிடத்தில் பிடித்துள்ளது என்று கூறினால் மிகையாகாது.
***- வி. ஆபிரகாம், தமிழ்நாடு***

திருமறைத்தீபத்தை அனுப்பி வைத்ததற்காக நன்றி. நானும் என்னுடைய மாமியாரும் விரும்பிப் படித்தோம். பத்திரிகை ஆரோக்கியமான போதனைகளைத் தருகிறது. நிச்சயம் தமிழ் கிறிஸ்தவர்களுக்கு துணை செய்கிறது. உலகளவில் தமிழர்களுக்கு பத்திரிகை துணைபோக ஜெபிக் கிறோம். பெருங்கூட்டம் போட்டு சுவிசேஷ ஊழியம் என்ற பெயரில் இந்தக் கடைசிக் காலத்தில் போலி ஊழியங்கள் நடந்து வருகின்றன. இவற்றால் ஆத்துமாக்களுக்கு எந்தவித ஆத்மீக ஆசிர்வாதங்களும் கிடைப்பதில்லை. இக்கூட்டங்களில் கொடுக்கப் படும் போதனைகளும் வேதத்திற்கு முரணானவைகள். தொடர்ந்து பத்திரிகையை பெற்றுக்கொள்ள விரும்புகிறோம் ***- டேவிட், பெங்களூர், கர்னாடகா***

# என்று தணியும் இந்தப் பிரசங்கத் தாகம்?

## என்று தணியும் இந்தப் பிரசங்கத் தாகம்!

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்
கவலைகளெல்லாம் கரைந்து போகும்
காணிக்கை கொடுங்கள் நூறுநூறாயென
கனிவாய் பேசினார் பிரசங்கி கூட்டத்தில்
திரும்பத் திரும்பப் பாடும் ரெக்காட்
பெட்டிபோல் இதைத்தான் வருடம் பூராய்
பெரிதாய் பேசுகிறார் வளமாய் வாழும்
வாக்குத்தத்த வண்டவாளப் பிரசங்கி

அற்புதம், ஆசீர்வாதம், காணிக்கை,
உபவாசம், உனக்கு வரும் நன்மையென்று
பிரசங்கிகள் பேசும் பேச்சிலெல்லாம்
இவையே செய்தியாய் இருக்கிறது இன்று
அழகாகப் பாடியும், அவசியப்பட்டபோது
ஒரு சொட்டுக் கண்ணீரும் சுலபமாய்விட்டு
ஆத்துமாக்களை வைத்துப் பிழைக்கும்
அற்பர்களே அதிகம் நம் நாட்டிலின்று

அறுபத்தி ஆறு நூல்களில் இருந்து
அருமையாக விளக்கங்களைத் தந்து
பாவ மன்னிப்பையும், இரட்சிப்பையும்
பல்வேறு இறை போதனைகளையும்
பக்குவமாய் விளக்கிப் பிரசங்கித்து
ஆத்துமாக்களின் ஆத்ம தாகத்தை
ஆவியின் துணையோடு சந்தித்த
சீர்திருத்தவாதிகளெங்கே? இந்தப்போலிகளெங்கே?

பிரசங்கம் இன்று பிரசங்கமாய் இல்லை
பிரசங்கிகளும் நற்குணங்கொண்டார் இல்லை
மாநிலத்திற்கொரு மார்டின் லூதரும்
மலை போன்றதொரு ஜோன் நொக்ஸூம்
சிங்கமாய்க் கர்ஜிக்கும் கல்வின் ஐயரும்
ஏன் இன்று நம் நாட்டில் இல்லை?
என்று தணியும் நம் பிரசங்கத் தாகம்
இந்நாட்டில் மெய்ப் பிரசங்கிகளால்

சு.பி.




மலர் 11 ஏப்ரல் - ஜீன் 2005 இதழ் 2

1. சுனாமியின் அடையாளம்

2. திருமண வயதில் . . .

3. சீயோன் மலையும், அண்ணாமலையும்

4. கிறிஸ்துவின் வழியில் திருச்சபை ஊழியம்

5. சாம்பார் இறையியல் ஊழியம்

6. விசுவாசம் எனக்கு விபச்சாரம் அல்ல (கவிதை)

7 சிக்கலான சில வேதப்பகுதிகள்

8. பெண்கள்! பெண்கள்!

9. கத்தோலிக்க மதத்திற்கெதிரான கடும் எதிர்ப்பு

10. கிறிஸ்தவ கோட்பாடுகள்

11. பிரசங்கிக்கும்போது . . .

12. எண்ணங்கள்!

13. என்று தணியும் இந்தப் பிரசங்கத் தாகம் (கவிதை)

Terau Print